# உதயன்

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24 ■ சுடர்: 28 ■ கதிர்: 322 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | புரட்டாதி 28, செவ்வாய் 15.10.2013




மழைக்கான சாத்தியம் உண்டு.

27°c 26°c

## பயங்கரவாதத்தை ஒடுக்குவது அடிப்படை உரிமை மீறல் அல்ல

### நிமலரூபனின் வழக்கை தள்ளுபடி செய்து உயர்நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஒக்.15

பயங்கரவாதத்தை ஒடுக்குவது அடிப்படை உரிமைமீறல் ஆகாது என்று பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் நேற்று உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

வவுனியா சிறைச்சாலையில் நடந்த மோதலின் போது உயிரிழந்த தமிழ்க் கைதி நிமலரூபனின் பெற்றோர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்தது.

இந்தத் தீர்ப்பின்போதே பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

"சிறைச்சாலையில் கலவரம் ஏற்பட்டால் அதனைக் கட்டுப்படுத்தும் போது இவ்வாறான உயிரிழப்புகள் ஏற்படுவதைத் தடுக்க முடியாது. இது போன்ற வழக்குகளைத் தொடர்ந்து விசாரணை செய்வதன் மூலம் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் வெளிநாடுகளில் அரசியல்

21

## யாழ். நிலைமைகளை ஆராய்ந்தார் தளபதி

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்த இராணுவத் தளபதி லெப்டினென்ட் ஜெனரல் தயா ரத்நாயக்கா பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் படையினரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட பின்னர், அவர் யாழ்ப்

21



# வடக்கு அமைச்சர்கள் நேற்று கடமையேற்பு



கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டு, இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா.



விவசாயமும், கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கர நேசன்.





சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம்



மீன்பிடி, போக்கு வரத்து, கைத்தொழில், வர்த்தகம், கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குள் உள்ள வடக்கு மாகாண சபையின் நான்கு அமைச்சர்களும் நேற்றுத் திங்கட்கிழமை தமது கடமைகளை யாழ்ப்பாணத்திலுள்ள அலுவலகங்களில் உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றனர்.

விவசாயமும், கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன், யாழ். புரூடி வீதியிலுள்ள அமைச்சின் அலுவலகத்தில் முற்பகல் 10.30 மணிக்கு தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றார்.

கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டு, இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா, யாழ். செம்மணி வீதியிலுள்ள அமைச்சின் அலுவலகத்தில் காலை 10.45 மணிக்கு தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம், யாழ். பண்ணையில் அமைந்துள்ள மாகாண சுகாதார அமைச்சின் அலுவலகத்தில் முற்பகல் 11 மணிக்கு தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றார்.

இதேவேளை, மீன்பிடி, போக்குவரத்து, கைத்தொழில், வர்த்தக வாணிப முயற்சி, கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன், யாழ். நல்லூர் செட்டித்தெரு வீதியிலுள்ள அமைச்சின் அலுவலகத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப் பேற்றுக்கொண்டார்.

இந்தக் கடமையேற்பு வைபவங்களில் அந்தந்த அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், உயரதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தப் கடமையேற்பு வைபவங்களில் அந்தந்தத் துறைக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள மாகாணசபை உறுப்பினர்களும் பங்கேற்றனர். (கு-5-4-10-14-17-86)

## சரியான தலைமை இல்லாமையால் மக்கள் குறை தீர்க்க முடியவில்லை

### வடக்கு விவசாய அமைச்சர் முன் அதிகாரிகள் குமுறல்

யாழ்ப்பாணம், ஒக்.15

சரியான அரசியல் தலைமைத்துவம் இன்மையால் மக்களின் தேவைகளை எம்மால் இது வரை ஒழுங்கான முறையில் நிறைவேற்ற முடியவில்லை என்று அமைச்சர் முன்னிலையில் குமுறினார்கள் அரச திணைக்களத்தின் தலைவர்கள். வடக்கு மாகாண விவசாயமும், கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், சுற்றாடல் அமைச்சின் அலுவலகத்தில் திணைக்களத் தலைவர்களுடன் அமைச்சராகப் பதவியேற்றுக்கொண்ட பொ.ஐங்கரநேசன் நடத்திய கலந்துரையாடலிலேயே அதி காரிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

21

## உறுப்பினர்கள் ஐவர் நேற்று பதவியேற்பு



யாழ்ப்பாணம்.ஒக். 15

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் 5 பேர் நேற்றுத் திங்கட்கிழமை பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களின் பதவியேற்பு வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் புளொட் உறுப்பினர்கள் இருவர் உட்பட 9 பேர்

21

## பெப்சி, கோக்குக்குத் தடை விவசாய அமைச்சர் அதிரடி

யாழ்ப்பாணம், ஒக்.15

வடக்கு மாகாண அமைச்சர் களின் நிகழ்வுகளிலோ, கூட்டங்களிலோ 'பெப்சி', 'கொக்கா கோலா' போன்ற வெளிநாட்டு மென்பானங்கள் பயன்படுத்தக் கூடாதெனவும் உள்ளூர் பழரசங்களே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் தனது அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர் அதிர

21

## யாழில் நேற்று மட்டும் 330 முறைப்பாடுகள்

### காணாமற்போனோர் தொடர்பில்

யாழ்ப்பாணம்.ஒக். 15

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற காணாமற் போனோரைப் பதிவு செய்யும் நடவடிக்கையின்போது 330 பேர் வரையில் பதிவுகளை மேற்கொண்டுள்ளதாகவும். இன்றும் யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் இந்த நடவடிக்கைகள்

21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கு நாளை மணிவிழா

யாழ்ப்பாணம், ஓக்.15
கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் புகழ்பூத்த அதிபர்களில் ஒருவரும், தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணி ஆற்றியவருமான ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியின் மணி விழா நாளை காலை நடைபெற உள்ளது.
நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகும் பாராட்டு விழாவுக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமை வகிப்பார். இவ்விழாவை அவரது பழைய மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். (அ)

## அனர்த்த முன்னெச்சரிக்கை மாதகலில்

"இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு

யாழ்ப்பாணம், ஓக்.15
சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள மாதகல் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் அனர்த்த முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சிச்செயற்பாடுகளும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளன.
அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரால் மேற்கொள்ளப்படும் இந்த ஒத்திகை நிகழ்வு தொடர்பில் பொதுமக்கள் குழப்பமடையாமல் அமைதியாக இருக்குமாறு யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கேட்டுள்ளார். (த-400)

# தேசிய, சுயநிர்ணய உணர்வோடு ஒவ்வொரு நகர்வும் அமையும்

### வடக்கு விவசாய அமைச்சர் உறுதி

யாழ்ப்பாணம், ஓக்.15
எமது மக்களின் வாழ்வாதாரங்களைக் கட்டியெழுப்புகின்ற நிலையான அபிவிருத்தி என்பது, அரசியற் சுதந்திரத்திலேயே தங்கியுள்ளது. இந்த சுதந்திரம் வடக்கில் தேசியம், சூழலியம், சுயநிர்ணயம் என்ற உன்னதமான இலட்சியங்களைக் கொண்டு அமையவேண்டும். இதன்மூலமே தமிழ் மக்கள் பிரச்சினை தீரும் என்று வடக்கு மாகாண அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் புரூடி ஒழுங்கையில் அமைந்துள்ள விவசாயம், கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சின் அலுவலகத்தில் நேற்றுக் காலை 10.20 மணிக்கு பூசை வழிபாடுகளின் பின்னர் தனது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:
அமைச்சுப் பதவி மலர் தூவிய சிம்மாசனம் அல்ல. அபிவிருத்தி என்ற பொய்மைத் தோற்றத்தைக் காட்டி, நிலவளம், நீர்வளம் என்பவற்றை, அழித்து எமது செழுமை நிறைந்த மண்ணைச் சுடுகாடாக்கும் முயற்சிகளையே தென்பகுதி அரசியல்வாதிகள் செய்ய முற்படுகின்றனர்.
எமது குடியிருப்பு நிலங்களும், விவசாய பூமியும், செழிப்பான காடுகளும் வெவ்வேறு வகையான திட்டங்களாலும், சட்டங்களாலும் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.
இப்படியான சூழலில் அமைச்சுப் பணிகளைப் பொறுப்பேற்றிருக்கும் எனக்கு, இந்தப் பணிகளை முன்னெடுப்பது என்பது பெரும் நெருப்பாற்றை நீந்திக் கடப்பதற்கு ஒப்பானது.
எமது இயற்கை வளங்களைப் பாதுகாப்பது என்பதும், எமது மக்களின் வாழ்வாதாரங்களைக் கட்டியெழுப்புகின்ற நிலையான அபிவிருத்தி என்பதும் அரசியல் சுதந்திரத்திலேயே சாத்தியமாகும்.
இந்தப் பயணத்தில் நான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் தேசியம், சூழலியம், சுயநிர்ணயம் என்ற உன்னதமான இலட்சியங்கள் இழையோடும். அவை கடந்தகால அனுபவங்களில் கற்றுக்கொண்ட பாடங்கள் மூலம் மேலும் மேலும் புடம் போடப்பட்டுப் புதிய வீச்சுடன் முன்னெடுக்கப்படும் - என்றார். அமைச்சின் செயலாளர் எம்.றால்டீன் மற்றும், செயலாளர் எல்.இளங்கோவன், திணைக்களத் தலைவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ஐ-5)

# குறைபாடுகளை நீக்கி அபிவிருத்தி செய்வோம்

### வடக்கு மீன் பிடி அமைச்சர்

யாழ்ப்பாணம், ஓக். 15.
மாணவர்களது கல்வி வறுமை நிலையால் பாதிக்கப்படக் கூடாது. அண்மையில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் மீனவர்கள் பலர் தமது தொழிலையே இழந்துள்ளனர். அவர்களுக்கான இடர் கொடுப்பனவு காலம் தாழ்த்தப்படாது வழங்கப்பட வேண்டும். இதுபோன்று எனது அமைச்சின் கீழ் உள்ள சகல துறைகளிலும் உள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து, பூர்த்தி செய்வதே எனது நோக்கம். இவ்வாறு தெரிவித்தார் மீன்பிடி, போக்குவரத்து, கைத்தொழில், வர்த்தக வாணிபம் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் பா டெனிஸ்வரன்.
நல்லூர் குறுக்குத் தெருவில் உள்ள உட்கட்டமைப்பு அமைச்சுச் செயலகத்தில் அவர் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.
இதன் பின்னர் அங்கு செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த போது அவர் மேலும் தெரிவித்ததாவது
அண்மையில் ஏற்பட்ட கால நிலை மாற்றத்தால் கரையோர மக்களின் மீன்பிடி உபகரணங்கள் பலத்த சேதமடைந்துள்ளன. அவர்களுக்கான இடர் கொடுப்பனவை இடர் முகாமைத்துவப் பிரிவுடன் தொடர்பு கொண்டு, வழங்கு வதற்கான நடவடிக்கையை முதலமைச்சர் எடுப்பார். அந்த மக்கள் இப்போது ஒரு நேர உணவைப் பெறக் கூட கஸ்டப்படுகின்றார்கள்.
முல்லைத்தீவு மக்கள் தமது மாவட்டத்தவர்களுக்கு ஒரு அமைச்சுக் கூட கிடைக்கவில்லையே என்று வருந்தினர் ஆனால் நான் அங்கு சென்று அவர்களுடன் கலந்துரையாடிய போது, அவர்கள் அந்தக் குறையைக் கவனத்தில் கொள்ளவில்லை.
அபிவிருத்தி முக்கியம் அனால் அதற்காக உரிமைகளை விட்டுச் செல்ல முடியாது. மக்கள் ஒற்றுமையை வெளிப்படுத்தி உள்ளார்கள் நாம் சிறப்பாக எமது செயற்பாடுகளை முன்னெடுப்போம் என்றார். (ஐ-4)




யாழ். பிரதான வீதியில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் ஓட்டோவும் மோதி விபத்துக்குள்ளாகின. குருநகர் யாகப்பர் ஆலயத்துக்கு முன்பாக இந்த விபத்து இடம்பெற்றது. இதனால் இரு வாகனங்களும் சேதத்துக்குள்ளாகின. (த-20)

# சுகாதார சேவையை மேம்படுத்த வேண்டும்

### வடக்கு சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக். 15
வடமாகாணத்தின் சுகாதாரத் துறையில் தற்போது நிலவுகின்ற ஆளணிப் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட வேண்டுயதே தற்போதைய தேவை. இதனை வடக்கு மாகாண சபையின் அதிகாரத்தைக் கொண்டு முதற் கட்டமாகப் பெற்றுத்தர வேண்டும்.
இவ்வாறு கோரினார் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்.
வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கத்தின் பதவியேற்பு நிகழ்வு நேற்று திங்கட் கிழமை பண்ணையில் உள்ளள சுகாதாரப் பணிமனையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே சுகாதாரப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் கூறியதாவது:
வவுனியா மாவட்டத்தில் சுகாதாரத் துறையில் நீண்டகாலம் தேர்ச்சியுடைய தகுதியுடைய ஒருவர் சுகாதார அமைச்சராக தெரிவு செய்யப்பட்டமை, சுகாதாரத்துறைக்கு கிடைத்த வெற்றி.
ஏனைய எட்டு மாகாணங்களைவிட வடக்கு மாகாணத்தில் சுகாதாரம் சார் அபிவிருத்தி கள் தனிப்பட்டதாக தேவைப்படுகிறன.
குறிப்பாக வடக்கு மாகாணத்தில் நகர்ப் புறங்களில் உள்ள வைத்தியசாலைகள் ஓரளவு வசதிகளுடன் செயற்பட்டாலும் கிராமப் புற வைத்தியசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியுள்ளன.
ஏனைய மாகாணங்களுக்கு முன்னுதாரணமாக எமது மாகாணத்தின் சுகாதாரசேவை அமைய வேண்டும்- என்றார். (த-14-10)

# சர்வதேச கூட்டுறவாளர்தினம் முல்லைத்தீவில் நாளை

முல்லைத்தீவு, ஓக்.15
91 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினம் நாளை முற்பகல் 10 மணிக்கு வள்ளிபுனம் சரஸ்வதி கல்யாண மண்டபத்தில நடைபெறவுள்ளது.
முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் சி.நாகேந்திரராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு சங்க அங்கத்தவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், முல்லைத்தீவு மாவட்ட கல்விக் கோட்ட பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட பேச்சு, கவிதை, கட்டுரை, வினாடிவினா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.
இதேவேளை, 2013ஆம்ஆண்டுகளுக்கான சிறந்த சங்கங்ளுக்-கான பரிசில்களும் வழங்கப் படவுள்ளன.
இதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், இரண்டாம் படி கூட்டுறவுச் சங்கங்கள், சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், நன்னீர் மீன்பிடிச் சங்கங்கள், பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற சங்கங்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளதாக நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

# பொதுநல நோக்குடன் மக்கள் சேவை தொடரும்

### வடக்கு சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம்

யாழ்ப்பாணம், ஓக். 15
வடக்கில் தமிழ் மக்களது தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதே எமது இலக்கு. இந்த இலக்கை வடமாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்கள் ஊடாக பொது நோக்குடன் எமது பொறுப்புக்களை நிறைவேற்றுவோம்.
இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண சபையின் சுகாதார சேவை சுதேச மருத்துவத்துறை அமைச்சர் ப. சத்தியலிங்கம்.
வடக்கு மாகாண சபைக்கான அமைச்சர்களின் பதவியேற்பு நிகழ்வு நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது. இதில் சுகாதாரத் துறை அமைச்சராகத் தெரிவு செய்யப்பட்ட அமைச்சர் ப. சத்தியலிங்கம் பண்ணையில் உள்ள திணைக்கள அலுவலகத்தில் வைபவ ரீதியாகப் பதவியேற்றுக் கொண்டு சிறப்புரை நிகழ்த்தும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது;
எமக்காக வாக்களித்து எம்மைத் தெரிவு செய்த மக்களது தேவைகளையும், பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க வேண்டியது எமது கடமை. 2009 ஆம் [illegible] மக்களுக்கு பலன்தரக் கூடிய அபிவிருத்திகள் சில இடம்பெற்றாலும் பல முக்கிய துறைகளில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது. குறிப்பாக சுதேச வைத்தியத் துறைகளுக்கு கிடைக்கக் கூடிய நிதி முதலீடுகள் மிகக் குறைவாகவே உள்ளன. சுதேச மருத்துவத்துறையானது எமது முன்னோர்களால் வெற்றிகரமாக பாதுகாக்கப்பட்ட துறை. இதனை நாம் அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. வடமாகாணத்தின் சுதேச மருத்துவத்துறையை அபிவிருத்தி செய்யவதற்கான செயற்பாடுகளை எமது அமைச்சரவை மேற்கொள்ளும்.
இதற்கென மாகாண அமைச்சரவைக்கு கடமைகளும், பொறுப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன. இதனை கட்டாயமாக நிறைவேற்றிக் கொடுப்போம். 30 வருட காலமாக நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தின் போது எமக்கான கல்வி, கலா சாரம், பண்பாடு எமது சொத்துக்கள் என பலவற்றை இழந்து இருக்கின்றோம்.
மாகாண சபையை ஆரம்பப் புள்ளியாக வைத்து எமக்கான தேவைகளை நிறை[illegible] என்றார். (ஐ-14-10)

# கிளிநொச்சி வீதிகளின் மின் விளக்குகள் துண்டிப்பு

### கட்டணம் செலுத்தாமையே காரணம்

யாழ்ப்பாணம், ஓக். 15
மின்சாரக் கட்டண நிலுவைகள் செலுத்தப்படாமையால் கிளிநொச்சி நகர வீதிகளில் பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகளுக்கான மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. இதனால் நகரம் இருளில் மூழ்கியுள்ளது.
கிளிநொச்சி ஏ-9 வீதியில் டிப்போச் சந்தி முதல் கரடிப் போக்குச் சந்தி வரை பொருத்தப்பட்ட மின் விளக்குகளுக்கான மின்சாரக் கட்டணம் 3 லட்சம் ரூபாவைத் தாண்டியுள்ளது.
இந்த நிலுவையைச் செலுத்துவதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுக்காததை அடுத்துச் சகல மின் இணைப்புகளும் கடந்த 3 ஆம் திகதி முதல் துண்டிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.
நிலுவையாகவுள்ள கட்டணத்தை மீளச் செலுத்துவதற்கு சபை வருமானம் போதாது என்று பிரதேச சபை நிர்வாகம் தெரிவித்துள்ளதுடன் இவ்வீதியில் பொருத்தப்பட்டுள்ள குறிப்பிட்ட ஒருசில மின் விளக்குகளை நிறுத்தி ஒரு சில விளக்குகளை ஒளிரச் செய்வதன் மூலம் மின்கட்டணத் தொகையை குறைத்துக் கொள்ள முடியும் ஏன்று மேலும் தெரிவித்துள்ளது. (த-6-400)

ABI BABY MART

யாழ் மழலைகளின் சாம்ராஜ்ஜியம்
தீபாவளியை முன்னிட்டு
விசேட விலைக் கழிவு 20% & 30% வரை

- பாங்கொக் ஆடைகள்
- விளையாட்டுப் பொருள்கள்
- கர்ப்பிணிப் பெண்களுக்கான ஆடைகள்
- மற்றும் சகலவிதமான பொருள்களையும்



ஒரே கூரையின் கீழ் பெற்றிட நாடுங்கள்.
267, Brown Road, Jaffna.
(கலட்டிச் சந்திக்கருகில்)
(C/12870) (7,6,3)

கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரரின்
தீபாவளியை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை

புதிய வரவுகள்...

| | |
|---|---|
| ★சல்வார் | - 1200/- தொடக்கம் |
| ★கொட்டன் சாறி | - 450/- தொடக்கம் |
| ★ஆண்களுக்கான சேட் | - 390/- தொடக்கம் |
| ★பெண்களுக்கான ரொப் | - 400/- தொடக்கம் |

இன்னும் பலவிதமான ஆடைகளையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள...

114, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
(32693-23-14) 021 221 9393

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "செய் அல்லது செத்து மடி" இதையே மனதில் நிறுத்துக

## பதவி ஏற்பில் அமைச்சர் குருகுலராஜா



யாழ்ப்பாணம், ஒக்.15

"உன்னால் முடிந்தால் செய்; அல்லது செத்துமடி" என்ற வாசகத்தை உங்கள் மனக் கண் முன் தினமும் வையுங்கள். எமது பூமி சுதந்திரக் காற்றை உள்ளேயும் வெளியேயும் இழுத்துவிட வைக்க நீங்கள் தயாராகுங்கள் என நிகழ்வில் அமர்ந்திருந்த பிரமுகர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார் வட மாகாண கல்வி, கலாசார அலுவல்கள் விளையாட்டு, இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா.

செம்மணி வீதியிலுள்ள அமைச்சின் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை தமது கடமைகளைப் பதவியேற்றுக் கொண்டார். தனது பதவியேற்புரையின் போதே மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈழத்தமிழர் வரலாற்றில் தடம் பதித்துள்ள 2013 இல் நாம் இன்று கூடியிருக்கின்றோம். நாடோடிகளாகத் திரிந்து பின் கூடி வாழ்ந்து, எமக்கென்று தனியடையாளத்துடன் ஈழத் தமிழர் என்ற பெயரைப் பெற பல நூற்றாண்டுகள் நாம் எமது மண்ணிலே வாழ்ந்து, கடல் கடந்த நாடுகளுடன் தொடர்பை ஏற்படுத்தி எமது கல்வி, கலை, பண்பாடு, வாழ்வியல் கோலங்களை மற்றையவர்கள் அறியும் படி வெளிப்படுத்தி இந்தப் பூவுலகில் தமிழர்களாக வாழ்ந்து காட்டியுள்ளோம்.

மேற்கத்தேயவர் எமது நாட்டைக் கைப்பற்றி ஆண்ட வேளை நாம் அவர்களை எதிர்த்தோம். அதேவேளை அவர்களின் கல்விக் கொள்கைகளை அனுமதித்து அதன் பால் எமது இனம் மேலோங்க வேண்டும் என்பதை எமது மூதாதையர் உணர்ந்து கொண்டதனால் தமிழ்க் குழந்தைகளை கல்வியின் மேல் மோகம் கொள்ள வைத்தோம். இதனால் மொழி, சுயபண் பாட்டறிவு, தனித்துவ வாழ்வியல் பழக்க வழக்கங்கள் கொண்ட குடிகளையும் சிந்தனையாளர்களையும் நாம் எம் மண்ணில் உருவாக்கினோம். எமது மொழி, சமயம், பண் பாடு ஆகியவை வலுவிழந்து விடாதபடி எமது முன்னோர்கள் கட்டிக்காத்துள்ளனர். தெற்காசியாவிலேயே இடைநிலைக்கல்வி எமது மண்ணிலே ஓங்கி வளர்ந்திருந்ததை 50 ஆண்டுகளுக்கு முன்னதாகவே உலகறியச் செய்தவர்கள் எமது முன்னோடி ஈழத்தினர்.

இன்று இலங்கை சுதந்திரமடைந்து 65 ஆண்டுகளும் 8 மாதங்களுக்கும் பின்னதாகப் புகழ்பூத்த யாழ்.கல்வி மண்ணிலே குறைந்த அதிகாரப் பரவல் உள்ள ஒரு சிற்றரசின் கல்வி அமைச்சராக இன்றைய புனித நாளிலே நான் கடமை ஏற்றுள்ளேன். பள்ளிக் கல்வியிலே மகுட நிலையில் இருந்த எமது மாநிலம் இன்று எல்லோர் உதட்டிலும் உதாசீன மாகப் பேசப்படும் பொருளாக மாறியுள்ளது.

பாடசாலைகளின் அலங்கார அபிவிருத்தி, மாணவர்களின் பண்பாட்டு நிலையறியாப் போக்கு, பெற்றோர்களின் போட்டி மனப்பாங்கு, எமது சமூகத்தின் விழிப்பற்ற கண் ணோட்டம், நண்பர்களின் அட்டகாசம், கல்வியியலாளர்களின் குறுகிய வெளிப்படையற்ற நோக்கம், ஆசிரியர்களின் தனியாள் அபிவிருத்தி மோகம், அதிபர்களின் மேலாண்மை, அரசியல் வாதிகளின் அதிரடி ஆதிக்கம் இவையாவும் ஒன்று சேர்ந்து சுழன்று எமது கல்விப் புலத்தின் வளர்ச்சிக் குறைவுக்கு உரமூட்டியுள்ளன.

இந்தக் கல்வி வளர்ச்சிக் குறைபாட்டின் காரண கர்த்தாக்களினுள் நானும் ஒருவன். தற்போது எனது கடமை ஏற்றலின் பின்னர் இந்தக் குறைபாட்டின் பிரதம காரணியாளனான என்னைத் தங்கள் மதிப்பான வாக்குகளால் தேர்ந்தெடுத்த மக்கள் முன்னுரிமைப்படுத்தக் கூடும். இப்படியான சூழ்நிலையிலேயே இன்று நான் கடமை ஏற்றுள்ளேன்.

கல்வியின் உச்சம் வட கிழக்கின் சுபீட்சம் என்றும் கல்வியின் தாக்கம் வடகிழக்கின் மீட்சியின் சின்னமாக மாற வேண்டும் என்பதே எனது விருப்பு. சின்ன ஆசைகள் எல்லோர் மனதிலும் உண்டு. ஆசையின் உச்சம் எம்மை அழிக்கக்கூடியது. ஆசை வார்த்தைகள்காட்டி எம் பள்ளி முதல்வர்களை தன் மானம் இழந்த தமிழர்களாக உருவாக்க முனைகின்றனர். தன்மானத்தை இழந்தவர் தமிழ் மானிடனாக இருக்க முடியுமா? தன்மானத்தை இழந்த தமிழனும் தமிழிச்சியும் தமிழர் வரலாற்றில் தன் மானம் இழந்தவனாகவோ அல்லது தன் மானத்தினை இழந்தவளாகவோ கணிக்கப்படுவார்.

இங்கு குழுமியிருக்கும் எம்மவருள் எத்தனை பேர் தமிழ் அன்னையை தமது மனதில் பூசித்து, தமிழே தமது வாழ்வு என்று மனதார எண்ணியுள்ளோம்? எனது மொழி, எனது இருப்பிடம், நான் பிறந்த மண், எனது உரிமை, பூமிப் பந்தில் ஈழத்தினர் தனித்துவ மானவர்கள் என்று எத்தனை பேர் எண்ணியுள்ளோம். வாழ்நாளில் எமது பணிகளையும் செயல்களையும் இதற்காக எத்தனை பேர் ஆற்றியுள்ளோம். இதனைப் பாடசாலைகளிலே வெளிப்படுத்துபவர்கள் யாராக இருக்க முடியும் என்பதை இங்குள்ளவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்தச் சிந்தனையை எனக்குள்ளே புதைத்தவர்கள் குடிசையில் வாழ்ந்து அடுத்த வேளை உணவு எங்கே என்று எங்கித் தவிக்கும் மக்கள். போரின் வடுக்களை நிதம் சந்தித்து சகித்துக் கொள்ளும் மக்கள் எல்லாம் இழந்த பெண் குலம், தாய் தந்தைப் பாசமற்ற குழந்தைகள், வாழ்க்கை இனி எங்கே என்று ஏங்கும் நெஞ் சங்கள், பல காரணங்களுக் காக வாழ்வின் விளிம்பில் ஊசலாடும் மக்கள், மனதை உருக்கும் இந்த மண்டபத்தில் இருப்பவர்களும் உங்கள் உரிமை வாக்கை தமிழ் அன்னைக்கு சமர்ப் பணம் ஆக்கியிருப்பீர்கள் என்பது எனது உறுதியான நம்பிக்கை. சூழ்ச்சிகளும், வெட்டிப் பேச்சுக்களும், வெட்டியாளும் தன்மையும் கொண்ட காலகட்டத்தில் தமிழ் இறைமை மக்கள் மத் தியிலே உள்ளது என்பதனை நாம் மறந்திடலாகாது. எதற்கு மோர் அளவுண்டு. எந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டும் என்பதனை எம்மினிய மொழியை தம் தாய்மொழியாகக் கொண்டவர்களில் சிலர் பல வேளைகளிலே மறந்து போகின்றார்கள். எந்தப் தராசில் நிறையுண்டோ அந்தப் பக்கம் சாய்கின்றார்கள். அவர்களால் முழு இறைமையும் கொண்ட எம்மக்கள் ஊசலாடுகின்றனர். இதற்கெல்லாம் தகுந்த பதிலை இறையாண்மை மிக்கவுள்ள எம் மக்கள் 2013 வடமாகாண சபைத் தேர்தவின் மூலம் அதிரடியாக வழங்கி எமது சிந்தனைகளை உலுப்பியுள்ளார்கள். இம்மக்களின் ஒவ்வொரு வாக்கும் இறையாண்மையை மறந்தோர் மீது வேட்டுகளாகச் செலுத்தப்பட்ட வாக்குகளாகவே நான் உணர்கின்றேன்- என்றார்.

(வ-4)

# பருத்தித்துறை-கொழும்பு சேவைக்கு இரு பஸ்களை சேவையில் ஈடுபடுத்துக

## பயணிகள் கோரிக்கை

வரணி, ஒக். 15

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலையினரால் கொழும்பு புறக்கோட்டையில் இருந்து பருத்தித்துறை வரை நடத்தும் இரவு 9 மணி நேர பயணிகள் சேவையில் இரண்டு பஸ்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என பயணிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் இருந்து கொழும்புக்குச் செல்லும் இரவு நேர பஸ்ஸே அங்கு தரித்து நின்று மீண்டும் மேற்குறிப் பிட்ட இரவு நேர பஸ் பயணிகள் சேவையில் ஈடுபடுகின்றது.

கொழும்புக் கோட்டை பஸ் நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரை உள்ள பயணிகள் சேவையில் பல பஸ்கள் சேவையில் அமர்த்தப்படும் நிலையில் பருத்துறை வரை இரவு நேர சேவையில் ஒரு பஸ் மட்டும் சேவையில் ஈடுபடுகின்றது.

கொழும்பில் இருந்து பருத்தித்துறை வரை சேவையில் ஈடுபடும் பஸ் வெள்ளவத்தையில் இருந்து வரும் போது அங்கு ஏறும் பயணிகளால் பஸ் நிரம்பிய நிலையில் கொழும்பு கோட்டை பஸ் நிலையத்தை வந்தடைகின்றது.

அதேவேளை, குறித்த பஸ்ஸில் பயணிப்போரில் பலர் கொழும்பு கோட்டையில் பஸ் ஏறும் பயணிகளுக்கு உதவும் நோக்கில் முற்கூட்டியே பதிவு செய்து வருகின்றனர். இவ்வாறு வருவோரில் பலர் தமது பொதிகளை இருக்கைகளுக்கு அருகில் வைத்துக் கொண்டு வருவதுடன் கொழும்பு கோட்டையில் ஏறும் பயணிகளுக்கு அந்த இருக்கைகளை விட்டுக் கொடுக்காத நிலையில் குறித்த நபர்கள் பஸ்ஸில் ஏறியதும் அவர்களுக்கு இருக்கைகளைக் கொடுக்கின்றனர்.

அதேவேளை, வெள்ளவத்தைப் பகுதியில் ஏறும் பஸ் பயணிகளுக்கு கொழும்பு கோட்டை பஸ் நிலையத்திலேயே பஸ் வழி பற்றுச்சீட்டு உரிய நடத்துநர்களால் வழங்கப்படுகின்றது. இவ்வாறான இருக்கைகளைப் பிடித்துக் கொடுக்கும் நபர்களின் நடவடிக்கை பற்றி உரிய பஸ் நடத்துநருக்கும் தெரியும், ஆனால் அவர்கள் கொழும்பு கோட்டையில் ஏறும் பயணிகளுக்குரிய இருக்கை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் இல்லை. கண்டும் காணாத வகையில் அவர்கள் நடந்து கொள்கின்றனர்.

இதேவேளை, கொழும்பு கோட்டை சாலை நிர்வாகத்தினரால் அதிகமாக பெரும்பான்மை மக்களின் வசதி கருதி அங்கிருந்து தம்புள்ள, மிகிந்தலை வழியாக யாழ்ப்பாணத்துக்கு நான்குக் மேற்பட்ட அரை சொகுசு வசதி உள்ள பஸ் சேவையும் நடத்தப்படுகின்றது.

அதேவேளை- அவர்கள் பருத்தித்துறை வரை எந்த வித சேவையும் நடத்துவதில்லை. சிலவேளை கொழும்பில் இருந்து பருத்தித்துறை வரை பயணம் செய்யும் பயணிகளில் பெரும்பாலானோர் நின்று கொண்டே பயணிக்கும் நிலையும் உள்ளது. எனவே, மேற்குறித்த பருத்தித்துறை சாலையின் கொழும்பு புறக்கோட்டை சாலையினர் குறித்த பருத்தித்துறை செல்லும் பயணிகளின் வசதிகருதி இரண்டு பஸ்களை பருத்தித் துறை மார்க்கத்தில் ஈடுபடுத்த ஆவன செய்ய வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ)



விஜயதசமி தினமான நேற்று குடாநாட்டு ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் பொதுஇடங்களில் சிறுவர்களுக்கு வித்தியாரம்பம் (ஏடு) தொடக்கி வைக்கப்பட்டது. யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் அதிபர் எஸ்.தர்மசீலன் தலைமை யில் சிறுவர்களுக்கு ஏடு தொடக்கும் நிகழ்வு இடம்பெற்றது. (வ-17)

# வரணியில் டெங்கு ஒழிப்புச் செயற்பாடு

வரணி, ஒக். 15

வரணிப் பிரதேசத்தில் தேசிய டெங்கு நோய் ஒழிப்புத் திட்டம் சனிக்கிழமை முழுமையாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொது பொதுசுகாதார பரி சோதகர்கள் மற்றும் பணியாளர்கள் குறித்த வேலைத் திட்டத்தில் கலந்து கொண்டனர்.

அவர்கள் குழுக்களாகப் பிரிந்து வீடு வீடாகச் சென்று சுற்றாடல்களைப் பரிசோதித்துடன் டெங்கு நோய் தொடர்பான பிரசாரங்களை முன்னெடுத்தனர்.

குறித்த பிரதேச கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்வாங்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சாவகச்சேரி பிரதேச [illegible] உப அலுவலக [illegible] ஆகியோர் ஈடுபட்டனர். (வ-122)

# மிளகாய் செய்கை நெடுந்தீவில் தீவிரம்

யாழ்ப்பாணம், ஒக். 15

நெடுந்தீவில் மிளகாய் உற்பத்தியை அதிகரிக்க விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கென ஐம்பது விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொருவரும் 4 பரப்புக் காணிகளில் மிளகாய்ச் செய்கையில் ஈடுபடக் கூடியதாக எம்.ஐ.கிறீன் இன மிளகாய் விதைகள் விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

குறித்த மிளகாய் விதை நாற்றுப் பெற்றுக் கொள்வது குறித்த பயிற்சிகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. (வ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### பெனடிற் யூரிசௌந்தரராஜன் (சந்திரன்)

(சகானா சலூன் முன்னாள் உரிமையாளர், விநோஜ் சலூன் உரிமையாளர்)



ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட பெனடிற் யூரி சௌந்தரராஜன் நேற்று (14.10.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

778, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(32769) (10,14)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்வி உஷா குழந்தைவேலு



நவாலி மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் பாலவிகாஸ் குரு செல்வி உஷா குழந்தைவேலு (மானிப் பாய் சத்யசாயி சென்ரர்) கடந்த (09.10.2013) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தை வேலு (முன்னாள் அதிபர்- மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்)- திருமதி குழந்தை வேலு தம்பதியரின் அருமைப் புதல்வியும், குலம், காலஞ்சென்ற கலா மற்றும் குலேந்தி, வித்யா, ரவி, றூபன், சித்ரா, ஜமுனா, கங்கா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் HAMPTON, VIRGINIA USA யில் கடந்த 11.10.2013 வெள்ளிக்கிழமை நடை பெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*ஓம் சாயிராம்*

தகவல்:
சித்ரா (கனடா) 416-701-9590
கங்கா (கனடா) 416-288-0708

(32762) (10.14)

### உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு உத்தியோகத்தருக்கு கட்டுரைப் போட்டி

தென்மராட்சி, ஒக். 15

சாவகச்சேரி நகர சபையினர் உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு இந்த அலுவலகத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கிடையிலான கட்டுரைப் போட்டியினை நடத்தவுள்ளனர்.

பின்வரும் தலைப்புக்களிலான ஆக்கங்களை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு செயலாளர் கா.சண்முகதாஸன் அறிவித்துள்ளார்.

1. உள்ளூராட்சி மன்றங்களினது வருமானங்களில் புதிய வருமானங்களை இனங்காணல்.

2. சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் தோற்றமும் வரலாறும்.

3. சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினை மாநகர சபையாக மாற்றுவதற்கு முன்னெடுக்கக் கூடிய ஆலோசனைகள், வழிமுறைகள்.

தெரிவு செய்யப்படும் சிறந்த ஆக்கங்கள் மன்றினால் வெளியிடப்படவுள்ள உள்ளூராட்சி வாரச் சிறப்பு மலரில் பிரசுரிக்கப் படவுள்ளன.

(ந-9)

## மரண அறிவித்தல்

### இளையதம்பி செல்வராசா



(ஓய்வு பெற்ற அதிபர், முன்னாள் யாழ். மாவட்ட மினி பஸ் சங்கச் செயலாளர்)

காங்கேசன் துறையைப்பிறப்பிடமாவும், பொலிகண்டி ஆழக்கிணற்றடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற அதிபரும் யாழ். மாவட்ட மினிபஸ் சங்கச் செயலாளருமாகிய இளையதம்பி செல்வராசா நேற்று (14.10.2013) திங்கள் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி- ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மாணிக்கம் - இலட்சுமி தம்பதியரின் அருமை மருமகனும், சிவதேவியின் அன்புக் கணவரும், ஆனந்தன் (ஓய்வு நிலை பிரதி அதிபர் யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), கருணாநிதி (ஓய்வு பெற்ற முகாமையாளர்,மக்கள் வங்கி ), ஆகியோரின் அன்புச் சகோதரனும்,ஸ்ரீ ரஞ்சனி (முகாமைத்துவ உதவியாளர், பாரம்பரிய கைத்தொழில்கள்,மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு), பரமராணி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும், சிதம்பரேஸ்வரி, சிவமணி, சிதம்பரநாதன், சண்முகநாதன்,மீனாம்பிகை, பவளராணி, மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும், Dr. வல்லிபுரம், தம்பி முத்து (ஓய்வு நிலை அதிபர்), ஆகியோரின் சகலனும், சோபிதா (லண்டன்), ஜீவினி(லண்டன்), லக்சுதன் (பிரான்ஸ்), ஆகியோரின் தந்தையும், நேசலிங்கம்(லண்டன்), யோகேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் மாமனும், அக்ஷயன், கனிஷ்கா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (16.10.2013) புதன்கிழமை பி.ப. 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"சிவ இல்லம்",
பொலிகண்டி, ஆழக்கிணற்றடி

தகவல்: குடும்பத்தினர்.
T.P-0779103678, 0214905202

## மரண அறிவித்தல்

### பழனிச்சாமி முத்துச்சாமி



(டயலொக் பிராந்திய முகாமையாளர் இளையராஜாவின் தந்தை)

பதுளையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பிரப்பம் குளம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பழனிச்சாமி முத்துச்சாமி நேற்று (14.10.2013) திங்கட்கிழமை கால மானார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும், இளையராஜா(டயலொக் பிராந்திய முகாமயாளர் - யாழ்ப்பாணம்) நேசன்(பதுளை), கலாதேவி (பதுளை) ஆகியோரின் அன் புத் தந்தையும், எஸ்தர்பூமனி, மஞ்சுளா, சத்தியநாதன் ஆகியோரின் அன்பு மாமனும், திவ்வியன், கிரிஷாந் ஆகியோ ரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று மு.ப.10.00மணிவரை பிரப்பங்குள வீதி இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் பதுளைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நாளை மறுதினம் (17.10.2013) வியாழக்கிழமை இறுதிக்கிரிகைக்காக பதுளை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். பொது அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 277, 3ஆம் கட்டை,
பசறை வீதி, பதுளை.
077 3334965

தகவல்:
முத்துச்சாமி இளையராஜா (மகன்)
(டயலொக் பிராந்திய முகாமையாளர் -யாழ்ப்பாணம்)

## மரண அறிவித்தல்

### சுப்பையா சண்முகசுந்தரம் (ஆசைய்யா)

(நாதஸ்வர வித்துவான்)

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடா மொன்றியலை வதிவிடமாகவும் கொண்ட சுப்பையா சண்முக சுந்தரம் கடந்த (12.10.2013) சனிக்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-தையல் நாயகி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-வீரலட்சுமி தம்பதியரின் அருமை மருமகனும், காலஞ்சென்ற கல்யாணசுந்தரியின் (சுசி) பாசமிகு கணவரும், ரவீந்திரன் (கனடா), வளர்மதி (கனடா), யசோதா (லண்டன்), ரஜனி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ருக்குமணி, கௌரிசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சோமசுந்தரம் (கனடா), ஜெயந்தி (கனடா), காலஞ்சென்ற சந்திரஹாசன், தயாபரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும், கஜபரன், கிரிசாந் (கனடா), சித்தாத்தன், வைஷ்ணவி (கனடா), சாறா, சன்ரா (லண்டன்), சுபிக்ஷா, சுசீற்றா (லண்டன்) ஆகி யோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் (13.10.2013) ஞாயிற்றுக் கிழமை கனடா மொன்றியலில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
ரவீந்திரன் (ரவி-கனடா).
+15146263337
+15148879768

(32785) (10,14)

தகவல்:
குடும்பத்தினர்.
V.K. பஞ்சமூர்த்தி (நாதஸ்வர வித்துவான்)

## கண்ணீர் அஞ்சலி



டயலொக் நிறுவன பிராந்திய முகாமையாளர் முத்துச்சாமி இளையராஜா அவர்களின் அன்புத் தந்தை

### பழனிச்சாமி முத்துச்சாமி

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக

டயலொக் நிறுவன
விநியோகத்தரும் ,
விற்பனை பிரதிநிதிகளும்,
சிறிமுருகன் தொலைத்தொடர்பகம்

303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி ஜெயம்



வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஜெயம் நேற்று முன்தினம் (13.10. 2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற முதலி மற்றும் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், ஜெயக்குமாரி (லண்டன்), சிவகுமாரி(லண்டன்), சிவகுமார் (லண்டன்), ஜெயக்குமார் (ஜேர்மனி), விஜயகுமார்(லண்டன்), விஜயகுமாரி, ராஜ்குமார் (கட்டார்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருந்தவநாதன், தவராசா, மதிவதனி, ஆகியோரின் மாமனும், தாரணி, வேதினி, கிசாயினி, அஸ்வினி, சௌமினி, அஸ்வின், சனோஸ்கா ஆகியோரின் பேரனும், மகாலிங்கம், தெய்வேந்திரம், அருந்தவம், ரதிகலா, அழகேந்திரன், இன்பரதி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2013)செவ்வாய்க்கிழமை மு.ப. 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குடமியன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவற்காடு, வரணி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### யோசேப் பற்பநாதர் (யுவராசா)

(இளைப்பாறிய ஊழியர், லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்)



பிரதான வீதி, இளவாளையைப் பிறப்பிடமாகவும் விபுலாநந்தர் வீதி, கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப் பற்பநாதர் கடந்த (12.10.2013) சனிக்கிழமை அகாலமரண மடைந் தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசேப்பு-மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், அன்ரனீற்றா வத்சலாவின் (ஆசிரியர், யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பேரின்பரெட்டினம்-மேரியோசேப்பின் தம்பதியரின் அன்பு மருமகனும், சாள்ஸ் பத்திநாதர், றோய் பத்மநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இன்பராணி, அழகேந்திரன், ஜெயசீலன் மற்றும் ரெட்ணராஜா, வசந்தராணி, செல்வகுமார், மரியாம்பிள்ளை, றெக்ஸ், நியூட்டன் அலாக் சிஸ் தரலம் ஆகியயோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.10.2013) புதன்கிழமை மு.ப.10.30மணிக்கு அவரது கொழும்புத்துறையில் உள்ள இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு இளவாளையில் உள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் பி.ப. 2.00மணிக்கு இளவாளை புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு இளவாளை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 08, விபுலாநந்தர் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பணம்.
021 300 7081

(32772)

தகவல்:
மனைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை தந்தை செல்வாபுரம் பகுதியில் பஸ்ஸுக்காக காத்திருந்து பஸ் தரிப்பிடம் இல்லாமையால் நிழல்தேடி அங்கே உள்ள ஒரு மதகில் சாய்ந்திருக்கும் இரண்டு மூதாட்டிகள். (வ-21)

# சேம இலாப நிதியத்தில் 25,000 பேர் இல்லை

யாழ்ப்பாணம், ஒக்.15
வடமாகாணத்தில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவில்லை. இதற்கான நடவடிக்கைகளை தொழில் தருநர்கள் உடனடியாக மேற்கொண்டு ஊழியர்களது நலன்களைப் பேணுமாறு வடமாகாண தொழில் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தில் 200 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள், ஊழியர் சேமலாப நிதியத்தில் இணைக் கப்பட்டுள்ளனர்.

ஆனால் வடமாகாணத்தில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப் படவில்லை.

தொழில் தருநர்கள் ஊழியர்களை இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்வது கட்டாயமானது. ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவில் 8 வீதத்தை ஊழியர் சேமலாப நிதியத்துக்காகக் கழிப்பதுடன் தொழில் தருநர் 12 வீதத்தையும் சேர்த்து 20 வீதத்தை திணைக்களத்துக்குச் செலுத்த வேண்டும்.

*யாழ்.மாவட்டத்தில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் சேமலாப நிதியத்தில் இணைக்கப் பட்டுள்ளனர்.*

செலுத்தப்படுகின்ற இந்தத் தொகை வங்கி வட்டி வீதத்துடன் சேர்ந்து ஓய்வுபெறும் காலத்தில் வழங்கப்படுகிறது.

ஊழியர்களது நலனுக்கான இது தொழில் திணைக் களத்தால் சட்டமாக்கப்பட்டுள்ள நிலையில் தொழில் தருநர்கள் சிலர் அவற்றில் இருந்து விலகி உள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் இவ்வாறானதொரு நிலை குறைவாக இருந்தாலும் ஏனைய மாவட்டங்களில் அதிகமாக உள்ளது. எனவே தொழில் தருநர்கள் இதனை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம்- என்றார். (வ-14-11)

# வட பகுதிக்கான ரயில் சேவை இம்மாதத்துக்குள் பளை வரை



*பளையில் இருந்து யாழ்ப்பாணம் வரையிலான பணிகளும் மும்முரமாக இடம்பெற்று வருவதை காண முடிகிறது.*

பளை, ஒக்.15
வட பகுதிக்கான ரயில் சேவை இந்த மாத இறுதிக்குள் பளை வரை நீடிக்கப்படலாம் எனத் தெரிய வருகிறது. பளை ரயில் நிலையம் வரை தண்டவாளம் அமைக்கும் பணிகள் முடிவடைந்து ரயிலில் பொருள்கள் கொண்டு வரப்படுகின்றன.

இதேவேளை ரயில் நிலையம் அமைக்கும் பணிகளும் துரித கதியில் இடம்பெற்று வருவதால் விரைவில் வட பகுதிக்கான ரயில் சேவை பளை வரை நீடிக்கப்படலாம் என தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பளையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான பணிகளும் மும்முரமாக இடம்பெற்று வருவதைக் காண முடிகிறது. பெருமளவான இடங்களில் தண்டவாளம் பொருத்தவதற்கான வேலைகள் முடிவடைந்த போதிலும் சில இடங்களில் பணிகள் ஆரம்பிக்கப்படாத நிலைமையும் காணப்படுகிறது.

அத்துடன் எழுதுமட்டுவாழ், கொடிகாமம், மீசாலை, சங்கத்தானை, தச்சன்தோப்பு, நாவற்குழி. போன்ற இடங்களில் ரயில்மேடைஅமைக்கும்பணிகள் இடம்பெற்று வருகின்ற போதிலும் ரயில் நிலையங்கள் அமைக்கும் பணிகள் மந்த கதியில் இடம்பெற்று வருவதைக் காண முடிகிறது. (வ-9)

# தினமும் 3 தடவைகள் 789 இலக்க பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஒக்.15
பாடசாலை மாணவர்கள் மற்றும் நாளாந்தம் பயணம் செய்யும் பயணிகளது நலன் கருதி அராலி ஊடாக சித்தங்கேணிக்கான 789 வழிச் சேவை 3 தடவைகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்று இலங்கை போக்குவரத்துச்சபையின் யாழ். சாலை முகாமையாளர் என். குலபாலசெல்வம் தெரிவித் தார்.

அராலி ஊடாக சித்தங்கேணிக்கான சேவையில் ஈடுபடும் பஸ் சேவை கடந்த 15 தினங்களாக தடைப்பட்டுள்ளமை தொடர்பில் அவருடன் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறித்த சேவை பஸ்ஸில் பயணிகள் தொகை குறைவாக இருப்பதுடன் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு நட்டமும் ஏற்பட்டுள்ளது. எனினும் பயணிகளது சேவையை இடைநிறுத்த முடியாது.

நாளாந்தம் பயணம் செய்யும் அரச ஊழியர்கள், தனியார் ஊழியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களது நலன் கருதி குறித்த சேவை பஸ்ஸை நாளொன்றில் 3 தடவைகள் சேவையில் ஈடுபடுத்தி வருகி றோம். குறிக்கப்பட்ட நேர ஒழுங்கில் பஸ் சேவைகள் இடம்பெறும் எனத் தெரிவித்தார். (வ-14)





## விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி, ஒக்.15
வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் சிக்கி இருவர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் பளை இயக்கச்சிப்பகுதியில் வீதிவளைவில் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியதில் தூக்கி வீசப்பட்டு இளம் குடும்பஸ்தர் காயமடைந்தார்.

உடுப்பிட்டி, கம்பர்மலையைச் சேர்ந்த ஐயம்பிள்ளை சிவமேனன்(வயது-30)என்பவரும் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்- டிராக்டர் விபத்தில் இளைஞரொருவர் காயமடைந்தார்.

சாவகச்சேரி தபால் நிலைய வீதியைச் சேர்ந்த இராசேந்திரம் றஜிந்தன் (வயது-17) என்பவரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு றஜிந்தன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (வ-9)

# சந்தைவாய்ப்பை முன்னிலைப்படுத்தி உற்பத்தியை மேற்கொள்வது அவசியம்

## ஹற்றன் நஷனல் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் கருத்து



யாழ்ப்பாணம், ஒக்.15
தொழில் முயற்சியாளர்கள் தற்போதைய சந்தை மாற்றம், கிடைக்கக் கூடிய சந்தை வாய்ப்பு என்பவற்றை முன்னிலைப்படுத்தி உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதன் ஊடாகவே சிறந்த தொழில் முயற்சியாள ராக மாற்றம் பெற முடியும் என்று ஹற்றன் நஷனல் வங்கியின் வடபிராந்திய முகா மையாளர் கை.இந்திரவாசன் தெரிவித் தார்.

ஹற்றன் நஷனல் வங்கியின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை நிகழ்வு சனிக்கிழமை வங்கியின் யாழ். பசுமைக் கட்டடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் நிதியை மட்டும் முதலீடாகக் கொண்டு தொழில் விருத்தியை அடைந்து விட முடியும் என்று கூற முடியாது. ஆரம்பிக்கின்ற தொழிலுக்குரிய ஏனைய காரணிகள் தொடர்பாகவும் கருத்தில் கொள்ள வேண்டும்.

திட்டமிடப்பட்ட ஒழுங்கமைக் கப்பட்ட சந்தைவாய்ப்பு, தற் போதைய சந்தை நிலவரம் என்பவற்றை முன்னிலைப் படுத்த வேண்டும்.

குடாநாட்டின் நிதி நிலைமை ஒவ்வொரு தொழில் முயற்சியாளர்களின் கைகளிலுமே தங்கியுள்ளது. குடாநாட்டின் அபிவிருத்திக்கு காரணிகளாக உள்ள இந்தத் தொழில் முயற்சியாளர்கள் சரியான திட்டமிடலுடன் தொழில் முயற்சிகளை மேற்கொண்டால் உரிய பலனைப் பெற்றுக் கொள்ள முடியும்- என்றார்.

இந்த நிகழ்வில் இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் சண். குறிஞ்சிதரன், ஹற்றன் நஷனல் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர், சேனக்க விஜயக்கோன், வளவாளர் எம். [illegible] உட்பட 120 இற்கும் மேற்பட்ட தொழில் முயற்சியாளர்கள் கலந்து கொண்டனர். (வ-14-20)

# தனியார் பாடசாலை உரிமையாளர் மத்திய பிரதிக் கல்வி அமைச்சரா?

## வன்மையாகக் கண்டிக்கிறது இலங்கை ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 15
மத்திய கல்வி அமைச்சின் பிரதி அமைச்சராக தனியார் பாடசாலை உரிமையாளரான மோகன்லால் நியமிக் கப்பட்டமையானது இங்குள்ளஇலவசக்கல்விமுறையை பாதிக்கச் செய்வ தற்கா என்று கேள்வியெழுப்பியதோடு இதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள் ளது.

இது தொடர்பில் சங்கத்தின் பொதுச் செயலாளர் யோசப் ஸ்ராலின் மேலும் தெரிவித்த தாவது:-

கல்வி அமைச்சுக்கு பிறிதொரு அமைச்சாக கல்விச் சேவைகள் அமைச்சு ஒன்றை ஆரம்பித்து செயற்படுத்தி வருகின்றனர். பாடநூல்கள், பாடசாலைச் சீருடைகள் வழங்குவதே அதன் பணி.

இந்த நிலையில் இங்கு இலவசக் கல்வி நடைமுறையை மாற்றி அமைக்கும் வகையில் தனியார் பாடசாலை உரிமையாளரான மோகன்லாலை பிரதி அமைச்சராக நியமித்துள்ளனர்.

இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஏற்கனவே ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தை ஆரம்பித்து பல பாடசாலைகளை மூடிவிடும் கைங்கரியத்தில் அரசு செயற்பட்டு வருகிறது.


இந்த விடயங்களை பொதுமக்கள் புரிந்து கொண்டு தமது எதிர்ப்புக்களை வெளியிட வேண்டும். எதிர்த்துக் குரல் எழுப்ப வேண்டும். அதன் மூலமாக இலவசக் கல்வி முறையை பாதுகாக்க வேண்டும்-என்றார். (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராமதாஸ் முன்னிலையாக வேண்டும்

### அவதூறு வழக்கில் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஒக்.15
பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் மீது தமிழக அரசு தொடர்ந்த அவதூறு வழக்கில் எதிர் வரும் 30 ஆம் திகதி ராமதாஸ் நேரில் முன்னிலையாக வேண்டும் என்று விழுப்புரம் மாவட்ட முதன்மை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
கடந்த ஏப்ரல் மாதம் பத்திரிக்கையாளர் சந்திப்பின் போது தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவையும், தமிழகப் பொலிஸாரையும் அவதூராகப் பேசினார் என்று ராமதாஸ் மீது கடந்த வெள்ளிக்கிழமை அவதூறு வழக்குத் தொடரப்பட்டது. அதன் முதற்கட்ட விசாரணைகளின் போதே நீதிமன்றத்தால் இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது.(ற)



இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் தசரா திருவிழாவில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி உயிழந்தவர்களின் எண்ணிக்கை 109 ஆக அதிகரித்துள்ளது. 200க்கும் மேற்பட்டவர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ள நிலையில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கக் கூடும் என்று கூறப்படுகின்றது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற திருவிழாவில் சுமார் 5 இலட்சம் பக்தர்கள் கூடினர். சிந்து நதிக்கரைக்கு அண்மையில் இருக்கும் அந்தக் கோயிலுக்கு பயணிக்கப் பயன்படும் பாலம் இடிந்து வீழ்ந்தது என்று பரவிய வதந்தியை அடுத்து ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கியே பலர் உயிரிழந்துள்ளனர். (ற)

## எல்லையில் பாக். தாக்குதல்: இந்திய இராணுவத்தினர் காயம்

ஶ்ரீநகர், ஒக்.15
ஜம்மு-காஷ்மீர் மாநிலம் சம்பா பகுதியில் உள்ள இந்திய நிலைகள் மீது பாகிஸ்தான் இராணுவம் மீண்டும் அத்துமீறி தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் எல்லை பாதுகாப்புப் படை வீரர் ஒருவர் படுகாயமடைந்தார்.
இதேபோல் பூஞ்ச் அருகே இந்திய ராணுவ நிலைகளை நோக்கி பாகிஸ்தான் இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் துப்பாக்கிச்சூடு நடத்தினர். கடந்த 8 ஆண்டுகளில் இந்த ஆண்டு மட்டும் எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் 130 முறை அத்துமீறி தாக்குதல் நடத்தியுள் ளது.
பாகிஸ்தான் இராணுவத்தின் அத்துமீறல் குறித்து கடந்த மாதம் பிரதமர் மன்மோகன் சிங் அந்நாட்டு பிரதமர் நவாஷ் ஷெரிப்பை அமெரிக்காவில் சந்தித்து பேச்சு நடத்தினார். இருப்பினும் பாகிஸ்தான் இராணுவம் தொடர்ந்து அத்துமீறி இந்திய நிலைகள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. (ற)

## இந்தியா முழுவதும் பிரியங்கா பரப்புரை


புதுடில்லி, ஒக்.15
காங்கிரஸ் கட்சி தலைவர் சோனியாகாந்தியின் மகள் பிரியங்கா காந்தி இந்தியா முழுவதும் சென்று காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு திரட்டுவார் என்று அந்தக் கட்சி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.
அமேதி மற்றும் ரேபரலி தொகுதியில் மட்டுமே பிரியங்கா காந்தி தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்வார் என்று முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆனால் அவற்றை மறுத்துள்ள காங்கிரஸ் கட்சி வட்டாரங்கள், பிரியங்கா இந்தியா முழுவதும் சென்று காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு திரட்டுவார் என்று கூறியுள்ளன. (ற)

## முடிந்தது வேலை நிறுத்தம்: ஆந்திராவுக்கு போக்குவரத்து ஆரம்பம்

சென்னை, ஒக்.15
ஆந்திராவில் அரச போக்குவரத்து ஊழியர்கள் மேற்கொண்டிருந்த வேலைநிறுத்தப் போராட்டம் முடிவிற்கு வந்ததையடுத்து, மீண்டும் அம்மாநிலத்திற்கு தமிழகத்தில் இருந்து பேருந்து சேவை தொடங்கியுள்ளது.
ஆந்திராவில் இருந்து தெலுங்கானா பகுதியை தனி மாநிலமாக பிரிப்பதற்கான பணிகளை மத்திய அரசு தொடங்கியுள்ளது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், ஒருங்கிணைந்த ஆந்திராவை வலியுறுத்தியும், ராயலசீமா மற்றும் கடலோர ஆந்திராவை சேர்ந்த அரசு ஊழியர்கள், தொடர் வேலைநிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர்.
ஒகஸ்ட் 12ஆம் திகதி முதல், அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களும் காலவரையற்ற வேலை நிறுத்தம் மேற்கொண்டு வந்தனர். அதனால் சென்னையில் இருந்து 40 பேருந்துகளும், தமிழகம் முழுமையில் இருந்தும், 150 க்கும் அதிகமான பேருந்துகளும் கடந்த 2 மாதங்களாக நிறுத்தப்பட்டன. (ற)

# பலவீனமான கொள்கையே அத்துமீறலுக்குக் காரணம்

## இந்திய அரசைச் சாடுகின்றார் ஆர்.எஸ்.எஸ். தலைவர்



புதுடில்லி, ஒக்.15
இந்திய மத்திய அரசின் பலவீனமான வெளியுறவுக் கொள்கைகளாலேயே சீனாவும் பாகிஸ்தானும் அத்துமீறுகின்றன என்று இந்திய ஆர். எஸ்.எஸ்.கட்சியின் தலைவர் மோகன் ஜி பாகவத் குற்றஞ் சாட்டியுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,
"நாட்டின் மோசமான பொருளாதாரக் கொள்கை, வெளியுறவுக் கொள்கைகள் என்பவற்றால்தான் நாட்டில் ஊடுருவலும், ஆக்கிரமிப்புகளும் நடைபெறுகின்றன. இந்திய மண்ணுக்குள் இத்தகைய ஆக்கிரமிப்புகள் மீண்டும் மீண்டும் நடைபெறுகிறது.
ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள கிஷ்த்வாரில் ஹிந்து வர்த்தகர்கள் பாகிஸ்தான் ஆதரவு கோஷம் எழுப்பியபடி வந்த வன்முறையாளர்களால் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். இது கண்டிக்கத்தக்கது. அண்மையில், ஐரோப்பிய குழுவினர் காஷ்மீர் மாநிலத்திற்கு வந்திருந்தபோது, காஷ்மீர் சட்டரீதியாக இந்தியாவுடன் ஒருங்கிணையவில்லை, அடுத்துள்ளதுபோல் இணைந்துள்ளதாக ஓமர் அப்துல்லா அவர்களிடம் பேசியது ஆட்சேபகரமானது.
இந்திய மத்திய அரசு பலவீனமான கொள்கைகளைப் பின்பற்றுகின்றது. அதனாலேயே இவ்வாறான அத்துமீறல்களில் சீனாவும் பாகிஸ்தானும் ஈடுபடுகின்றன. இது போன்ற விடயங்களில் இந்தியா உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.(ற)

# தி.மு.கவின் தோல்விக்கு ஸ்பெக்ட்ரமே காரணம்

## ராசா கூறுகின்றார்

விழுப்புரம், ஒக்.15
2011 விழுப்புரம் சட்டமன்ற தேர்தலில் தி.மு.க தோல்வியடைந்ததற்கு 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் தான் காரணம் என்று அக்கட்சியின் முன்னாள் மத்திய அமைச்சர் அ.ராசா கூறியுள்ளார்.
விழுப்புரத்தில் நேற்றுமுன்தினம் தி.மு.க முப்பெரும் விழா பொதுகூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், தி.மு.க. முன்னாள் மத்திய அமைச்சர் அ.ராசா, விழுப்புரம் மாவட்ட செயலாளர் பொன்முடி ஆகியோர் கலந்துகொண்டனர்.
இந்த கூட்டத்தில் உரையாற்றிய அ.ராசா,
"நீண்ட இடைவெளிக்கு பிறகு விழாவில் உரையாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது. அண்ணாவில் பெயரை பயன்படுத்த தி.மு.கவுக்கு மட்டும் தான் அருகதை இருக்கிறது. மற்ற கட்சியினர் அண்ணாவின் பெயரை பயன்படுத்திக் கொண்டு, அவரின் கொள்கைக்கு விரோதமாக செயல்படுகின்றனர்.
அண்ணாவின் கொள்கைகளை பின்பற்றி தமிழகத்தை முன்னேற்றபாதையில் எடுத்து சொல்வது தி.மு.கதான். அப்படி இருந்தும் கடந்த சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. தோல்வியடைந்தது. ஆட்சியை இழக்க நானும் ஒரு காரணமாக இருந்தேன். அதாவது 2ஜி முக்கிய காரணமாக இருந்து தி.மு.க ஆட்சியை பறித்தது.

### நான் செய்த தவறு

நான் மத்திய அமைச்சராக இருக்கும் போது மூன்று தவறுகளை செய்தேன். ஒரு ரூபாவாக இருந்த தொலைபேசி கட்டணத்தை 30 சதமாகக் குறைத்தது முதல் தவறு. 30 கோடி பேர் மட்டுமே பயன்படுத்திய கைத்தொலைபேசிகளை 90 கோடியாக உயர்த்தியது இரண்டாவது தவறு.
ஒருவரின் மாத சராசரி தொலைபேசி கட்டணத்தை 310 ரூபாவாலிருந்து 100 ரூபாவாகக் குறைத்தது மூன்றாவது தவறு.
இவற்றுக்காக என்னை சிறையில் அடைத்து கொடுமைபடுத்தினார்கள். நான் எங்கள் வீட்டில் எட்டாவது பிள்ளை. என் கூட பிறந்த எழு பேர் வீட்டிலும் சி.பி.ஐ சோதனை செய்தார்களே. அவர்களால் ஒரு ஆவணத்தை கண்டுபிடிக்க முடிந்ததா?" என்று தெரிவித்தார்.(ற)

## ஸ்டாலின் முன்னிலையில் சண்டையிட்ட தி.மு.கவினர்

சேலம், ஒக்.15
சேலம் மாவட்டத்தில் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் திமுகவினர் மோதிக் கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
சேலம் மாவட்டம் வலசையூரில் ஏற்காடு இடைத்தேர்தல் குறித்த ஆலோசனைக் கூட்டம் மற்றும் தேர்தல் அறிமுகக் கூட்டம் நடைபெறுகிறது. இதில் கலந்து கொள்வதற் காக திமுக பொருளாளர் மு.க. ஸ்டாலின் சேலத்தில் உள்ள பிரபல விடுதி ஒன்றில் தங்கியிருந்து பின்பு அங்கிருந்து கூட்டத்திற்கு கிளம்பிச் சென்றார்.
அவரை வரவேற்க தி.மு.க. முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்தின் மகன் ராஜா தனது ஆதரவாளர்களுடனும், ராஜேந்திரன் மற்றும் அவரது ஆதரவாளர்களுடனும் வந்திருந்தனர்.
இந்நிலையில் ஸ்டாலினை வரவேற்பதில் இரு தரப்புக்கும் இடையே தகராறு ஏற்பட்டதால் இரு தரப்பினரும் அவர் முன்பே அடித்துக் கொண்டனர். அதில் தி.மு.க. மண்டல [illegible] அதிர்ச்சி அடைந்து ஸ்டாலின் அங்கிருந்து சென்றுவிட்டார். (ற)



ஓரிசாவில் பைலின் புயலின் தாக்கம் குறைந்தபோதும் தற்போதும் சில இடங்களில் மழை பெய்து வருகின்றது. பெரும்பாலான இடங்களுக்கான போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. அதனால் மீட்புப் பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலியில் படகு விபத்து: 20 பேர் சாவு

மொப்டி, ஒக்.15

மாலி நைகர் நதியில் படகொன்று விபத்துக்குள்ளானதில் 20 பேர் உயிரிழந்துள்ளனர். படகில் பயணித்த 210 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். படகில் சுமார் 400 பேர் பயணித்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

மொப்டி நகரத்திலிருந்து திம்புக்து நகரை நோக்கி பயணித்த படகே விபத்தில் சிக்கியுள்ளது. படகில் அளவுக்கு அதிகமான பயணிகளுடன் பாரமான பொதிகளும் ஏற்றிச் செல்லப்பட்டமையாலேயே விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. (ற)



பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள உலகப்புகழ்பெற்ற ஈபிள் கோபுரத்தின் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று தொலைபேசி மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. அதையடுத்து ஈபிள் கோபுரத்துக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதுடன் சுற்றுலாப்பயணிகள் பார்வையிடுவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. (ற)

## இத்தாலிக் கடற்பரப்பில் கண்காணிப்பு அதிகரிப்பு

ரோம், ஒக்.15

இனிவரும் காலங்களில் எமது கடற்பரப்பில் தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைளை மேற்கொள்ளவுள்ளோம் என்று அறிவித்துள்ள இத்தாலி.

புகலிடக் கோரிக்கையாளர்களின் பயண வழித்தடங்கள் இத்தாலிக் கடற்பரப்பினூடாகவே அமைகின்றன என்று கூறப்படும் குற்றச்சாட்டுக்களை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் படகுகளும், ஹெலிகொப்டர்களும் பயன்படுத்தப்படவுள்ளன என்றும் கூறப்பட்டுள்ளது.

கடந்தவாரம் இத்தாலிக் கடற்பரப்பில் புகலிடக் கோரிக்கையாளர்கள் பயணித்த படகுகள் விபத்துக்குள்ளாகியதில் முந்நூறுக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர். (ற)

## பெரு பஸ் விபத்தில் 52 பேர் சாவு

சாண்டா டெரசா, ஒக்.15

பெருவில் பயணிகள் பஸ்ஸொன்று பெரும் பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 52 பேரும் உயிரிழந்துள்ளனர்.

சாண்டா டெரசா என்ற இடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு விட்டு பஸ்ஸில் திரும்பிக் கொண்டிருந்தவர்களே இந்த விபத்தில் சிக்கினர்.

சுமார் 200 மீற்றர் ஆழமுடைய பள்ளத்தில் வீழ்ந்த பஸ்ஸில் பயணித்த அனைவரும் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 13 பேர் குழந்தைகள் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற)

# சிரியாவில் சிக்கல்கள்

## தாமதமாகும் ஐ.நா. நிபுணர்களின் பணிகள்

டமாஸ்கஸ், ஒக்.15

கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இரசாயன ஆயுதக் களைவு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தாம் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர் என்று சிரியாவில் இரசாயன ஆயுதக் களைவு நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் ஐ.நா.சபையின் நிபுணர்கள் குழு கவலை வெளியிட்டுள்ளது. அதனால் குறிப்பிட்ட கால எல்லைக்குள் தமது பணிகளை நிறைவு செய்ய முடியாத நிலை தமக்கு ஏற்படக் கூடும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

சிரிய உள்நாட்டுப் போரில் அந்நாட்டு அரசு இரசாயன ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்துகின்றது என்று குற்றச்சாட்டு எழுந்தது. அதையடுத்து சர்வதேச நாடுகளுடன் மேற்கொண்ட உடன்பாட்டின் அடிப்படையில் தற்போது ஐ.நா. நிபுணர்கள் குழு சிரியாவில் உள்ள இரசாயன ஆயுதங்களை அழிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

தம்வசம் உள்ள இரசாயன ஆயுதங்கள் குறித்த தரவுகளை சிரிய அரசு ஐ.நா. நிபுணர்களிடம் கையளித்துள்ள நிலையில், கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் உள்ள இரசாயன ஆயுதங்கள் குறித்து தமது கவனத்தைத் திருப்பியுள்ளனர் ஐ.நா. நிபுணர்கள் குழுவினர்.

எனினும் அந்தப் பகுதிகளில் உள்ள இரசாயன ஆயுதங்கள் தொடர்பான விவரங்களைப் பெறுவதில் தாம் பெரும் சிக்கல்களை எதிர்நோக்குகின்றோம் என்று தெரிவிக்கின்றனர் நிபுணர்கள் குழுவினர்.

"சிரியாவில் மோதல்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வரும் நிலையில், கிளர்ச்சியாளர்களிடம் இருந்து போதிய ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. இந்தநிலையில் அந்தப் பகுதிகளில் இரசாயன ஆயுதங்கள் களைவு குறித்து எந்த நடவடிக்கைகயையும் எம்மால் மேற்கொள்ள முடியவில்லை" என்று தெரிவிக்கின்றனர் நிபுணர்கள் குழுவினர்.

அதேவேளை, இரசாயன ஆயுதங்கள் தயாரிக்கப்படுகின்றன என்று சந்தேகம் வெளியிடப்பட்ட 20 தொழிற்சாலைகளில் 5 தொழிற்சாலைகளில் மட்டுமே சோதனை நடத்தப்பட்டுள்ளது என்றும் அவர்கள் மேலும் கூறியுள்ளனர். (ற)

## ஆயுதமுனையில் கடத்தப்பட்ட செஞ்சிலுவைப் பணியாளர்கள்

சிரியாவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த 7 பேர் ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டுள்ளனர் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடத்தப்பட்டவர்களில் ஆறு பேர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வெளிநாட்டுப் பணியாளர்களாவர். ஒருவர் செம்பிறைச் சங்கத்தின் உள்ளூர் தொண்டர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடத்தப்பட்டவர்களை உடன் விடுவிக்குமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கோரியுள்ளது.

அதேவேளை இட்லிப் மாகாணத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பணியாளர்களின் வாகனம் மீது இனந்தெரியாதவர்களால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது என்று சிரிய அரச ஊடகம் தகவல் வெளியிட்டிருந்தது. (ற)

## ஈராக் குண்டுத் தாக்குதல்கள் 40க்கும் மேற்பட்டோர் சாவு



பாக்தாத், ஒக்.15

ஈராக்கில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களில் 40க்கும் அதிகமானோர் உயிரிந்துள்ளனர். 11 குண்டுத் தாக்குதல்கள் அடுத்தடுத்து இடம்பெற்றன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின் றன.

கார்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டுகள் தூர இருந்து இயக்கும் கருவிகள் மூலம் வெடிக்கவைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறுகின்றன.

ஷியா பிரிவு முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றிருப்பதால் சன்னி பிரிவு தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்களே அவற்றை நடத்தியிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

அதேவேளை ஈராக் தலைநகர் பாக்தாக்தில் இருந்து 100 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள ஹலா நகரத்தில் நடத் தப்பட்ட கார்க்குண்டுத் தாக்கு தலில் 5 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

ஈராக்கில் தினமும் குண்டுத் தாக்குதல்கள் நடைபெறுவது வழமையாகி வருகின்றது. அதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. (ற)

## இந்துகுஷ் பகுதியில் நிலநடுக்கம்

காபூல், ஒக்.15

ஆப்கனின் இந்துகுஷ் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிச்டர் அளவுகோலில் 5.3 ஆகப் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்டசேத விவரங்கள் எதுவும் வெளியாகவில்லை.

நிலநடுக்கம் தொடர்பான தகவல்களை இந்திய புவியியல் ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது. (ற)

# மேற்கு நாடுகளின் ஊதுகுழல் நானல்ல

## மலாலா கூறுகின்றார்



லண்டன், ஒக்.15

நான் ஒன்றும் மேற்கத்திய நாடுகளின் ஊதுகுழல் அல்ல. நான் பாகிஸ்தானி என்று சொல்லிக் கொள்வதில் பெருமை கொள்கிறேன் என்று கூறியுள்ளார் மலாலா யூசுப்.

தலிபான்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மீண்டுள்ள 16 வயது சிறுமி மலாலா, பெண்கள் கல்விக்காக குரல் கொடுத்து வருகிறார்.

அவர் எதிர்காலத்தில் பாகிஸ்தான் அரசியலில் தான் ஈடுபட விரும்புகின்றேன் என்று அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார். இந்தநிலையில், அவரை மேற்கத்திய நாடுகளின் ஊதுகுழலாக செயல்படுகிறார் என்று பாகிஸ்தான் பழமை வாதிகள் குற்றம் சுமத்தி வருகின்றனர். அதற்கு பதிலளிக்கும் விதமாக அவர் இவ்வாறு கூறியுள்ளார். (ற)

# புனித பயணத்திலும் புதிய சாதனை படைப்பு

லண்டன், ஒக்.15

சவூதி அரேபியாவைச் சேர்ந்த 80 வயதுடைய ஒருவர் மெக்காவுக்கு 60 முறை புனித பயணம் மேற்கொண்டு கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.



பக்ரீத்தை முன்னிட்டு சவூதி அரேபியாவில் உள்ள மெக்காவுக்கு உலகம் முழுவதும் இருந்து ஏராளமான முஸ்லிம் யாத்திரிகர்கள் வருடா வருடம் புனித பயணம் மேற்கொள்கின்றனர்.

கடந்த ஆண்டு 32 லட்சம் பேர் பக்ரீத் பண்டிகையின் போது மெக்காவில் கூடினர்.

நேற்றுமுன்தினம் ஹஜ் யாத்திரை ஆரம்பமாகியது. எதிர்வரும் 18ஆம் திகதி ஹஜ் யாத்திரை நிறைவுபெறுகிறது. இந்த நிலையில் சவுதி அரேபியாவை சேர்ந்த 80 வயதுடைய சுலைமான் என்பவர் இந்த ஆண்டு 60ஆவது முறையாக மெக்காவுக்கு பயணம் மேற்கொண்டு கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற உள்ளார். முதல் முறையாக 1954ஆம் ஆண்டு சுலைமான் அவரது தந்தையுடன் மெக்காவுக்குப் பயணம் மேற்கொண்டார். இம்முறை மேற்கொள்ளும் பயணத்துடன் அதிக தடவைகள் மெக்காவுக்குப் புனித பயணம் மேற்கொண்ட சாதனையைப் படைக்கவுள்ளார் சுலைமான். (ற)

# பாகிஸ்தானை விட்டு முஷாரப் ஓடமுடியாது

## அந்நாட்டு உள்துறை அமைச்சர் கூறுகின்றார்

இஸ்லாமாபாத், ஒக்.15

பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் நாட்டை விட்டு வெளியே எங்கும் செல்ல முடியாது என்று தெரிவித்துள்ளார் அந்நாட்டு உள்துறை அமைச்சர் சௌத்ரி நிஸார்.

இதுகுறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

பர்வேஸ் முஷாரப் பாகிஸ்தானை விட்டு எங்கும் செல்ல முடியாது. அவருக்குப் பிணை வழங்கப்பட்டாலும் அவர் பாகிஸ்தானிலேயே தங்கியிருக்க வேண்டும். அவர் மீதான விசாரணைகள் முடிவடையும் வரை அவர் நாட்டை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவு இன்றி அவர் எங்கும் செல்ல முடியாது" என்று தெரிவித்துள்ளார்.



அண்மையில் முஷாரப்புக்கு பிணை வழங்கப்பட்டபோது அவர் டுபாய் செல்லவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்தநிலையிலேயே அந்நாட்டு உள்துறை அமைச்சர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 152 பேர் சிக்கினர்

பயணச் சீட்டு இன்றி ரயிலில் பயணித்த 152 பயணிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். ரயில்வே பாதுகாப்பு பிரிவினரால் கடந்த இரண்டு மாதக் காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ரயில்வே பாதுகாப்பு பொறுப்பதிகாரி சேனக ஜயசேன தெரிவித்தார். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 12 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான அபராதம் அறவிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# வளத்தை முறையாக பயன்படுத்தினால் பால் உற்பத்தியில் நாடு தன்னிறைவு

### கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு. ஒக். 15

வளங்கள் முறைப்படியாகப் பயன்படுத்திக் கொள்ளப்படுமானால் அடுத்துவரும் மூன்றாண்டுகளுக்குள் நாட்டைப் பால் உற்பத்தியில் தன்னிறைவு அடையச் செய் வது சிரமமாக அமையாது. இவ்வாறு அரச கால்நடை வைத்திய அதிகாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

திரவப்பால் தொடர்பாக அதிகரித்த கோரிக்கை நிலவினாலும், கோரிக்கையை நிறைவு செய்யக் கூடிய அளவுக்கு பால் விநியோகம் இல்லை என்று சங்கம் தெரிவித்துள்ளது.

திரவப்பால் வர்த்தக சந் தையை விரிவுபடுத்த பால் சேகரிப்பு நிலையங்களை சிறிய குளிரூட்டி வசதிகள் கொண்டவைகளாக மாற்ற வேண்டி யுள்ளது. அத்தோடு பிரதேச ரீதியாக பொதுசன கால்நடை சுகாதாரப் பிரிவுகள் நிறுவப்பட வேண்டியுள்ளது என்று சங்கம் குறிப்பிட்டுள்ளது.

திரவப்பால் பாவனையைப் பிரபலப்படுத்தல் மற்றும் திரவப் பாலைக் கொள்வனவு செய்யும் வர்த்தகச் சந்தை வசதி வாய்ப்புக்களை விரிவுபடுத்தல் தொடர்பாக ஆலோசனைகளைப் பெறுவதற்காக அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கம் விசேட பயிற்சிப் பட்டறையை நடத்தியுள்ளது. பால் நிறுவனங்கள், விவசாய அமைப்புக்கள், போஷாக்கு நிபுணர்கள், மாட்டுப் பண்ணையாளர்கள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்களின் பங்களிப்புடன் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.



இந்தப் பயிற்சிப் பட்டறையில் பெறப்பட்ட ஆலோசனைகள் ஊடாகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கை எதிர்வரும் இரு வார காலத்துள் கால்நடை வளங்கள் மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சிடமும், ஜனாதிபதியிடமும் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-22)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
ஆசிரியர் (பகுதித்தலைவர்)
திருமதி கலைவாணி கைலாசநாதன்
(B.Sc-Dip.in.Ed. SLTS-I) கடந்த 05.10.2013
அன்று இலங்கை பிரதமர் கௌரவ
டி.எம். ஜயரத்ன அவர்களால்
"பிரதீபா பிரபா" விருது வழங்கிக்
கௌரவிக்கப்பட்டதையிட்டுப் பாராட்டுவதுடன்
அவர் மேலும் மேலும் பட்டங்கள் பெற்று சிறப்புறப்
பணிசெய்து வாழ எல்லாம்
வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

### சித்தியடைந்த மாணவர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வி.பிரணவி | 184 | வ.கேதாரனி | 170 | ஸ்ரீ.நர்சிகா | 159 |
| சி.மிதுஷா | 181 | சே.சதுர்ஸ்சிகா | 170 | பு.சுபானி | 159 |
| சி.நிரோஷிகா | 173 | த.நிந்துஜா | 164 | செ.சரண்யா | 157 |

### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க.கயானா | 153 | த.வைஷ்ணவி | 131 | கோ.கேனுகா | 124 | க.நிலானி | 111 |
| கி.ராகவி | 151 | சு.கிஷானா | 131 | சி.வர்சிகா | 121 | நா.கௌசிகா | 110 |
| அ.சம்பிகா | 150 | சு.லோசனா | 130 | சு.சுகன்ஜா | 119 | அ.மதுரா | 108 |
| ம.லாவண்யா | 146 | ப.கார்மிகா | 125 | செ.ருபானி | 117 | ர.சகீனா | 104 |
| வி.விதுஷா | 134 | ஜோ. சுருதிகா | 125 | கி.வினுஷா | 117 | ந.ஹம்ஸா | 101 |
| ம.வனுசியா | 134 | செ.விஸ்ணுகா | 125 | அ.கிருஷிகா | 111 | | |

Best Wishes

பாராட்டுவோர்:
கல்லூரிச் சமூகம்,
(C/2871)(3.6.4) யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி



## நல்லூர் உற்சவகால அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தினால் உற்சவ காலங்களில் விற்பனை செய்யப்பட்ட ரிக்கெட்டுக்களின் அதிர்ஷ்ட இலக்கங்கள்

### அதிர்ஷ்ட இலக்க விவரம்

| | | | |
|---|---|---|---|
| முதலாம் பரிசு | - 13485 | 2ஆம் பரிசு | - 47397 |
| 3ஆம் பரிசு | - 61289 | 4ஆம் பரிசு | - 57569 |
| மேலும் 5 ஆறுதல் பரிசுகள் | | | |
| 5ஆம் பரிசு | - 37338 | 6ஆம் பரிசு | - 25846 |
| 7ஆம் பரிசு | - 66324 | 8ஆம் பரிசு | - 26722 |
| 9ஆம் பரிசு | - 13055 | | |

ரிக்கெட்டினைப் பெற்ற யாவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
30.11.2013ஆம் திகதிக்கு முன்னர் அதிர்ஷ்ட பொருள்களை கிழமை நாள்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிக்கு முன்னர் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

முகவரி:
யாழ். விழிப்புலனற்றோர் சங்கம்
இல. 28, முதலாம் ஒழுங்கை,
கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல : 021 222 7336

(32722)(7.6.3) தலைவர்.



## யா/ இடைக்காடு மகா வித்தியாலயம்
## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது வித்தியாலயத்தில் இவ்வருடம் (2013) கிடைக்கப்பெற்ற பெறுபேற்று சாதனைகளும் பல்கலைக்கழக அனுமதியும்



தீபிகா தங்கவேல்
தேசிய மட்டத் தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு 5இல் இலக்கிய திறனாய்வில் தங்கப்பதக்கம் பெற்றவர்



நடராசா சாருசன்
சிறந்த பெறுபேறு க.பொ.த.உ.த கணிதப் பிரிவில் 3A

### பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்



பரமேஸ்வரன் கிரிதாஸ் [பொறியியல்]
தில்லைநாதன் திணேஷ்குமார் [விவசாய விஞ்ஞானம்]
மகேந்திரம் பொன்வேல் [விவசாய விஞ்ஞானம்]



ஜெயக்கொடி ஜெயசுஜீவன் [கலை]
திவ்வியா சிவனேஸ்வரன் [கலை]
சுயாதிகா அப்புத்துரை [கலை]

### புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்



பார்மீனா கனகராசா 162
ரகுலகரன் ரீக்சிகன் 161
ரவிக்குலநாதன் பரிதிமாலன் 156
மாதுனி கணேசலிங்கம் 154

100 புள்ளிக்கும் வெட்டுப்புள்ளிக்கும் இடையிலுள்ள பெறுபேறுகள்

| | | | |
|---|---|---|---|
| த.பவீனா | 153 | சி.சிவனுஜா | 146 |
| த.நிந்துஜன் | 137 | பி.டனோஜா | 132 |
| இ.டிவாகர் | 130 | க.நிருத்திகா | 123 |
| பி.சிந்துகா | 110 | ச.சன்சிகா | 109 |

### க.பொ.த.சா.த பெறுபேறுகள்



விஷ்ணுஜா ஸ்ரீவடிவேலு
9A [ஆங்கில மொழிமூலம்]

| | |
|---|---|
| ரதிக்கா மாணிக்கம் | - 7A,B,S |
| நிதர்சனா குணபாலசிங்கம் | - 7A,C,S |
| சிவலிங்கம் மதுசன் | - 3A,5B,S |
| சாந்துகுமார் பிரசாந் | - 3A,2C,4S |
| நிருபா தங்கவேலாயுதம் | - 2A,3B,2C,2S |

பாடசாலைச்சித்தி வீதம் -81%
வலயமட்டத்தில் 6ம் நிலை



வனிதா பரமேஸ்வரன்
[நுண்கலை]

இவர்களது சாதனைகளைப் பாராட்டி மகிழ்வதோடு, நாளையதின பரிசளிப்பு விழாவில் புலமைபரிசில்கள் வழங்கி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம். இச்சிறப்பிற்கு உரியதாக இவர்களைக் கற்றல் முயற்சிகளில் ஈடுபட வைத்து சாதனையாளர்களாக உருவாக்கிய வித்தியாலய முதல்வர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்!.

யா/ இடைக்காடு மகா வித்தியாலயம்
அச்சுவேலி

வாழ்க அன்னை சேவை! வளர்க நம் கல்வி!

பழைய மாணவர் சங்கம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முக்கொம்பன் பாடசாலைக்குரிய 10 ஏக்கர் காணியை வழங்குக

## பூநகரி பிரதேச செயலகத்திடம் மக்கள் கோரிக்கை

அக்கராயன். ஒக். 15

பூநகரிக் கோட்டத்துக்குட்பட்ட முக்கொம்பன் அ.த.க.பாடசாலைக்கு ஒதுக்கப்பட்ட 10 ஏக்கர் காணியையும் முழுமையாகப் பாடசாலைக்கே வழங் கப்பட வேண்டும் எனக் குறித்த கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பாடசாலைக்கு 10 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்ட நிலையில் அதில் 5 ஏக்கர் காணி மட்டுமே போதுமானது எனப் பூநகரிப் பிரதேச செயலகம் அறிவித்துள்ளதால் தாம் கவலை அடைவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அந்தப் பகுதி மக்களும், பொதுமக்களும் தெரிவித்துள்ளதாவது:-

1997 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை தற்போது 460 மாணவர்களுடன் இயங்கி வருகின்றது. எதிர்காலத்தில் பாடசாலை விரிவாக்கல் நடவடிக்கையைக் கருத்திற்கொண்டு போதிய இடவசதியை இப்போதே ஒதுக்குவது அவசியமானது.

> 5 ஏக்கர் காணியில் பாடசாலை தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. இதைவிட வெளி மாவட்ட ஆசிரியர்களின் நன்மை கருதிப் பாடசாலைக்குரிய ஆசிரியர் விடுதியும் அமைக்கப்படுதல் வேண்டும்.

வகுப்பறைக் கட்டடங்கள், விளையாட்டு மைதானம் உட்பட அனைத்து வசதிகளும் இருக்கக்கூடிய வகையில் காணியை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். 5 ஏக்கர் காணியில் பாடசாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது.

இதைவிட வெளிமாவட்ட ஆசிரியர்களின் நன்மை கருதி பாடசாலைக்குரிய ஆசிரியர் விடுதியும் அமைக்கப்படுதல் வேண்டும்.

எனவே தீர்மானிக்கப்பட்டதின் படி 10 ஏக்கர் காணியையும் பாடசாலைக்கு வழங்க வேண்டும் - என்று கோரியுள்ளனர். (ஜ-18)

# உரிய இழப்பீடுகள் வழங்கப்படவில்லை

## முல்லைத்தீவு மக்கள் விசனத்தில்

முல்லைத்தீவு. ஒக்.15

முல்லைத்தீவு மாவட்டத்தில் இறுதிப் போரின் போது இழப்புக்களை எதிர் கொண்ட மக்கள் தமக்குரிய இழப்பீடுகள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லையெனக் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

போரின்போது இங்குள்ள மக்கள் வீடு, வாகனங்கள், வீட்டுத் தளபாடங்கள், கால்நடைகள் மற்றும் பெறுமதி மிக்க சொத்துக்களை இழந்து, இடம் பெயர்ந்து தற்போது மீள்குடியமர்ந்துள்ளனர். ஆனால் இவர்களுக்குரிய இழப்பீடுகள் இன்னமும் வழங்கப்படவில்லை.

ஏராளமான குடும்பங்கள் தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பாத நிலையில் கஷ்டமான நிலையிலுள்ளன இவர்கள் தமக்குரிய இழப்பீடுகளைப் பெறுதற்கான விண்ணப்பப் படிவங்களையும் சமர்ப்பித்துள்ளனர்.

இருந்தவற்றை எல்லாம் இழந்த நிலையில் இழப்பீட்டையாவது பெற முடியுமென்ற நம்பிக்கையில் இவர்கள் உள்ளனர். எனினும் அத்தகைய இழப்பீடுகள் எதுவும் இன்னமும் வழங்கப்படவேயில்லை.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் கேட்டபோது; விண்ணப்பப் படிவங்கள் யாவும் உரிய நடவடிக்கையின் பொருட்டு மேலிடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றனர் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-500)

# பஸ் போக்குவரத்து சேவை தற்காலிகமாக நிறுத்தம்

அக்கராயன், ஒக்.15

வீதித் திருத்தப் பணிகள் காரணமாக யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி ஊடாக அக்கராயன் வரையான இ.போ.ச.பஸ் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரி 10 ஆம் கட்டைப் பகுதியில் ஐந்தடி வான் பால வேலைகள் நடைபெறுவதன் காரணமாகவே இந்த பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

பால வேலைகள் துரிதமாக நடைபெறுவதால் இன்னும் சில தினங்களில் பஸ் போக்குவரத்து வழமைக்குத் திரும்பும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பஸ் போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டுள்ளதால், முக்கொம்பன், சின்னப்பல்லவராயன்கட்டு, கண்ணகைபுரம், ஸ்கந்தபுரம், அக்கராயன், பூநகரி ஆகிய இடங்களைச் சேர்ந்த பயணிகள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-18)

# பொது முரண்பாடுகளைத் தீர்த்து போக்குவரத்தைச் சீர்படுத்துங்கள்

## கிளிநொச்சி மேற்கு மக்கள் கோரிக்கை

அக்கராயன், ஒக்.15

கிளிநொச்சி பிரதான பஸ் நிலையத்தில் இருந்து தூர இடங்களுக்குச் செல்லும் தனியார், இ.போ.ச. பஸ் ஊழியர்களிடையே முரண்பாடுகள் ஏற்படுவதால் தூர இடங்களுக்குச் செல்லும் பயணிகள் அடிக்கடி பாதிப்பை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக கிளிநொச்சி மேற்குக்கான போக்குவரத்து சேவைகளே இவ்வாறு பாதிக்கப்படுவதாகவும், இதனால் தாம் பல்வேறு இடர்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சியில் இருந்து முழுங்காவில் வரை ஆரம்பத்தில் இருந்தே தனியார் பஸ்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வந்தன. வடமாகாணத் தேர்தலுக்கு ஒரு மாதத்துக்கு முன்னரே இ.போ.ச. பஸ்கள் இந்த பாதையால் முழங்காவில் வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. இந்த நிலையில் இருதரப்புக்கும் இடையில் நேரப் பிரச்சினைகளால் அடிக்கடி மோதல் ஏற்படுகிறது. இதன் காரணமாக போக்குவரத்துப் பணிகள் பாதிக்கப்படுவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

குறித்த வழித்தடத்தில் புதுமுறிப்பு, கோணாவில், ஸ்கந்தபுரம், அக்கராயன், 8ஆம் கட்டை, 9ஆம் கட்டை, ஆனைவிழுந்தான், வன்னேரி, ஜெயபுரம், நாச்சிக்குடா, முழுங்காவில் ஆகிய இடங்களுக்குச் செல்லும் பயணிகளே இவ்வாறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முக்கிய அரச செயலகங்கள், திணைக்களங்கள், வங்கிகள், வைத்தியசாலை, தொழில் நிலையங்கள் என்பன கிளிநொச்சி நகரிலேயே அதிகம் இயங்கி வருகின்றன.

இங்கு சேவைகளையும், தொழில் வாய்ப்பையும் பெற வரும் மக்கள் மீண்டும் வீட்டுக்குத் திரும்பிச் செல்வதில் இடர்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே குறித்த முரண்பாடுகளைத் தீர்த்து கிரமமான முறையில் பஸ் சேவைகளை நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதி காரிகள் முன்வருவதுடன், தொடர்ச்சியான தடையற்ற போக்குவரத்து வசதியையும் ஏற்படுத்தித் தர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (ஜ-18)

# சிறுநீரக நோயாளருக்கான மருத்துவ உதவி கொடுப்பனவு

கிளிநொச்சி, ஒக்.15


கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவிக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாவட்ட சமூக சேவைகள் திணைக்களம், மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் நிலையம் ஆகியவை இணைந்து இந்தச் செயற்றிட்டத்தினை முன்னெடுத்துள்ளன.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் சிறுநீரக நோயாளிகளுக்கு மாதாந்தம் 500 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தச் செயற்றிட்டத்தில் கரைச்சி பிரதேசத்தைச் சேர்ந்த 7 நோயாளர்கள் உதவி பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் மாவட்டத்தில் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட ஏனைய நோயாளர்களுக்கும் இந்த உதவித் தொகையினைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக சுகாதாரப் பகுதியினர் கிராமங்கள் தோறும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-9)



கிளிநொச்சி நகரப் பகுதியில் வீதியோரக் கால்வாய்கள் அமைக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. வீதி அகலிப்பு பணிகளை அடுத்து கால்வாய்கள் அமைக்கும் பணிகள் நடைபெறுவதால் எதிர்வரும் மழைக் காலங்களில் நகரில் வெள்ள ஆபத்து குறையும் என பதிர் பார்க்கப்படுகிறது. (ஜ-18)

# பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

வவுனியா பெரியகோமரசன் குளம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பாடசாலையில் கல்வி கற்று வெளியேறிய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஜ-421)

# வாகன விபத்தில் சிப்பாய் சாவு

மன்னார் - பாப்பமோட்டை பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு இடம் பெற்ற விபத்தில் இராணுவ சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இராணுவத்தை ஏற்றிக் கொண்டு வந்த கெப் வாகனமொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் அதன் சாரதியான இராணுவ சிப்பாய் உயிரிழந்துள்ளதுடன் வேறு நான்கு வீரர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இராணுவத்தை ஏற்றிக்கொண்டு கெப் வாகனம் சென்று கொண்டிருந்த போது மாடு ஒன்று வீதியில் குறுக்காகப் பாய்ந்த போது வாகனத்தை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு சாரதி முயற்சித்த போது இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் மன்னார் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-12)

# வன்னேரி மகாவித்தியாலயத்துக்கு தற்காலிக அடிப்படையில் ஆசிரியர்

## பிரச்சினைக்கு தீர்வு என்கிறார் வலயக் கல்விப் பணிப்பாளர்

அக்கராயன், ஒக். 15

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியால யத்தில் உயர்தரக் கலைப்பிரிவுக்கு நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை தற்காலிகமாகத் தீர்க்கப்படும். விரைவில் நிரந்தரமான ஆசிரியர்களை நியமிப்பது குறித்து நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.முருகவேள்.

குறித்த பாடசாலையில் க.பொ.த. உயர்தரப் பிரிவு அண்மையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. எனினும் பிரிவுப் பாடங்களுக்குரிய ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. இந்த விடயம் குறித்து பாடசாலைத் தரப்பினர், வலயக் கல்விப் பணிமனை, அரச செயலகம் உட்படப் பல்வேறு இடங்களில் தெரியப்படுத்தி வந்தனர்.

எனினும் இந்த விடயம் குறித்து எவரும் கவனம் செலுத்தவில்லை என்று பாடசாலைத் தரப்பில் இருந்து குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது. இந்த விடயம் குறித்து கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆசிரியர் பற்றாக்குறை குறித்து எனக்கும் அரச அதிபருக்கும் முறையிட்டனர். வருட இடமாற்றங்கள் தவிர உள்ளக இடமாற்றங்கள் செய்வது தொடர்பில் தற்போது எமக்குரிய அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் வேரவில் பாடசாலை ஆசிரியர் ஒருவரை தமிழ்ப் பாடத்துக்கு எனத் தற்காலிகமாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் புவியியல் பாடத்துக்கு பட்டதாரிப் பயிலுநர் ஒருவரை நியமிப்பதற்கு அரச அதிபர் முன் வந்துள்ளார்.

விவசாய பாடத்துக்கு கிளிநொச்சி மாவட்டத்திலேயே ஆசிரி யர்கள் இல்லை. எனவே இதுதொடர்பில் நாம் ஒரு முடிவையும் சொல்ல முடியாது. புதிதாக வடக்கு மாகாணசபை இயங்க ஆரம்பித் துள்ளது. இனிமேல்தான் இவை குறித்து ஆராய வேண்டும்- என்றார். (ஜ-18)

# நினைவுக் கருத்தாடல்

மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் நினைவுக் கருத்தாடல் நிகழ்வு வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ளது.

வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் எதிர் வரும் வெள்ளிக்கிழமை முற் பகல் 10 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறும்.

நிகழ்வில் "வரலாற்றுத் திரைப் படங்கள்" என்ற தலைப்பில் கவிஞர் தனசீலனும், "புராண இதிகாசத் திரைப்படங்கள்" என்ற தலைப்பில் இலக்கியச் சுடர் ஐ.கதிர்காமசேகரனும், "சமூகத் திரைப்படங்கள்" என்னும் தலைப்பில் எஸ்.எஸ். வாசனும் உரை நிகழ்த்தவுள்ளனர். (ஜ-421)


# பட்டதாரிகள் பதிவுகளை கிளிநொச்சியில் மேற்கொள்க

இதுவரை பட்டதாரிப் பயிலுநர் நியமனங்கள் வழங்கப்படாத கிளிநொச்சி மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட பட்டதாரிகள் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி அரச அதிபர் அறிவித்துள்ளார்.

மேலும் 2012.03.30 ஆம் திகதிக்கு முன்னர் பட்டத்தினைப் பெற்று இதுவரை பட்டதாரிப் பயிலுநர் நியமனங்கள் கிடைக்கப் பெறாதவர்களில் ஏற்கனவே கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் பதிவு செய்தவர்கள், பதிவு செய்யாதவர்கள் அனைவரும் இன்றைய தினம் 15 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் தமது பதிவை மேற்கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகருக்குள் நுழைந்த யானைகள் விரட்டியடிப்பு



மட்டக்களப்பு.செங்கலடி நகருக்கு அருகில் நுழைந்த 3 காட்டு யானைகளை வனவளத்திணைக்கள அதிகாரிகள் விரட்டிக் கலைத்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை செங்கலடி நகருக்கு அருகில் உள்ள கறுத்தப் பாலத்தடியில் 3 காட்டு யானைகள் நுழைந்துள்ளன. இந்த 3 யானைகளையும் கண்டு செங்கலடி நகரில் வசிக்கும் மக்கள் அச்சமடைந்தனர்.

யானைகள் நின்றுகொண்டிருந்த இடத்துக்கு வந்த மட்டக்களப்பு வனவளத் திணைக்கள அதிகாரிகள், யானைகளை விரட்டிக் கலைத்துள்ளனர்.

பல திசைகளிலிருந்தும் வெடிகளைக் கொளுத்தி வெடிக்க வைத்தே யானைகள் விரட்டிக் கலைக்கப்பட்டன. (ச)

# திருட்டுத் தொடர்பில் ஒருவர் மாட்டினார்

மட்டக்களப்பு.ஒக்.15

மட்டக்களப்பு நகரில் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள பிரபல இலத்திரனியல் விற் பனை நிலையம் ஒன்றில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத் துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப் பட்டுள்ளார்.



இந்த இலத்திரனியல் விற்பனை நிலையம் கடந்த வியாழக்கிழமை இரவு உடைக்கப் பட் டு அங்கிருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள் கள் திருட ப்பட்டன.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர் பில் விசாரணை முன்னெடுக் கப்பட்ட நிலையில், குறித்த சந் தேகநபர் வவுணதீவுப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொத்தியா புலைப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணையின்போது கடந்த ஒரு சில வாரங்களுக்கு முன் னர் மட்டக்களப்பு நகரில் காணாமற்போனதாகக் கூறப் படும் மோட்டார் சைக்கிள் ஒன் றையும் இந்தச் சந்தேகநபரே திருடியுள்ளமை தெரியவந் துள்ளது என்று பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட் டக்களப்பு பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ச)

# கடலட்டை பிடித்தோர் பிணையில் விடுதலை



மட்டக்களப்பு.ஒக்.15

அனுமதிப்பத்திரமின்றி கடல் அட்டை பிடிக்கும் தொழில் நட வடிக்கையில் ஈடுபட்டு வந்தார் கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வெளிமாவட்டத் தைச் சேர்ந்த மீனவர்கள் மூவர் சரீரப் பிணையில் விடு விக்கப்பட்டுள்ளனர்.

இந்த மீனவர்களை வாழைச் சேனை நீதிவான் நீதிமன்றத் தில் சனிக்கிழமை முன்னி லைப்படுத்தியபோதே நீதி வான் அவர்களை சரீரப் பிணையில் விடுவித்துள் ளார்.

மட்டக்களப்பு, வாகரைப் பிர தேசக் கடலில் அனுமதிப்பத்திர மின்றி கடல் அட்டை பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந் தார்கள் என்ற குற்றச்சாட் டின் பேரில் இந்த மூன்று மீனவர் களும் சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று வாக ரைப் பொலிஸார் தெரிவித் தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பிரதேச மக்கள் செய்த முறைப் பாட்டைத் தொடர்ந்து வாக ரைப் பிரதேச கடற்றொழில் பரிசோத கரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சோதனையின் போதே அவர்கள் கைதுசெய் யப்பட் டனர் என்றும் பொலிஸார் கூறினர். (ச)

# சகல அரச ஊழியர்களுக்கும் சம்பளத்தை உயர்த்துங்கள்

## ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

2014 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் சகல அரச ஊழியர்களுக்கும் 40 வீதம் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்று இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தச் சங்கம் நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலருக்கு அனுப்பி வைத்துள்ள திட்ட வரைபுக்கான ஆலோசனை கள் அடங் கிய மனுவிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள் ளது.

இந்த மனுவில் மேலும் தெரி விக்கப்பட்டிருப்பதாவது:-

எமது சங்கத்தின் சார்பில் முன் வைக்கப்படும் ஆலோசனை கள் 2014 ஆண்டுக்கான திட்ட வரைவில் சேர்க்கப்படுமாயின் அது இந்த நாட்டினுடைய பெரும்பான்மை அரச உத்தி யோகத்தர்களான ஆசிரியர், அதிபர் ஆகியோருக்கு ஒரு வரப் பிரசாதமாக அமையும்.

அந்தவகையில், பாடசாலைக ளில் கடமையாற்றுகின்ற ஆசி ரியர்கள், தேசிய இடமாற்றக் கொள்கைக்கு மாறான விதத் தில் இடமாற்றம் வழங்கப் பட்டதாக அது மேன்முறையீடு செய்தால் முறையீட்டினை இரண்டு வாரத்துக்குள் பரி சீலனை செய்து குறித்த ஆசிரி யரை விசாரணைக்கு உட் படுத்தி இடமாற்றத்தினை உறுதி செய்தல்.

> வரவு- செலவுத் திட்டத்தில் அதிகரிக் கப்படும் கொடுப்பன வில் அடிப்படைச் சம்பளத்தில் 50 வீதத்தையும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவில் 50 வீதத்தையும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிபர்சேவை, ஆசிரியர் சேவை ஆகிய இரு சேவைகளையும் தரம் 1, 2, 3 ஆகிய தரங்களாக தரப்படுத்துவதுடன், அதிபர், ஆசிரியர்கள் 25 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருந்தால் முழுமை யான ஓய்வூதியம் வழங்க வேண்டும்.

ஆசிரியர் சேவையில் ஆகக் குறைந்தது 10 வருட கால சேவையைப் பூர்த்தி செய்தி ருப்பின் ஓய்வுநிலை பெறத் தகுதியுடையவராக கருதப்பட வேண்டும்.

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையை ஏழாம் தரத்தில் நடத்துவதற்கும், சிங்கள மொழிப் பாடசாலைகளில் தமிழ்மொழியும் தமிழ் மொழி பாடசாலைகளில் சிங்கள மொழியும் கற்பிப்பதற்கான ஆசிரியர்களை நியமிப்ப தோடு, அந்தப் பாடங்கள் தரம் மூன்றிலிருந்து கற்பிக்கப் படுதல் வேண்டும்.

வருடாந்த உயர்ச்சிப்படி ஆசிரி யர் சேவை தரம் 3 இற்கு 300 ரூபாவும், தரம் 2 இற்கு 600ரூபாவும், தரம் 1 இற்கு 900 ரூபாவாகவும் நிர்ணயிக் கப்படுவதுடன் 2014 ஆம் ஆண் டுக்கான வரவு- செலவுத் திட் டத்தில் சகல அரசாங்க ஊழி யர்களுக்கும் 40 வீத சம்பளம் அதிகரிக்கப்படல் வேண்டும்.

வரவு- செலவுத் திட்டத்தில் அதிகரிக்கப்படும் கொடுப்பன வில் அடிப்படைச் சம்பளத்தில் 50 வீதத்தையும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவில் 50 வீதத்தையும் வழங்க நடவ டிக்கை எடுக்க வேண்டும்.

ஆசிரியர்களால் மாணவர்க ளுக்கு வழங்கப்படும் சிறிய தண்டனைகள் வழங்கப்படு வதற்குத் தற்போதைய சட் டம் தடையாக அமைகிறது.

அதனால் மாணவர் மத்தியில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் சீர்கு லைவதுடன் எதிர்காலத்தில் ஒழுக்கக்கேடான சமுதா யத்தை உருவாக்குவதற்கு தற் போதுள்ள நடைமுறை வழிவகுக்கிறது. அதனால் இந்த நடைமுறையை மாற்ற வேண்டும்.-என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (ச-104)



மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஊடாக கணவனை இழந்து பெண் தலைமை தாங்கும் வறிய குடும்பங்களின் வாழ்வாதா ரத்தை கட்டி எழுப்பும் வகையில் சுயதொழில் உதவி வழங்கப்பட் டன. இந்தநிகழ்வில் மாவட்ட அரச அதிபர் திருமதி.பி.எஸ்.எம்.சாள்ஸ் ஒருவ ருக்கு சுயதொழில் உபகரணத்தை வழங்கினார்.

# அடிப்படை வசதிகளின்றி கல்முனை பஸ் நிலையம்

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் வேண்டுகோள்

அம்பாறை,கல்முனைநகரில் அமைந்திருக்கும் தனியார் பஸ் நிலையம் அடிப்படை வசதிகள் ஏதுமற்று வெறுமனே பஸ் களை நிறுத்தி வைக்கும் தரிப் பிடமாக மாறியுள்ளது.

இந்தத் தனியார் பஸ் நிலையத் தில் பயணிகள் மற்றும் தனி யார் பஸ் சாரதிகள், நடத்துநர் களுக்கான அடிப்படை வசதிகள் எதுவும் கிடையாது என்று மக்கள் விசனம் தெரிவிக் கின்றனர்.

பஸ் நிலையமென்ற பெயருக்கு கட்டடமொன்று அமைக்கப்பட் டுள்ளதே தவிர, பஸ்ஸில் பய ணம் மேற்கொள்ளவரும் பய ணிகள் அமர்ந்திருந்து, பஸ் வந்ததும் ஏறி செல்வதற்கான வசதிகள் எதுவுமில்லை.

இந்தப் பஸ் நிலையத்துக்கு வரும் பயணிகள் கால்கடுக்க பஸ் வரும் வரை காத்திருந்தே பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.



இந்தப் பஸ் நிலையத்தில் தனி யார் பஸ் சாரதிகள், நடத்துநர்க ளுக்கான ஓய்வறைகளோ, வேறு வசதிகளோ இல்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

இதேவேளை பஸ் நிலையம் குன்றும், குழியுமாகக் காணப் படுவதால், மழை காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதால் பயணிகள் பெரும் அசௌகரி யங்களுக்கு உள்ளாகின்றனர்.

இந்த தனியார் பஸ் நிலைய அவல நிலைமையைக் கவ னத்தில் கொண்டு, கல்முனை மாநகர சபை பயணிகளுக் கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முன்வர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-30)

# விழிப்புணர்வு கருத்தரங்கு

மட்டக்களப்பு.ஒக்.15

மூதூர் பிரதேச இந்து குரு மார் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பெண்க ளுக்கான விழிப்புணர்வு கருத் தரங்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு பாரதிபுரம் முன்பள்ளிப் பாடசாலையில் மூதூர் பிரதேச இந்து குரு மார் சங்கத்தின் தலைவர் இ.பாஸ்கரக் குருக்கள் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் திருகோண மலை மாவட்ட அகம் நிறுவ னத்தின் பெண்கள் பிரிவு உத் தியோகத்தர்கள் பெண்களுக் கான விழிப்புணர்வு செயற் றிட்டத்தை மேற்கொள்ளவுள் ளனர். இந்த நிகழ்வில் கடந்தப் கால போரால் பாரதிபுரத்தில் தாய், தந்தையை இழந்த பாடசாலை பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களை, தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜனார்த்த னன் கலந்து கொண்டு வழங்க வுள்ளார். (ச-40)

# மின்சாரம் பெற்ற 9 பேர் கைது

மட்டக்களப்பு.ஒக்.15

திருக்கோவில் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 9 பேர் ஞாயிற்றுக் கிழமை இரவு கைது செய்யப் பட்டுள்ளனர் என்று திருக்கோ வில் பொலிஸ்நிலையப் பொறுப் பதிகாரி உதய தென்னக் கோன் தெரிவித்தார்.

இலங்கை மின்சாரசபையின் அம்பாறை கிளையினரும் திருக் கோவில் பொலிஸாரும் இணைந்து ஞாயிற்றுக்கிழமை இரவு திருக்கோவில், விநாயக புரம், தாண்டியடி, தம்பிலுவில், தம்பட்டை போன்ற பிரதேசங் களில் சுற்றிவளைப்புச் சோதனை மேற்கொண்டனர். அதன்போது சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 9 பேர் கைது செய்யப்பட்டனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச்சாட்டுகளை இலங்கை மறுப்பது மேலும் பிரச்சினைகளை அதிகரிக்கும்



## எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

மனித உரிமை மீறல் குறித்த குற்றச்சாட்டுக்களை அரசு மறுத்து வருவது பிரச்சினைகள் மேலும் அதிகரிக்க வழி வகுக்கும் என நோர்வேயின் முன்னாள் அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இறுதிப்போரின்போது மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அண்மையில் குறிப்பிட்டிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே எரிக்சொல்ஹெய்ம் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலா ளர் பான் கீ - மூனே, இலங்கை விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை தோல்வி கண்டுள்ளது என ஒப்புக் கொண்டுள்ளார். இந்த நிலையில், இலங்கையில் ஜனநாயகத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுக் கப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# மதவாதத்தைத் தீண்டாதீரென பிக்குகளை விரட்டிய அமைச்சர்



மத பேதங்களை ஏற்படுத்தும் வகையில் செயற்படாது வெளியேறுமாறு சிஹல ராவய அமைப்பின் பௌத்த பிக்குகளை அமைச்சர் குணரட்ன வீரக்கோன் விரட்டியடித்துள்ளார்.

காலியில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் கடையொன்றை அங்குரார்ப்பணம் செய்வதைத் தடுக்கும் வகையில் சிஹல ராவய அமைப்பினர் செயற்பட்டனர். சம்பவ இடத்திற்கு விரைந்த அமைச்சர் அந்த இடத்தைவிட்டு வெளியேறிச் செல்லுமாறு பௌத்த பிக்குகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த வேளையில் அமைச்சருக்கும் சிஹல ராவய பௌத்த பிக்குகளுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. அங்கிருந்த பௌத்த பிக்கு ஒருவர் அமைச்சரை தகாத வார்த்தைகளால் ஏசியுள்ளார். அத்துடன் இனவாதத்தைத் தூண்டும் வகையிலும் அவர் அமைச்சரை ஏசியுள்ளார்.

அமைச்சரும் பதிலுக்கு இனவாதத்தைத் தூண்டும் வகையில் செயற் படவேண்டாம் என பௌத்த பிக்குகளிடம் தெரிவித்துள்ளார்.

# கான்ஸ்டபிள் விபத்தில் பலி

வான் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி இடம் ஏற்பட்ட விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார். மாரவில பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் வனிகதுங்க என்ற கான்ஸ்டபிளே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

வென்னப்புவ - லுனுவில வீதியில் சுதுவெல்ல பிரதேசத்தில் நேற்றுமுன் தினம் இரவு 11.20 மணியளவில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் கடமையை முடித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது இவ்விபத்து ஏற்பட்டது.

விபத்தில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் மாரவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின் உயிரிழந்தார். விபத்தை அடுத்து வானின் சாரதியை கைது செய்துள்ள வென்னப்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பரிந்துரைகளை 2 வாரங்களில் நடைமுறைப்படுத்த வேண்டும்

## மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்து

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் செய்யப்படும் பரிந்துரைகள் இரண்டு வாரங்களில் அமுல்படுத்தப்பட வேண்டும் என அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அப்படிச் செய்யத் தவறினால் உரிய நிறுவன பிரதானிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழு விடுக்கும் பரிந்துரைகளை சில அரச நிறுவன பிரதானிகள் செயற்படுத்தாது புறக்கணிக்கின்றனர் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. இதுகுறித்து பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த முறைப்பாடுகள் குறித்து தனியாக விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் ஆணைக்குழு கூறியுள்ளது. இது குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனும் பேச்சு நடத்தியுள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு எடுத்துள்ள இத்தீர்மானத்தை சட்ட மூலத்தில் உள்வாங்கிக் கொள்ளவென அது சட்ட மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் பின் குறித்த சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கசினோ வர்த்தகர் ஜேம்ஸுடன் அமைச்சர் லக்ஷ்மன் சந்திப்பு

உலகின் முன்னணி கசினோ சூதாட்ட வர்த்தகர் ஜேம்ஸ் பார்க்கர், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஸமன் யாப்பா அபேவர்தனவை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் கோடீஸ்வர வர்த்தகரான ஜேம்ஸ் பார்க்கர், இலங்கையில் கசினோ சூதாட்ட மையங்களை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளார்.

டி.ஆர். விஜேவர்தன மாவத்தையில் 350 மில்லியன் ரூபா செலவில் பாரியளவில் கசினோ சூதாட்ட மையம் அமைக்கப்பட உள்ளது.

ஜேம்ஸ் பார்க்கர் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளிலும் பங்கேற்பார் என சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# இருவேறு பகுதிகளில் இரு படுகொலைகள்

மினுவாங்கொடை மற்றும் ஜாஎல பிரதேசங்களில் இரண்டு கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மினுவாங்கொடை ஹொரகன் பெல்லே யகாட்டுவ என்னும் பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். 58 வயதான வர்த்தகரே இவ்வாறு சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 7.40 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் குறிப்பிட்ட வர்த்தகர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார். துப்பாக்கிச் சூடு நடத்தியவர் சிறிது தூரம் சென்று, தான் ஓட்டி வந்த மோட்டார் சைக்கிளை கைவிட்டுவிட்டு மற்றுமொரு நபரை மிரட்டி அவரது மோட்டார் சைக்கிளைப் பறித்துக் கொண்டு தப்பிச்சென்றுள்ளார்.

இதேவேளை, ஜாஎல பெங்கொட பிரதேசத்தில் படுகொலைச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. மோதல் ஒன்றின்போது இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவரே கொல்லப்பட்டுள்ளார். குடும்பப் பிரச்சினையே இந்த மோதலுக்கான காரணம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தமிழருக்கு சர்வதேசம் முன்னுரிமை ஜனாதிபதிக்கு மிகப் பெரிய தோல்வி

## விக்கிரமபாகு தெரிவிப்பு



அரசு மோசமாக செயற்படுகின்றது என்பதை சர்வதேசம் உணர்ந்துவிட்டது. அரசை விடவும் தமிழ் மக்களின் பேச்சுக்கே சர்வதேசம் முன்னுரிமை கொடுக்கின்ற மையானது ஜனாதிபதிக்குக் கிடைத்த மிகப்பெரிய தோல்வியே என்று நவசம சமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அரசு செய்த போர் குற்றங்களை தமிழ் மக்கள் உணர்ந்ததனாலேயே வடக்கிலிருந்து அரசை விரட்டியுள்ளனர். இதை அரசு நல்லதொரு பாடமாக எடுத்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் முக்கிய சர்வதேச நாடுகள் சில கலந்து கொள்ளாமையும் சர்வதேச நாடுகளிடமிருந்து நிதியுதவிகள் தடுக்கப்பட்டுள்ளமையும் இலங்கைக்கு பாரிய சிக்கலாகவே அமைந்துள்ளது.

குறிப்பாக இலங்கையில் நடை பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின்போது அரசினால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்களே இதற்கு முக்கிய காரணமாக அமைந்துவிட்டன.

ஐக்கிய நாடுகள் சபையினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நடை முறைப்படுத்தாமைக்கான பின்விளைவுகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு தற்போது அனுபவித்து வருகின்றது.

இன்று சர்வதேச நாடுகள் இலங்கை அரசை விடவும் தமிழரின் குரலுக்கே முன்னுரிமை கொடுக்கின்றன. குறிப்பாக இந்தியா, கனடா போன்ற நாடுகள் தமிழர்களின் நலனையே கருத்திற் கொண்டு செயற்படுகின்றன.

உலகில் எந்த நாட்டிலும் இல்லாத ஒரு விடயம் இலங்கையில் இடம்பெறுகின்றதென்றே குறிப்பிட வேண்டும்.

அதாவது அரசிடம் கேட்காது சிறுபான்மை மக்களிடம் அனுமதி கேட்கும் நிலைமை இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ளது. இது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மிகப் பெரியதொரு தோல்வியாகும்.

எல்லாவற்றுக்குமான இறுதி முடிவை அரசு பொதுநலவாய மாநாட் டின் பின்னர் பெற்றுக் கொள்ளும் எனவும் அவர் தெரிவித்தார்.

# சிறுவர் உரிமை பேணலில் இலங்கை முன்னேற்றம்

## யுனிசெவ் அறிவிப்பு

சிறுவர் உரிமைகளை உறுதிப்படுத்துவதில் இலங்கை முன்னேற்றம் கண்டுள்ளது என ஐக்கிய நாடுகள் அமைப்பின் இணை நிறுவன மான யுனிசெவ் தெரிவித்துள்ளது.

சிறுவர் நலன்களை மேம்படுத்த உதவிகள் தொடர்ச்சியாக வழங்கப்படும் என யுனிசெவ் நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி உனா மெக்காலீ தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மிகவும் பின்தள்ளப்பட்ட உதவிகள் தேவைப்படுகின்ற சிறுவர் சிறுமியரின் நலன்களை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில தசாப்தங்களாக இலங்கையில் அவசர மனிதாபிமான உதவிகளை வழங்குவதிலேயே யுனிசெவ் கூடுதல் கவனம் செலுத்தி வந்தது. யுத்தத்தின் பின்னரான அபிவிருத்திப் பணிகளில் காத்திரமான பங்களிப்பை வழங்க யுனிசெவ் தயார் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வடக்கு - கிழக்கை இணைக்க அமைச்சர் ஹக்கீம் முயற்சி

## விமல் குற்றஞ்சாட்டு

வடக்கு கிழக்கு மாகாணங்களை மீள இணைப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் முயற்சித்து வருகிறார் என வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ஸ குற்றம்சுமத்தியுள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்திற்கு மேலதிகமான அதிகாரங்களை பெற்றுத்தருமாறு அண்மையில் இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் ஹக்கீம் கோரினார் என ஊடகங்களில் தகவல் வெளியாகியிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதேவிதமான கொள்கைகளை பின் பற்றி வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கிழக்கு மாகாண ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முஸ்லிம் காங்கிரஸ் முயற்சிக்கின்றது. ஆட்சியைக் கைப்பற்றி வடக்கு மாகாண சபையுடன் கிழக்கை இணைக்கத் திட்டமிட்டுள்ளது.

இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இனவாதக் கொள்கைகளுக்கு நிகரானது. நாட்டின் உள்விவகாரப் பிரச்சினைக்கு உள்நாட்டு ரீதியான தீர்வுகளையே எட்ட வேண்டும்.

இதில் சர்வதேச சமூகத்தின் தலையீடு அவசியமற்றது. மக்களின் ஆணைக்கு புறம்பாக சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகளினால் மாற்றங்களை செய்ய முடியாது. இந்த விடயத்தை பிரபாகரனும், ரணிலும் முயற்சித்து தோல்வியைத் தழுவியிருந்தனர்.

புறச் சக்திகளின் ஒத்துழைப்பு மூலம் தமது நோக்கங்களை அடைய முடியும் என்ற நம்பிக்கை பிழையானது. தமிழ் பிரிவினைவாத கொள்கைகளை முஸ்லிம் மக்கள் மீது திணிப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கொழும்பு பொதுநலவாய மாநாட்டுக்கு பிரிட்டனின் பக்கத்திலிருந்து மற்றொரு இடி...?

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைக்கு வந்திருந்த வேளையில், கொலை செய்யப்பட்ட பிரித்தானிய பிரசை ஒருவரின் குடும்பத்துக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் உதவிட பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ் முன்வந்துள்ளார். பிரிட்டனின் 'கார்டியன்' நாளிதழ் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

குராம் ஷேய்க்கின் படுகொலை விசாரணையை இலங்கை அரசு வேண்டுமென்று இழுத்தடித்து வருகின்றது; தாமதப்படுத்துகிறது என்று சுட்டிக்காட்டி, பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமெரோன் கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டைப் பகிஷ்கரிக்க வேண்டுமென குராம் ஷேய்க்கின் ரொச்டேல் தொகுதியின் பிரதிநிதி சைமன் டான் சுக் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார். ஒருவார காலத்துக்குள் பிரிட்டனின் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸின் அறிவிப்பு இப்போது வெளிவந்துள்ளது.

பிரதமர் கமெரோனும் தமது கொழும்பு விஜயத்தின் போது ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் குராம் ஷேய்க் விவகாரம் குறித்து பேசப்போவதாகத் தெரிவித்துள்ளார். இந்தக் கொலை இடம்பெற்று இரண்டு வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில், நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாதது நாட்டின் மனித உரிமை துஷ்பிரயோகங்களில் குற்றஞ்சுமத்தப்படுவோர் பயமின்றி சுதந்திரமாகத் திரிவதனை அடையாளப்படுத்துகிறது.

2011 நத்தார் தின இரவில் பிரிட்டிஷ் செஞ்சிலுவைச் சங்கப் பணியாளரான குராம் ஷேய்க் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாகவும், அவரது காதலியான ரஷ்யப் பெண் படுமோசமாகத் தாக்கப்பட்டமை தொடர்பாகவும், அரச தரப்பைச் சேர்ந்த தங்காலை பிரதேசசபை உறுப்பினர் ஒருவர் உட்பட எட்டுப்பேர் கைதுசெய்யப்பட்டனர். கைதானோர் அடுத்த மாதமே பிணையில் விடுவிக்கப்பட்ட போதிலும், இதுவரை - 20 மாதங்கள் கடந்த பின்னரும் அவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப் படவில்லை!

தங்காலை நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த மாதம் இலங்கை குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் சமர்ப்பித்த மரபணுச் சான்று குறித்த அறிக்கையில், பிரஸ்தாப அரசியல்வாதியும் மற்றும் இருவரும் குற்றச்செயலுடன் தொடர்புபட்டுள்ளனர் என வெளிப்படுத்தி இருந்தனர். ஜனாதிபதியின் நண்பரான பிரஸ்தாப அரசியல்வாதிக்கு இக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புள்ளதாக சட்ட மருத்துவச் சான்றுகள் நிரூபித்துள்ள போதிலும், முறையான விதத்தில் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படாமல் அவை மூடி மறைக்கப்படுகின்றன என்று விமர்சனங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இறுதிப் போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூற இலங்கை அரசு தவறிவிட்டதாக கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் குற்றஞ்சாட்டி கொழும்பு மாநாட்டில் தாம் கலந்துகொள்ளப்போவதில்லை என்று அறிவித்துள்ள நிலையில்-

கொழும்பில் மேற்படி மாநாட்டை நடத்துவதென்ற தீர்மானம் ஆரம்பத்திலிருந்தே பெரும் சர்ச்சைக்குள்ளாகி வந்தது; வருகிறது. மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் மற்றும் நீதிக்குப் புறம்பான படுகொலைகள் ஆகியவற்றைக் காரணம் காட்டி கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் மாநாட்டைப் புறக்கணிக்கும் தமது முடிவை வெளிப்படுத்தி விட்டார்.

போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்புக் கூறத் தவறியமை குறித்து பிரிட்டன் கேள்வி எழுப்ப இருப்பது மாநாட்டில் இலங்கைக்கு சங்கடமான நிலைமையை ஏற்படுத்தலாம். இலங்கையின் நீதித்துறையில் வெளிநாடுகள் நம்பிக்கை இழக்கலாம்.

பொதுநலவாய மாநாட்டுப் பகிஷ்கரிப்புக்கு கனடா தெரிவித்த காரணங்களில் ஷிராணி பண்டாரநாயக்க அரசியல் காரணங்களுக்காக பிரதம நீதியரசர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமையும் குறிப்பிடப்பட்டுள்ளமை தெரிந்ததே.

தேங்காய் திருடிய சிறுமியைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தும் பொலிஸார், பிரிட்டிஷ் தம்பதிகளின் கொலை விவகாரத்தில் துரிதமாகச் செற்படத் தவறிவிட்டனர். இதற்கு அரச செல்வாக்கும் காரணமாக இருக்கமுடியும் என்ற சந்தேகம் எழுவது இயல்பே.

தனது ரஷ்ய நாட்டுக் காதலியை மதுபோதையில் உள்ள கும்பல் சம்பவதினத்தன்று பாலியல் தொந்தரவு செய்ததாக குராம் ஷேய்க் முறைப்பாடு செய்த வேளை ஏற்பட்ட தர்க்கத்தில், அவர் கழுத்தில் கத்தியால் குத்தப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. ஷேய்க்கின் காதலி மூர்க்கத்தனமான முறையில் கூட்டாகக் கற்பழிக்கப்பட்டு தாக்கப்பட்டமை குறித்து இலங்கைப் பொலிஸாரின் வழக்குப் பதிவேடுகளில் பதிவாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

திருகோணமலையில் நடத்தப்பட்ட ஐந்து மாணவர் கொலை தொடர்பில் மிகச் சமீபத்தில், அவசரம் அவசரமாக சிப்பாய்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. அதே போன்று தங்காலை கொலையிலும் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு பொதுநலவாய மாநாட்டுக்கு முன் விசாரணைகள் ஆரம்பிக்கப்படலாம். யார் அறிவார்...?

உண்மையை சில காலத்துக்கு மட்டும் ஒழித்து வைத்திருக்கலாம். அது தக்க தருணத்தில் வெளிப்படுத்தப்படும் என்ற நியதியில் இருந்து தப்பித்துக்கொள்வது கடினத்திலும் கடினம். இதனைச் சகல மதங்களும் சுட்டிக்காட்டுகின்றன. அவ்வாறிருக்க....!!

# சம்பந்தன் - விக்கிக்கு வலை விரிக்கும் மஹிந்த

கந்தவனம் கோணேஸ்வரன்

வடமாகாணசபை முதலமைச்சராக விக்னேஸ்வரன் ஜனாதிபதியின் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார். இது சரியான அணுகுமுறை என்றும், ஏற்றுக் கொள்ள முடியாத நடவடிக்கை என்றும் இருவேறு கருத்துகள் தோற்றம் பெற்றிருக்கின்றன. இதுவரை காலமும் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட முதலமைச்சர்கள் விடயத்தில் எழுந்திராத புதிய பார்வை இது.

இணைந்த வடக்குக் கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராசப்பெருமாளைத் தவிர ஏனைய சகல முதலமைச்சர்களும் அரச கட்சிச் சார்பானவர்களாகவே இருந்திருக்கிறார்கள். எனவே ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியை ஏற்றுக் கொள்ளுதல் என்பது சம்பிரதாய பூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் நியாயமான செயலாகவே கருதப்பட்டன. ஆனால் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் நிலையோ வேறுவிதமாக அமைந்திருந்தது.

வடபகுதி வாக்காளர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அளித்த ஒவ்வொரு வாக்கிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேல் கொண்டுள்ள நம்பிக்கையின் வெளிப்பாடு மாத்திரமல்ல, அரசில், குறிப்பாக ஜனாதிபதியின் மேல் கொண்டுள்ள நம்பிக்கையீனமும் கலந்தே இருக்கின்றது. ஜனாதிபதி தமிழ் மக்களின் நம்பிக்கையை பெற்றவராக ஒருபோதும் இருந்ததில்லை. அவரைச் சிங்கள மக்களின் நலனோம்பும் ஒரு மனிதராகவே தமிழ் மக்கள் பார்க்கிறார்கள்.

இந்த நிலையில் பதவிப்பிரமாணம் செய்வது எங்கு, எவர் முன்னிலையில் என்ற வியங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் மூடுமந்திரம் போலவே பாதுகாக்கப்பட்டமை மக்களிடையே பல்வேறுபட்ட எண்ணங்களைத் தோற்றுவிக்கக் காரணமாக அமைந்து விட்டது. சட்டம் தெரிந்த முதலமைச்சர், தலைவர் சம்பந்தனும் சுமந்திரனும் இணைந்து சட்ட நுணுக்கங்களூடாகப் பதவிப்பிரமாண விடயத்தில் ஒரு புதிய பரிணாமத்தைத் தோற்றுவிக்கப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பு தமிழ் - சிங்கள மக்கள் அனைவரிடமும் காணப்பட்டது. பதவி ஏற்புத் தொடர்பாக இவர்கள் அவ்வப்போது தெரிவித்த கருத்துகளும் இதற்கு வலுவேற்றின.

### மக்களின் எதிர்பார்ப்பு தகர்வு

ஆனால் ஈற்றில் எல்லா முதலமைச்சர்களைப் போலவே, விக்னேஸ்வரனும் ஜனாதிபதியின் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். எதிர்பார்ப்புகளும் ஊகங்களும் பலவாறாக இருக்க, பதவிப்பிரமாணம் இவ்வாறு இடம்பெற்று விட்டது. முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் ஒரு விக்னேஸ்வரர் சிலையை ஜனாதிபதி அன்பளிப்புச் செய்து தனது நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்திக் கொண்டார்.

தூரநோக்குடன் சிந்திக்கிறவர்கள் இது சரியான நடைமுறையே என ஏற்றுக் கொள் கிறார்கள். ஜனாதிபதியுடன்தான் பேசவேண் டியிருக்கிறது. ஆரம்பத்திலேயே முரண்நிலையை வளர்த்துக் கொள்ளாமல் செயல்படுவது எதிர்கால நடவடிக்கைகளுக்கு உதவியாக இருக்கும். முதல் முரண்பாடு முற்றும் முரண்பாடு என்ற நிலை ஏற்பட்டுவிடக் கூடாது. எட்டு மாகாணசபைகளும் அரச சார்பாக இருக்கும் நிலையில் ஒன்பதாவது மாகாணசபை தனித்துப் போராட வேண்டிய நிலையில் உள்ளது. எனவே சில விடயங்களில் தந்திரோபாய ரீதியாக [illegible] வேண்டியிருக்கிறது. அதுதான் புத்திசாலித்தனமும்கூட என்ற வாதங்களுடன் பதவிப் பிரமாணத்தை ஏற்றுக்கொள்கிறார்கள்.

இல்லை, போராடுவதற்கு என வந்துவிட்டபோது வளைந்துகொடுக்க வேண்டிய தேவையில்லை, நாங்கள் சரியான நியாயத்துக்காகவே போராடுகிறோம், எங்கள் நியாயங்களை வளைந்து, குனிந்து ஏன் சொல்ல வேண்டும், அதுவுமல்லாமல் முள்ளிவாய்க்கால் அவலத்தை நடத்தி முடித்த ஜனாதிபதி யைத் தவிர்த்துப் பதவிப்பிரமாணம் செய்து கொள்ள இருக்கும் வாய்ப்புகளை ஏன் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது, இப்படித் தான் பதவிப்பிரமாணம் செய்வதாக இருந்தால் ஏற்கனவே அதனைக்கூறி தெளிவுபடுத்தியிருக்கலாம் தானே என்ற சிந்தனைகள் மற்றொரு தரப்பினரிடம் காணப்படுகின்றன.

### மக்கள் நம்பிக்கை

மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையைப் பாதுகாத்து அதன்படி ஒழுகவேண்டிய பொறுப்பு வடமாகாணசபைத் தலைமையிடம் இருக்கிறது. அமைச்சர்களையும் உறுப் பினர்களையும் சரியான முறையில் வழி நடத்தி மக்கள் தேவைகளை நிறைவேற்று வதோடு, தமிழர்களின் நீண்டகாலப் போராட்ட இலட்சியத்தை நோக்கி நடைபோட வேண்டிய பொறுப்பும் அதற்கு இருக்கிறது. அரசுடன் சுமுகமான உறவுகளைப் பேண வேண்டி அதேவேளையில் இலங்கையிலுள்ள ஏனைய கட்சிகளைப் போலன்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓர் இனத்தின் விடுதலை அமைப்பு என்ற உணர்வுடனும் செயலாற்ற வேண்டிய தேவை இருக்கிறது.

### முதல்வர் பதவி முட்கிரீடம்

வடமாகாணசபை முதலமைச்சர் பதவி என்பது முட்கிரீடம் போன்றது. ஏனைய முதலமைச்சர்களைப் போல் வாகனப் பயணமும் ஆளணிகளுமாகக் காலந் தள்ளுதற்கு வாய்ப்பில்லை. அமைச் சர்களும் உறுப்பினர்களும் மாகாணத் தலைமைக்குக் கட்டுப்பட்டுக் கடுமையாக உழைக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மக்களுடைய எண்ணங்களையும் கட்சித் தலைமையின் நகர்வுகளையும் அனுசரித்துச் செயல்பட வேண்டியிருக்கிறது. ஏனெனில் இலங்கை வரலாற்றில் தமிழர்கள் ஒன்று சேர்ந்து கைப்பற்றிய மாகாண அரசு இது. தமிழர்களின் உள்ளக் கிடக்கைக்கு வடிவம் கொடுக்கும் கடப்பாட்டைக் கொண்ட தலைமை இது.

### '13' தமிழர் இலக்கு அல்ல

அரசமைப்புக்கான பதின்மூன்றாம் திருத்தச்சட்டம் தமிழர்களுடைய இலக்கு அல்ல. அதனையும் கடந்து தங்கள் இலட்சியத்தை எட்ட வேண்டிய நிலையில் தமிழர்கள் இருக்கிறர்கள். ஆனால், இலங்கை அரசோ பதின்மூன்றாம் திருத்தச்சட்டத்தில் சொல்லப்பட்ட அதிகாரங்களைக்கூட வழங்க மறுத்து வருகிறது. இவ் வதிகாரங் களை வலியுறுத்துகிறேன் பார் என்ற தோரணையில் இந்திய வெளியுறவு அமைச் சர்சல்மன் குர்ஷித்தும் வந்துபோய் இருக்கிறார். பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று அதிகாரங்களைத் தமிழர்கள் பெற்றுக்கொள்வதற்காக இந்தியா தொடர்ந்தும் முயற்சி செய்கிறது என்று கூறித் தமிழர்களை அமைதிப்படுத்த முயன்றிருக்கிறார்.

ஜனாதிபதியோ இந்திய வெளியுறவு அமைச்சருடனான சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழு வுக்கு வருவதன் மூலமே பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று தெளிவாகவே கூறியிருக்கிறார். இந்திய வெளியுறவு அமைச்சரும் அதனை ஏற்றுக்கொண்டவர் போலவே நடந்தமை கவலையளிக்கும் ஒரு நிகழ்வாகும். தமிழர் பிரச்சினைக்கான தீர்வு விவகாரமும் இழுபட்டுக்கொண்டே செல்கிறது.

### பிரிட்டனின் கண்டன மேடை

பிரிட்டன், பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொண்டு அதனை இலங்கையின் மனித உரிமை மீறல்களுக்கான ஒரு கண்டன மேடையாகப் பயன்படுத்தத் திட்டமிட்டிருக்கிறது. இலங்கை வெளியுறவு அமைச்சரோ பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ளாதிருப்பதன் மூலம் கனடா தனிமைப்பட்டு நிற்கப் போகிறது என்று கவலை தெரிவித்ததுடன் பிரிட்டன், பொதுநலவாயமாநாட்டை ஒருநாட்டின் உள்விவகாரங்களை அலசும் களமாக ஆக்கிவிடக்கூடாது என்றும் கண்டிப்பான தொனியில் கூறியிருக்கிறார்.

> அரசுடனான இணக்கப்பாடு, ஒத்துழைப்பு, முரண்படாநிலை என்பவற்றைத் தமிழர்கள் மிகவும் விரும்புகிறார்கள். ஆனால் தமது மண்ணில் தமக்கென ஓர் ஆட்சி அலகைப் பெற்றுக் கொள் ளும் இலட்சி யத்தை தம் உயிரினும் மேலாக மதிக்கிறார்கள்.

இதேவேளை, ஐ.நா மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசுக்கு விதித்த காலக்கெடுவுக்கு இன்னும் ஐந்து மாதங்களே இருக்கின்ற நிலையில் இலங்கை அரசு அது தொடர்பாக கரிசனை எதுவும் எடுத்ததாகத் தெரியவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அனுசரித்துச் செல்கின்ற ஒரு தோற்றப்பாடு உருவாவதன் மூலம் தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களுக்கான குற்றச்சாட்டிலிருந்து ஓரளவாவது தப்பிவிடலாம் என்று இலங்கை அரசு சிந்திக்கிறது. அதற்கான செயற்பாடுகளிலேயே இப்போது இறங்கியிருக்கிறது.

### தெரிவுக்குழு அழைப்பு சம்பந்தன் நிராகரிப்பு

அதன் ஒருமுகம் தான் தெரிவுக் குழுவுக்கான மீள்அமைப்பு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் பங்குபற்றுமாயின் தமிழர் பிரச்சினை அனைத்தும் விரைவில் தீர்ந்துவிடும் என்றதொனியில் ஜனாதிபதியின் அழைப்பு அமைந்திருந்தது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இதனை உடனடியாகவே மறுத்து தெரிவுக் குழுவின் மேல் தமிழர்களுக்கிருக்கும் நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

### விக்கி, சம்பந்தனுக்கு வலை விரிக்கும் மஹிந்த

இப்போது ஜனாதிபதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரையும், வட மாகாண முதலமைச்சரையும் குறிவைத்து அன்புவலையை விரிக்க முயல்கிறார். இருவரில் எவர் ஒருவர் சிக்கினாலும் பொதுநலவாயமாநாட்டில் எழக்கூடும் என எதிர்பார்க்கும் கண்டனங்களைச் சுக்குநூறாக்கிவிட முடியும் என்ற நம்பிக்கை அவருக்கு. அதேபோல் எதிர்வரும் ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டிலும் தம்பக்க நியாயங்களை எடுத்துச் செல்லலாம் எனக் கனவு காண்கிறார்.

அரசுடனான இணக்கப்பாடு, ஒத்துழைப்பு, முரண்படாநிலை என்பவற்றைத் தமிழர்கள் மிகவும் விரும்புகிறார்கள. ஆனால் தமது மண்ணில் தமக்கென ஓர் ஆட்சி அலகைப் பெற்றுக்கொள்ளும் இலட்சியத்தை தம் உயிரினும் மேலாக மதிக்கிறார்கள். அதற்காக ஏராளமான இழப்புகளையும், துயரங்களையும் தாங்கியிருக்கிறார்கள். இவற்றை மனதிற்கொண்டு வடமாகாணசபை தனது திட்டங்களை வகுத்துக்கொள்ள வேண்டும். தனது கருத்துகளைத் தெளிவாகவும் துணிச்சலுடனும் சொல்வதில் தலைவர் சம்பந்தனுக்கு இருக்கும் திறன் முதல்வர் விக்னேஸ்வரனிடமும் இருக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதில்தான் வடமாகாண முதல்வரின் வெற்றி தங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இன்று உலக வெள்ளைப் பிரம்பு தினம்



# வழிக்குத் துணையாகும் வெள்ளைப் பிரம்பு




"இடரினாலும் எம்மில் பல உறவுகள் தங்கள் விழிப்புலன்களை இழந்துள்ளார்கள், உறவுகளே, இது வேதனை தரும் விடயம் தான். இவர்களை உள்ளன்போடு அரவணையுங்கள், விதி கெட்டு வாழ்வைத் தொலைத்தவர்களல்ல இவர்கள். வையத்தில் வாழ் வாங்கு வாழ்வதற்கு வலுவுள்ளவர்கள் இவர்கள்.

விழிப்புலனற்று வெள்ளைப் பிரம்போடு வீதிகளில் உலாவரும் உள்ளங்களும் உங்கள் உறவுகளே!
எங்கள் அன்புக்குரிய உறவுகளே, இறைவனின் படைப்பாலும் எமது மண்ணைப் பொறுத்த வரையில் இடையில் ஏற்பட்ட
இடரினாலும் எம்மில் பல உறவுகள் தங்கள் விழிப்புலன்களை இழந்துள்ளார்கள், உறவுகளே, இது வேதனை தரும் விடயம் தான். இவர்களை உள்ளன்போடு அரவணையுங்கள், விதி கெட்டு வாழ்வைத் தொலைத்தவர்களல்ல இவர்கள், வையத்தில் வாழ் வாங்கு வாழ்வதற்கு வலுவுள்ளவர்கள் இவர்கள். இந்த மாற்றுத் திறனாளிகள் பூமிப் பந்தைப் புரட்டியெடுத்து சாதனைப் பட்டியலில் சரித்திரவான்களாய் மாறியிருப்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே, எங்கள் உறவுகளையும் இந்தச் சாதனையாளர்களாக மாற்றுவதற்கு உங்கள் நேசக் கரங்களை நீட்டுங்கள்.
வெள்ளைப் பிரம்பு பார்வையற்றவர்களின் அடையாளச் சின்னம்
உலக வெள்ளைப் பிரம்பு தினமான ஒக்ரோபர் 15 ஆம் நாள் சர்வதேச ரீதியாகக் கொண்டாடப்படுகின்றது. 1931 ஆம் ஆண்டு அமெரிக்கா தேசத்திலுள்ள அரிமாக்கழகம் (லயன்ஸ் கழகம்) முதன் முதலில் வெள்ளைப் பிரம்பை அறிமுகப்படுத்தியது. அதன் பின்னர் 1969 ஆம் ஆண்டு எமது நாட்டின் விழிப்புலனற்றோர் சம்மேளனம், விழிப்புலனற்றோர் மாநாடு ஒன்றிறைக் கூட்டி வெள்ளைப் பிரம்பு தினத்தை சர்வதேச தினமாக அங்கீகரிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தது. இதன் மூலம் விழிப்புலனற்றோர் மீது எமது நாடு எவ்வளவு விழிப்பாக இருக்கின்றது என்பதை உலகுக்குப் பறைசாற்றியது.
இந்த விழிப்புலன்களை இழந்த சகோதர, சகோதரிகள் வெள்ளைப் பிரம்புடன் வீதிகளில் வரும்போது அவர்கள் முற்றாகப் பார்வை அற்றவர்கள் என்பதனை நீங்கள் உணர்வீர்கள்.
சாரதிகளே,
இவர்கள் மீது அதிக கவனம் செலுத்தி, இவர்களது போக்குவரத்துக்குத் தாங்கள் உதவ வேண்டும் என இந்நாளில் வேண்டுகின்றோம்.
இதேபோன்று மாணவச் செல்வங்களே, பொது மக்களே, வெள்ளைப் பிரம்போடு வருகின்ற உங்கள் உறவுகளை நேசக்கரம் நீட்டி உதவி ஒத்தாசை புரிய வேண்டும் என இந்நாளில் உங்களை வேண்டி நிற்கின்றோம்.
நெல்லிக்கனி போன்று அங்கொன்று, இங்கொன்றாகச் சிதறிக் கிடந்த விழிப்புலன் இழந்தவர்களை ஒன்று திரட்டிய எமது வன்னி விழிப்புலனற்றோர் சங்கம், மிகக் குறுகிய காலத்துக்குள் அவர்களது வாழ்வா தாரத்துக்கான உதவிகளைச் செய்து கொண்டிருப்பதோடு இனிவரும் காலங்களில் மிகப் பெரிய உதவிகளைச் செய்யத் துடித்துக் கொண்டிருக்கின்றது என்பதையும் அறியத் தருகின்றோம்.
எனவே, எமது அன் பிற்கினிய உறவுகளே உங்கள் நேசக் கரங் களை எமது சங்கத் தின் மீது நீட்டுமாறு தயவுடன் கேட்டு நிற் கின்றோம்.

வன்னி விழிப்புலன்றோர் சங்கம், இல-156 ஏ-9 வீதி, பரந்தன், கிளிநொச்சி.

# தொற்று நோய்களில் இருந்து விடுதலை பெறுவோம்

மனப்பாங்கில் மாற்றமேற்பட்டு தொடர்ந்து கைக் கொண்டு நிலைத்து நிற்கச் செய்தால் தொற்று நோய்களும் எம்மை விட்டு அகன்று ஓடி விடும்.






உலகளாவிய கை கழுவுதல் தினம் ஒக். 15

அ.ஜென்சன் றொனால்ட்,
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்.

மனிதனது அடிப்படை சுகநிலை மேம்பாட்டுடன் நேரடியான தொடர்புகளைக் கொண்டுள்ளவை கைகளே. கைகளை தூய்மையாகப் பேணுவது. சுயசுத்தம் முதல் பொது சுகாதார மேம்பாடு வரை பெரும் பங்களிப்பை செய்கின்றது. "கைகழுவுதல்" எனும் மரபுத் தொடருக்கு ஒன்றை நீக்கி விடுதல், தொடர்பை அறுத்துக் கொள்ளல் என்ற பொருள்பட கருத்துக்களை வெளிப்படுத்திக் கொள்கிறோம். எமது பாரம்பரிய சம்பிரதாயங்களில் கூட தொன்று தொட்டு கை கழுவுதல், கால் கழுவுதல் என்பன தொடர்கின்றன. எந்த விருந்து நிகழ்வும் செம்பும், தண்ணீரும் கொடுத்து கைகழுவிய பின்பே ஆரம்பிக்கப்படுவது கண்கூடு.

**ஏன் கை கழுவ வேண்டும்**

எமது கைகளே எமது செயற்பாடுகளின் நன்மை, தீமை உட்பட பல விடயங்களை செயற்படுத்தும் கருவிகளாக காணப்படுகின்றன. கைகளில் ஏராளமான நோயாக்கும் நுண்ணங்கிகள் வந்து தங்கி விடுகின்றன. நாம் சுத்தமானவை என நினைத்துத் தொடும் பொருள்களில் இருந்து, அசுத்தமானவை என துப்புரவு செய்பவை வரை எமது கைகளை மாசு படுத்துகின்றன.
குறிப்பாக எமது உள்ளங்கைகளில் காணப்படும் இரேகைகள், விரல்களிடையேயான தவாளிப்புகள், நகங்களைச் சூழ உள்ள பிரதேசம், மணிக்கட்டுப் பகுதி என்பன அதிக நோய் கிருமிகள் தேங்கி விடக்கூடிய வகையில் அமைந்துள்ளன.
கைகளில் மட்டுமன்றி உடலின் பல்வேறு பகுதிகளிலும் இவ்வாறு நாளாந்தம் நோயாக்கும் நுண்ணங்கிகள் தேங்கிக் காணப்படும். இங்கு கைக்கும் வாய்க்குமிடையே நெருங்கிய தொடர்பு காணப்படுவதாலும், கையும் உணவும், நீர் என்பனவும் அவசியமான தொடர்புகளை ஏற்படுத்துவதாலும் கையிலுள்ள நுண்ணங்கிகள் எமது வாய்குளியினூடாக உணவுக் கால்வாயை அடையவும் அங்கு நோய்களை உருவாக்கவும் ஏதுவாகின்றது.
கைகளிலே இருபடையாக நுண்ணங்கிகள் காணப்படுகின்றன. ஒன்று வெளிப்படை இதிலுள்ள நுண்ணங்கிகளில் பெரும்பாலானவற்றை சவர்க்காரமிட்டு கழுவுவதன் மூலம் அகற்ற முடிவது ஒரு வரப்பிரசாதமே.
மற்றையது தோலின் கீழ்ப் படை கலங்களினுள் வாழும் நுண்ணங்கிகள். இவற்றைக் கழுவி அகற்ற முடியாது. அதே போல் இவை பெரும்பாலும் உணவினூடாகவோ, நேரடியாகவோ தொற்றை ஏற்படுத்துவதில்லை.
இந்த நோயாக்கும் நுண்ணங்கிகளில் பக்ரீரியாக்கள், பங்கசுகள், வைரசுக்கள் அவற்றின் முட்டைகள் என ஏராளமானவை கைகளிலே காணப்படும். இதிலும் "ஸ்ரெவைலோ கொக்கஸ் ஓரியஸ்" (Staphylo coccus aureus) எனும் நுண்ணங்கிகள் ஏராளமாகக் காணப்படுகின்றன.
உலகளாவிய ரீதியில் தொற்று நோய்கள் பரவுவதில் எண்பது வீதம் தொடுகை மூலமே பரவுகின்றன. அதாவது கைகளைச் சரியான முறையில் சவர்காரமும் நீரும் கொண்டு கழுவினால் 80 வீதமான தொற்று நோய்களைத் தடுக்க முடியும் என்பதே உண்மை.
ஆனால் அபிவிருத்தியடைந்த நாடுகளில் கூட இதன் நிலை கேள்விக் குறியே. ஆக சுகாதார நிலையில் கீழ் நிலையில் இருக்கும் ஆசிய நாடுகளை நோக்கினால் இதன் நிலை பரிதாபமாகவே இருக்கும்.

**நோய் நிலைகள்**

கைகளிலுள்ள கிருமிகள் மூக்கினூடாகவும், வாயினூடா கவும், காயங்களூடாகவும் சென்று பல தொற்று நோய்களை ஏற்படுத்துகின்றன.
குறிப்பாக தடிமன், இருமல், நிமோனியா, வயிற்றோட்டம், வயிற்றுளைவு, வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல் என அடுக்கிக் கொண்டே போகலாம்.
சிறுவர்களில் உணவுக் கால்வாயில் ஏற்படுகின்ற தொற்று நோய்களினால் ஏற்படுகின்ற இறப்புகளில் 80 வீதம் வரை முறையான கை கழுவுதலை மேற்கொண்டால் தடுத்துவிட முடியும்.

**கை கழுவுதல் என்றால் என்ன?**

கை கழுவுதல் எனும் செயற்பாட்டிற்கு மூன்று முக்கிய விடயங்கள் தேவை. ஒன்று கை; மற்றையது சவர்க்காரம்; இன்னொன்று நீர். இந்த மூன்றும் சேர்ந்து கைகழுவுதல் இடம்பெற்றால் மட்டுமே அது நோய்களிலிருந்து எம்மைக் காக்கும்.
சவர்க்காரம் ஏராளமான நோய்க் கிருமிகளை நீக்க வல்லது. இதை விட அல்கஹோல் (Alcohol) அதிகளவான நுண்ணங்கிகளை நீக்கக் கூடியது. சவர்க்காரமானது 100 வீதம் கிருமிகளை கொல்வதல்ல. ஆனால் தொற்றுக்களை ஏற்படுத்தும் நுண்ணங்கிகளை குறைக்கின்றது.
எனவே எமக்கு நோய் கிருமிகளின் தொற்றுதலில் இருந்தும் நோயிலிருந்தும் பாதுகாப்பு கிடைக்கின்றது.
சாதாரண தடிமனுக்கு கூட அதன் தாக்கத்தையும், பரவுதல் வேகத்தையும் கட்டுப்படுத்த அடிக்கடி சவர்க்காரமிட்டு கை கழுவுவதே சிறந்ததென்றால் பாருங்களேன்.

- ◆ கைகளில் நகங்கள் கட்டையாக வெட்டப்பட்டிருத்தல்.
- ◆ எப்போதும் சமைக்கும் முன் கை கழுவுதல்.
- ◆ கழிப்பறைக்கு சென்று வந்ததும் கை கழுவுதல்.
- ◆ உணவருந்த முன் கை கழுவுதல்.
- ◆ பொது போக்குவரத்தில் பயணித்த பின் கை கழுவுதல்.
- ◆ குழந்தைகளைப் பராமரித்த பின் கை கழுவுதல்.
- ◆ உணவுகளை கையாளும் முன் / பரிமாறு முன் கை கழுவுதல்.
- ◆ மூக்குச் சிந்திய பின் கை கழுவுதல்.

என முக்கியமானவற்றை பட்டியல் படுத்தலாம். இதனை இலகுவாக குறிப்பிடின் மூக்கு, வாயினுள் கை வைக்க முன் அல்லது உண்ணும் உணவை தொடுவதற்கு முன் கை கழுவுதல் மிகச் சிறந்தது.

**பழக்கவழக்கமாக்குவது எப்படி**

எந்த ஒரு பழக்கமும் தினந்தினம் அல்லது தொடர்ந்து செய்து வந்தால் அது வழக்கமாக ஆகிவிடும். அதாவது அறிவுத் திறன் ஊடாக மனப்பாங்கு மாற்றம் ஏற்பட்டுவிட்டால் எந்த விடயமும் மாறாது நின்று நிலைத்து விடும்.
எனவே நாமும் சவர்க்காரமிட்டு கைகழுவுவதை பழக்கவழக்கமாக்க, அதாவது மனப்பாங்கில் மாற்றமேற்பட்டு தொடர்ந்து கைக்கொண்டு நிலைத்து நிற்கச் செய்தால் தொற்று நோய்களும் எம்மை விட்டு அகன்று ஓடி விடும்.
இதனை உணர்ந்து அதாவது உலக மக்கள் சரியாக கை கழுவாமல் சாப்பிடுகிறார்கள் என்பதாலேயே "உலகளாவிய கைகழுவுதல் தினம்" ஒக்ரோபர் 15 இல் அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்தக் கை கழுவுதல் பழக்கத்தை பழக்கவழக்கமாக்குவதற்காகவே சுகாதாரதட திணைக்களமும் சுகாதார மேம்பாடு சார் செயற்பாடுகளில் முனைப்புடன் ஈடுபட்டுவரும் சர்வதேச, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களும் பாடசாலை மட்டத்தில் கை கழுவுதல் தினத்தை சிறப்பாக நினைவுகூர்ந்து செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. இதற்கு கல்வித் திணைக்களமும் நேரான சிந்தனையுடன் செயற்படுகின்றது.
எனவே நாங்கள் கை கழுவுதல் என்பதன் முக்கியத்துவத்தையும் பெறுமதியையும் நன்குணர்ந்து அதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பஸ் தரிப்பிடம் அமைக்க விரும்புவோர் தொடர்பு கொள்க

பூநகரி, ஒக். 15

பூநகரிப் பிரதேச சபை எல்லைக்குள் வீதியோரங்களில் ஞாபகார்த்தமாக பஸ்தரிப்பு நிலையங்களை அமைக்க விரும்புவோர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச சபைத் தலைவர் கேட்டுள்ளார்.

வீதி அபிவிருத்திப் பணிகள் காரணமாக முன்னர் கோரியவர்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. தற்போது வீதி திருத்தப் பணிகள் நிறைவடைந்து வருவதால் ஞாபகார்த்தமாக பஸ்தரிப்பு நிலையங்களை அமைக்க விரும்புபவர்கள் அதற்காக விண்ணப்பிக்க முடியும்.

பூநகரி-பரந்தன் வீதி வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. இதில் தற்போது பஸ்தரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கு அனுமதிவழங்கப்படும்எனவும் அவர் தெரிவித்துள்ளனர். (ஐ)



வவுனியா இந்துக் கல்லூரியைச் சேர்ந்த குமாரசுவாமி நிரஞ்சன். செல்வி தயாமதி சிவகுரு ஆகியோருக்கு "பிரதீபா பிரபா" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. கௌரவிக்கப்பட்ட ஆசிரியர்கள், கல்லூரியின் முதல்வர் திருமதி இ.நடராசாவுடன் அமர்ந்திருக்கின்றனர். (ஐ-422)

## குளம் புனரமைப்பு துரிதகதியில்

அக்கராயன், ஒக். 15

துணுக்காய் அம்பலப்பெருமாள் குளத்தின் புனரமைப்புப் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் குளத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டபோதும் அவை நீண்டகாலமாக கிடப்பில் போடப்பட்டிருந்தன. இந்த நிலையில் கிராம மக்கள் சம்பந்தப்பட்ட அமைப்புக்களிடம் கேட்டுக் கொண்டதற்கு அமைய பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மழைகாலம் நெருங்குவதால் அதற்கு முன்னர் பணிகளை முடிவுறுத்துமுகமாக இந்த வேலைகள் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1968 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அம்பலப் பெருமாள்குளம் குடியேற்றத்திட்டத்தில் 100 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்தக் குளத்தின் மூலம் நெற் செய்கையே இந்த மக்களின் பிரதான தொழிலாகக் காணப்படுகின்றது. (ஐ-18)

## விளையாட்டு மைதானம் கோரும் கரந்தாய் மக்கள்

கிளிநொச்சி, ஒக். 15

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கரந்தாய் கிராமத்துக்கு விளையாட்டு மைதானமொன்றை அமைக்க காணி வழங்குமாறு அந்தப் பகுதி மக்கள் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

102 குடும்பங்கள் வாழும் இந்தக் கிராமத்தில் விளையாட்டு மைதானம் இல்லாத காரணத்தால் இளைஞர், யுவதிகள் போட்டி நிகழ்வுகளுக்கு தம்மை தயார் செய்வதில் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக பிரதேச செயலக கூட்டங்களின் போது கரந்தாய் கிராம பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்தும் பயன் கிடைக்கவில்லை என்று குற்றம் சாட்டப்படுகிறது. (ஐ-18)

## பூநகரியில் புதிய சந்தை இரு மாதங்களில் பணி பூர்த்தி

பூநகரி, ஒக். 15

பூநகரி சங்குப்பிட்டி வீதியில் அமைக்கப்பட்டுவரும் சந்தைக் கட்டட வேலைகள் இரண்டு மாதங்களில் நிறைவடையும் என பூநகரிப் பிரதேச சபைத் தலைவர் பொ.சிறீஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குறித்த சந்தைப் பகுதியின் இருமருங்கிலும் பஸ்தரிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இவை மக்கள் சந்தைக்கு வந்து செல்வதற்கு வசதியாக அமையும்.

இதேவேளை குறித்த சந்தைப் பகுதியிலும், வாடியடிப் பகுதியிலும் ஓட்டோ தரிப்பு நிலையங்களை அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது குறித்து ஓட்டோ சங்க நிர்வாகிகளுடன் கலந்துரையாடப்பட்டு: ஒழுங்குகள் மேற்கொள் ளப்படும்.

இதன் மூலம் அத்தியாவசிய சேவைகளைப் பெறவும் நாளாந்த சந்தை சேவைகளைப் பெறவும் மக்களுக்கு வசதிகள் ஏற்படும்- என்றார். (ஐ)

## பூநகரிப் பிரதேச மக்களுக்கு குடி தண்ணீர் விநியோகம் சீரில்லை

### அதிகாரிகளின் அசமந்த நிலையால்

யாழ்ப்பாணம், ஒக்.15

நீர் விநியோகத்துக்கென நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ள போதும் அதிகாரிகளது அசமந்தப் போக்கால் பூநகரி பிரதேச சபைக்கு உட்பட்ட மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் சீராகக் கிடைக்கப் பெறுவதில்லை என்று பாதிப் படைந்துள்ள மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

பூநகரி பிரதேச சபையின் குறிப்பிட்ட சில அதிகாரிகள் இவ்விடயத்தில் அசமந்தமாக இருப்பதால் மக்களுக்கான குடிதண்ணீர் சீராகக் கிடைக்கப் பெறவில்லை. இடர் முகாமைத்துவ அமைச்சால் கிளிநொச்சி அரச செயலகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி கடந்த வருடமே பூநகரி பிரதேச செயலகத்தின் ஊடாக பூநகரி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.



அந்த நிதியைக் கொண்டு நீர் விநியோகத்துக்கான லொறி. பவுசர் திருத்துவது போன்ற செலவீனங்கள் வரவு செலவுத் திட்டத்திலேயே சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் கடந்த 3 மாதங்களாக இது தொடர்பில் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் சபையால் எந்தவித நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படவில்லை. அதிகாரிகளது இந்த அசமந்தப் போக்கால் குடிதண்ணீர் பெற அந்தப் பகுதி மக்கள் அலைந்து திரிய வேண்டியுள்ளது. (வ-14)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** பழைய நல்ல சம்பவங்களை நினைவுகூர்ந்து மகிழ்வீர்கள். உத்தி யோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். ஆடம்பரச் செலவுகளை தவிர்ப்பீர்கள். மனக் குழப்பங்கள் நீங்கும்.

**இடபம்:** ஆரவாரமின்றிச் சில வேலைகளை முடிப்பீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. தன்னம்பிக்கை துளிர்விடும். அரச வேலைகளிலிருந்து வந்த தடைகள் நீங்கும்.

**மிதுனம்:** உணர்ச்சிவசப்படாமல் அறிவுபூர்வமாக முடிவெடுக்கப்பாருங்கள். திட்டமிடாத செலவுகளும், பயணங்களும் குறுக்கிட்டாலும் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**கடகம்:** புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் வரும். எதிலும் அவசரப்பட வேண்டாம்.

**சிங்கம்:** அதிரடியாகச் செயற்பட்டு சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்களில் வெற்றியுண்டு. மாணவர்களின் சிந்தனைத்திறன் அதிகரிக்கும்.

**கன்னி:** சில தினங்களாக முடியாமல் இழுத்தடித்த காரியங்களெல்லாம் இனி முடிவுக்கு வரும். அரச வேலைகளில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள மகிழ்ச்சிதரும்.

**நாளை**

புரட்டாதி-30 புதன்கிழமை 16.10.2013
திதி: துவாதசி மு.ப.08.20 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி பி.இ.03.21 வரை
சுபநேரம்: 04.32 - 06.02 வரை
இராகுகாலம்: 12.02 - 01.32 வரை

**துலாம்:** மன உளைச்சல் நீங்கும். கலகலப்பாகச் சிரித்துப்பேசும் சூழல் அமையும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** ஆடம்பரச் செலவுகளை குறைப்பீர்கள். நண்பர்கள், உறவினர்களின் உதவி கிடைக்கும். மனக்குழப்பங்கள் நீங்கும். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**தனுசு:** சோர்வு. அலைச்சல் நீங்கி ஆனந்தமாகக் காணப்படுவீர்கள். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அரசியல்வாதிகளின் ஆதரவு கிடைக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**மகரம்:** கடந்தகாலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாகப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டாம். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக்கொள்வது நல்லது.

**கும்பம்:** யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். முக்கிய கோப்புகளைக் கையாளும்போது அலட்சியமாக இருக்க வேண்டாம். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். எதிலும் பொறுப்புணர்ந்து செயற்படுங்கள்.

**மீனம்:** நீண்டநாள் எண்ணங்கள் பூர்த்தியாக முயற்சிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். [illegible] ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | 6 | | | | 5 | |
| | 2 | 7 | | | | | | |
| 5 | 1 | 3 | | | | | 6 | |
| 8 | 7 | | 5 | | 1 | | 9 | 3 |
| | | | 8 | | 4 | | | |
| 9 | 5 | | 3 | | 7 | | 4 | 6 |
| | 8 | | | | | 6 | 1 | 5 |
| | | | | | | 7 | 2 | |
| | 6 | | | | 2 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 6 | 5 | 2 | 4 | 8 | 3 | 9 |
| 8 | 4 | 3 | 1 | 7 | 9 | 6 | 2 | 5 |
| 5 | 9 | 2 | 3 | 8 | 6 | 1 | 4 | 7 |
| 6 | 8 | 1 | 4 | 9 | 5 | 2 | 7 | 3 |
| 2 | 7 | 5 | 8 | 1 | 3 | 9 | 6 | 4 |
| 4 | 3 | 9 | 7 | 6 | 2 | 5 | 8 | 1 |
| 1 | 2 | 4 | 9 | 3 | 8 | 7 | 5 | 6 |
| 3 | 6 | 7 | 2 | 5 | 1 | 4 | 9 | 8 |
| 9 | 5 | 8 | 6 | 4 | 7 | 3 | 1 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலி லும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னணி வர்த்தக அடையாளங்களை அறிமுகப்படுத்தும் யூ.கே.ஈ நிறுவனம்



சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு சம்பத் வங்கி சுன்னாகக் கிளையில் சேமிப்பு கணக்கைப் பேணிவரும் சிரேஸ்ட பிரஜைகளுக்கு இலவச மருத்துவப் பரிசோதனைக்கான சான்றிதழ்கள் கிளை முகாமையாளரினால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (த)

உலகெங்கிலும் எட்டுக்கும் அதிகமான வர்த்தக நாமங்களுடன் பல்வேறு தொழில் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் வெஸ்டர்ன் இன்டர்நெஷ னல் குழுமம் (WIG) தற்போது யூ.கே.ஈ பிறைவட் லிமிடட்டுடன் கைகோர்ப்பதன் ஊடாக இலங்கைக்குள்ளும் பிரவேசிக்கின்றது.

உலகின் முன்னணி வர்த்தக நாமங்கள் பலவற்றினை தம் மகத்தேக கொண்டுள்ள வெஸ்டர்ன இன்டர்நெஷனல் குழுமம், கடந்த 28 வருடங்களாக வர்த்தக உலகில் தமக்கான தனித்து வமான இடத்தை கட்டியெழுப்பியுள்ளது. GEEPAS, ROYALFORD, YOUNGLIFE, PARAJOHN, NESTO, SHOEPOINT போன்ற வர்த்தக நாமங்கள், வெஸ்டர்ன் இன்டர்நெஷனல் குழுமத்தினுடையதாகும். 12இற்கும் அதிகமான நாடுகளில், ஏழாயிரத்திற்கும் அதிகமான ஊழியர்களை கொண்டு வெஸ்டர்ன் இன்டர்நெஷனல் நிறுவனம் செயற்பட்டு வருகின்றது. டுபாயில் தலைமையகத்தை கொண்டதாக இயங்கி வரும் வெஸ்டர்ன் இன்டர்நெஷனல் நிறுவனம் பல்வேறு தொழில் துறைகளிலும் தடம் பதித்து வருகின்றது.

இந்த நிலையில், இலங்கையில் இலத்திரனியல் உபகரணங்கள், வீட்டு பாவனைப் பொருட்கள் மற்றும் இன்னபிற உதிரிப்பாகங் களின் விற்பனையில் முன்னணி நிறுவனமான தடம்பதித்துள்ள யூகேஈ நிறுவனத்துடன் கைகோர்க்கும் வெஸ்டர்ன் இன்டர்நெஷ னல் குழுமம், GEEPAS மற்றும் ROYALFORD வர்த்தக நாமங்களை இலங்கையில் அறிமுகப்படுத்துகின்றது.

GEEPAS சுமார் மூன்று தசாப்தங்களாக சந்தையில் முன்னணி



வர்த்தக நாமாக திகழும் GEEPAS மின்னி யல் உப கரணங்கள், இலத்திரனியல் உபகரணங்கள், வீட்டு தேவை உபகரணங்கள் என 82இற்கும் மேற்பட்ட நாடுகளில் தமது உற் பத்திகளை விற்பனை செய்து வருகின்றது. சுமார் 1500 வெவ் வேறு விதமான பொருட்களை GEEPAS உற்பத்தி செய்கின்றது. உலகின் முன்னணி இலத்திரனியல் வர்த்தக நாமமான GEEPAS, பொழுது போக்கு உபகரணங்கள், வீட்டு மின் னியல் உபகரணங்கள், தனிப்பட்ட சேமிப்பு உதிரிப்பாகங்கள், மற்றும் மின்விளக்குகள் என பல்வேறு வகையிலான உற்பத்திப் பொருட்களை தம்மகத்தே கொண்டுள்ளது.

எப்போதும், சிறந்த, தரமான, புதிய தொழில் நுணுக்கத்துட னான புத்தாக்கமான உற்பத்திகளை வாடிக்கையாளர்களுக்கு கொண்டு சேர்ப்பதே, GEEPASஇன் பிரதான இலக்காக இருக்கின்றது. ROYALFORD வீட்டு உபகர ணங்களிற்கான உற்பத்தியில் முன்னணி வர்த்தக நாமமாக ROYALFORD திகழ்கின்றது. வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சர்வதேச ரீதியிலான தரமான பொருட்களை கொண்டு சேர்ப்பதனை இலக்காகக் கொண்டு ROYALFORD உற்பத்திகள் சந்தைக்கு கொண்டு வரப்படுகின்றன.



ஹற்றன் நஷனல் வங்கி பத்தும் விமன சீட்டிழுப்பில் 10 ஆயிரம் ரூபா பரிசை வென்ற மாணவி செல்வி சி.வித்யாவின் பரிசை அவரின் தந்தை யாழ்.மெற்றோ கிளை முகாமையாளர் சுந்தரேஸ்வரனிடம் இருந்து பெற்றுக்கொள்கிறார். உதவி முகாமையாளர் வாதுலன் மற்றும் மாணவர் சேமிப்பு அலகு பிரதிநிதி செல்வி துதிகரா அருகில் உள்ளனர். (த)

# தனியார் உயர்கல்வி கருத்துக்கணிப்பில் 1 ஆவது இடத்தைப் பெற்றுள்ள




# BCAS

இலங்கையின் பிரபல வர்த்தக சஞ்சிகையான LMD இனால் உயர் கல்வி நிறுவனங்கள் தொடர்பாக அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின்படி தனியார் உயர்கல்வி நிறுவனங்களுள் 1 ஆவது இடத்தை BCAS Campus பெற்றிருக்கிறது. உண் மையில் இந்த கருத்துக்கணிப்பு LMD சஞ்சிகைக் காக TNS Lanka என்ற நிறுவனத்தினால், தனியார் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு மத்தியில் நடத்தப்பட்டது.

43 உயர் கல்வி நிறுவனங்களுக்கு மத்தியில் நடத் தப்பட்ட இந்த ஆய்வில் BCAS Campus 4 ஆவது இடத்தைப் பெற்றிருக்கும் அதேவேளை முதல் 3 இடங்களை அரசசார்பு நிறுவனங்களே பெற்றிருக் கின்றன. அந்த வகையில் தனியார்துறை உயர் கல்வி நிறுவனங்களுக்கு மத்தியில் முதலாவது இடத்தை BCAS Campus 4ஆவது இடத்தைப் பெற்றிருக்கிறது.

உயர்கல்வி நிறுவனம் ஒன்றை தெரிவு செய்கின்ற போது மாணவர்கள் கண்டிப்பாக கவனிக்க வேண் டிய 18 வகையான அம்சங்கள் அடிப்படையிலேயே குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிறந்த துறைகளில் உள்நாட்டுப் பல்கலைக் கழகங் களில் உயர் கல்விக்கான வாய்ப்புக்களைப் பெறத் தவறும் மாணவர்களுக்கு மேற்சொன்ன பிரச்சினை களுக்குத் தீர்வாக அமையும் உயர்கல்வி வாய்ப் புக்களை வழங்குகின்ற முன்னணி நிறுவனமாக BCAS Campus திகழ்கிறது. கடந்த 14 வருடங்களில் பல்வேறு உயர்கல்வி வாய்ப்புக்கள் மூலமாக ஆயிரக்கணக்கான மாணவர்களின் தொழில் வெற்றிக்கு வழிகாட்டியதன் காரணமாக இன்று BCAS Campus மாணவர்களினதும் பெற்றோர்களி னதும் உச்ச நம்பிக்கையை வென்ற தனிச் சிறப்பு மிக்க உயர்கல்வி நிறுவனமாகத் திகழ்கிறது.

இந்த நிறுவனமானது பல்வேறு உயர்கல்விப் பீடங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. School of Business Management, School of Building Studies, School of Engineering, School of Legal Studies, School of Computing, School of Health Science, மற்றும் ELTU (English Language Teaching Units) ஆகியனவே இலங்கையில் மாணவர்கள் தத்தமது துறைகளில் உயர் கல்வியைத் தொடர்கின்ற போது அவர்களின் துறைகளுக்கேற்ற விஷேட ஆங்கிலப் பயிற்சிகளை BCAS Campus வழங்கு கிறது.

கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர் தொடர்ந்தும் என்ன செய்வதென்று தெரி யாமல் மாணவர்கள் முடங்கிவிடாமல் இருப்பதனை உறுதிப்படுத்தும் முகமாக அவர்களுக்கான தொழிற் பயிலுநர் வாய்ப்புக்கள் அல்லது தொழில் வாய்ப்பு களை அல்லது தொடர் உயர்கல்வி வாய்ப்புக்களை BCAS Campus வழங்குகிறது. இந்த சேவைகள் அனைத்தும் BCAS Placement Division ஊடாக மாணவர்களுக்கு முழுக்க முழுக்க இலவசமாகவே வழங்கப்படுகிறது என்பதுமற்றுமொருசிறப்பம்சமாகும். BCAS வழங்கும் உயர்கல்வி வாய்ப்புக்கள் Computing, Software Engineering, Quantity Surving, Business Management, Law, Bio medical Science, Civil Engineering, Telecom Engineering ஆகிய பல்வேறு துறைகளிலும் வழங்கப்படுகின் றன. இந்தப் பட்டப் படிப்புக்கள் Degree Foundation, HND, Top up degrees மற்றும் Master Degrees ஆகிய பல்வேறு மட்டங்களில் வழங்கப்படுகின்றன. இத்துறைகளிலான பட்டப்படிப்புக்களை மாணவர் கள் BCAS Campus இல் முழுமையாக இலங் கையிலேயே பூர்த்தி செய்ய முடியும். அல்லது பட்டப் படிப்பின் முதற் பகுதியை இலங்கையிலும் அதன் இறுதிப் பகுதியை வெளிநாட்டு (UK, Maalasia, Australia) பல்கலைக்கழகங்களிலோ அல்லது தொழில் வாய்ப்புடன் கட்டார் நாட்டிலோ பூர்த்தி செய்ய முடியும்.

கொழும்பில் தனது பிரதான வளாகத்தைக் கொண் டிருக்கும் BCAS Campus தனது ஏனைய வளாகங் களை தெஹிவளை, கண்டி, குருநாகலை, மட்டக்க ளப்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களிலும் கொண்டிருக்கிறது. அத்தோடு கட்டார் நாட்டிலும் கிளை நிலையம் ஒன்றைக் கொண்டிருக்கிறது.

உயர் தகைமையைக் கொண்ட 150 இற்கும் அதிக மான விரிவுரையாளர் குழாம், மிகச் சிறந்த கற்றல் சூழலும் வசதிகளும், சர்வதேச புகழ் மிக்க பல்க லைக்கழகங்கள் உடனான இணைப்பு, வசதியான கட்டண அமைப்பு, மிகச் சிறந்த நடைமுறைப் பயிற்சிகள் மற்றும் சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழ்கள் என்பன BCAS Campus இன் பெரு மைமிக்க இந்த அடைவுகளுக்கான காரணங்களாகும். BCAS Campus வழங்கும் பாடநெறிகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான மேலதிக விவரங் களை இல.16 பருத்தித்துறை வீதி, (வேம்படிச் சந்தி) யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அல்லது 0777 102 131 அல்லது 021 221 9910 ஆகிய இலக்கங்களி னூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனங்களில் நீங்கா இரண்டாமாண்டுகள்

குழந்தையாய் மண்ணில்
1924 - 12 - 22

தெய்வமாய் விண்ணில்
2011 - 10 - 08

அமரர்
ஸ்ரீமான் கலாநிதி (டாக்டர்)

**இளையதம்பி**
**விக்னராசா (J.P)**



அவர்களின் மனங்களில்
நீங்கா இரண்டாமாண்டுகள்

திதி : 15.10.2013 துவாதசி

புன்னாலைக்கட்டுவன் எனும் புண்ணிய மண்ணில்
1924 மார்கழி 22இல் அவதரித்த - அப்பாவே!
தூய சைவ பரம்பரையில்
தூயவனாய் அவதரித்து வாழ்ந்த - அப்பாவே!
விவசாயச் செய்கையில் உழைத்து
வியத்தகு சேவைகள் பல செய்த - அப்பாவே!
ஆயக்கடவை விநாயகனுக்கு ஆலயக் கோபுரம்
ஸ்பன மண்டபம், மகா மண்டபம், அன்னதான மணி மண்டபம்
தன் பொருள் கொண்டு தனி மனிதனாய் அமைத்து
சாதனை படைத்த அப்பாவே!
பொதுச்சேவைகளில் காலம்போக
பிந்திய திருமண வாழ்கையில் இருபது ஆண்டின் பின்
பிள்ளைச் செல்வங்களாய் ஐம்பத்துமூன்று அகவையில்
பிள்ளையாரின் அருளால் உமா, வன்னி என்று எம்மைப் பெற்று
பார்போற்ற வளர்த்த - அப்பாவே!
சமூக சேவைக்கு கௌரவமாக சமாதான நீதிவான்
சென்னை பல்கலையின் டாக்டர் பட்டம் பெற்ற
சாதனை மனிதன் அப்பா நீங்கள்
எமது குடும்பத்திற்கே தீமையான
ஒக்ரோபர் மாதம் 08ஆம் திகதி 2011இல்
எமது குலதெய்வம் காலஞ் சென்ற எமதருமை - அப்பாவே!
புன்னாலைக்கட்டுவன் மண்ணில் நீங்கள் செய்த
புகழ்பூத்த சேவைகள் இன்றும் தொடர்கிறது - எம்மால்
மக்கள் மனங்களில் மறவா நினைவுடன் வாழும்
எங்கள் அப்பாவின் நினைவுகள்
எமதுயிர் வாழும்வரை இருக்கும்.

(32691) (7.6.3)

*அன்னாரின் ஆத்மசாந்திக்காக*
*தினமும் வேண்டி நிற்கும்*
குடும்பத்தினர்
மகன் வி.வன்னியநாதன்
(வன்னி)
ஜேர்மனி
T.P : 04974611808680

# மரண அறிவித்தல்

## திருமதி கோமேதகவல்லி வேலாயுதம்



யாழ்- மானிப்பாய் வீதி, கொட்டடியைச் சேர்ந்தவரும், லண்டனில் சிறிது காலம் வசித்தவருமாகிய திருமதி கோமேதகவல்லி வேலாயுதம் (11.10.2013) வெள்ளிக்கிழமை இரவு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற கந்தையா வேலா யுதத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-பராசக்தி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா- இளையபிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரை சபாரத் தினத்தின் சகோதரியும், சீவா (லண்டன்) அவர்களின் பாசமிகு தாயும், சறோஜினி (லண்டன்) அவர்களின் அன்பு மாமியும், டாக்டர் சஞ்சீவன் நந்தகுமார் (ஆஸ்திரேலியா), சுஜிதா சஞ்ஜீவன் (ஆஸ்திரேலியா), டாக்டர் றெஜிதா சீவா (லண் டன்), டாக்டர் பவித்தா சீவா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், தருண் சஞ்சீவனின் (ஆஸ்திரேலியா) பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2013) செவ்வாய்க் கிழமை பி.ப 2.00 மணியளவில் இல.65, சிவன் பண்ணை வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சீவா குடும்பம்** (மகன்-லண்டன்)
**021 222 6360**

(32752)(7,6,3)

"நம் காத்திரமான பொழுதுகளுக்கு கால்கோளானவர்களே"



அமரர் மரியாம்பிள்ளை
எட்வின் ஜோசப்



அமரர் எட்வின் ஜோசப்
இராஜமலர்

நெஞ்சினிக்க நாவினிக்க நித்தம் செவியினிக்க
நினைவில் நிழலாடும் எட்வின் யோசப் - இராஜமலரின்
கொஞ்சு மொழியால் குளிர்வித்து கட்டியணைத்து
குவலயத்தில் வாழ்வும் வளமும் தந்து மகிழ்வித்து
நெஞ்சமதில் நீங்காத நினைவுதனை நிலைநிறுத்தி
நீண்ட நெடும்பயணத்தில் ஈராண்டும் மூவாண்டும்
தஞ்சமெனப் பரம பிதாவின் பாதம் அடைந்து விட
தமியேம் [illegible]

என்றும் உங்கள் நினைவில் பிள்ளைகள்.

(32757)(10,6,3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனன் சிற்பி ஜெயரத்தினத்தின் 100 ஆவது பிறந்தநாள் நிகழ்வுகள்

வலி.வடக்கு, ஒக்.15

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் நவ மகாஜனன் சிற்பி தெ.து.ஜெயரத்தினத்தின் நூறாவது பிறந்தநாள் கொண்டாட்ட நிகழ்வுகள் இன்று செவ்வாய், புதன், வியாழன் ஆகிய 3 தினங்கள் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கல்லூரி அதிபர் கே.வேல்சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளன.

முதல் நாள் நிகழ்வுகளுக்கு பிரதம அதிதியாக அமரரின் மகள் திருமதி ஜெயபவானி விக்கினேஸ்வரனும், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு.திருமுருகன், யாழ்ப்பாணம் பல் கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், முன்னாள் ஆசிரியர் த.பு.முருகையா, கப்பல் அபிவிருத்தி புனருத்தான அமைச்சின் முன்னாள் செயலாளர் ரி.இலங்காநேசன், பழைய மாணவன் சட்டத்தரணி க.செல்வஸ்கந்தனும்

விசேட அதிதிகளாக ஆளுநர் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வட மாகாண மேலதிக மாகாண கல்வி செயலாளர் பி.விக்கினேஸ்வரனும்

சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் ஓய்வு நிலை அதிபர் பொ.கனகசபாபதி, வலிகாமம் கல்வி வலய ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன், பழைய மாணவர்களான வி.சிவானந்தராசா, வைத்தியகலாநிதி என்.கணேசானந்தன், யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை பிரதி பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபவானந்தன், எஸ்.ஸ்ரீலஜ யன், சிரேஸ்ட சுங்க அத்தியட்சகர் கே.நியாசா ஆகியோர் கலந்து கொள்ளவுள் ளார்கள்.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வில் இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்தல் மற்றும் ஜெயரத்தினத்தின் நூறாவது பிறந்த நாள் மலர் வெளியிடுதல் பரிசளிப்பு ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

மற்றும் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக பொறியியலாளர் மகாஜனன் வே.நந்தீஸ்வரனும் கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை அமரர் ஜயரத்தினத்தின் மூத்த புதல்வர் வைத்திய கலாநிதி ஜயரத்தினம் ஜயக்குமாரன் வைத்திய கலாநிதி என் பாலசிங்கம் வட மாகாண பொதுச் சேவை ஆணைக் குழு ஆணையாளர் சொ.அமிர்தலிங்கம் கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் பீடாதிபதி செல்வி மனோ சுபாரட்ணம் ஆகியோரும்

விசேட அதிதிகளாக ஆளுனரின் வட மாகாண கல்வி அமைச்சின் பணிப்பாளர் வி. செல்வராசா, வட மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.இராஜேந்திரன் ஆகியோரும்

சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் ஓய்வு நிலை அதிபர் பொ.சுந்தரலிங்கம், பழைய மாணவர்களான சி.திருவருட்செல்வன், எஸ்.ஜெயவாமன் சி.கௌரிபாலன், கே.மோகன்ராம், ரி.சம் பந்தன் கெ.விநாயகமூர்த்தி ஆகியோரும் கலந்து கொள்ளவுள் ளார்கள்.

காலை 9.00 மணிக்கு விருந்தினர் வரவேற்பு நிகழ்வுடன் ஆரம் பமாகி கல்விக் கண்காட்சியை பார்வையிடல் மற்றும் மகா ஜனன் மலர் வெளியிடுதல் போட்டி களில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகளும் இடம் பெற வுள்ளன.

கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

(ந-86)

## மாணவர்கள் கௌரவிப்பு

வலி.வடக்கு ஒக் 15

தெல்லிப்பளை துர்க்காபுரம் மத்தி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினால் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்கள் பதின்மூன்று பேர் நேற்று ஞாயிற்றுக்கிழமை பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

சங்கத் தலைவர் எஸ்.ஆறுமுகநாதன் தலைமையில் தெல்லிப்பளை ஸ்ரீ தூர்க்காதேவி ஆலய அன்னசத்திர மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தேவஸ்தானத் தலைவர் ஆறு. திருமுருகன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

சங்கத்தின் செயல்பாட்டுப் பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் பரீட்சையில் சித்தி அடைந்த இரண்டு மாணவர்களுக்கும் நூற்றுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற பதினொரு பேருக்கும் பணப் பரிசில்கள் வழங்கிப் பாராட்டி கௌரவிக்கப் பட்டது.

(ந-86)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்.பல்கலைக்கழகத்தின் இணைய வழி வியாபார முகாமைத்துவ மாணி கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கான முடிவுத் திகதி எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று இணைப்பாளர் பேராசிரியர் க.தேவராஜா அறிவித்துள்ளார். (ந-14)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
03.06.1952

விண்ணில்
26.10.2012

அமரர்
**லிங்கம் பண்டாரி**

ஓராண்டு கழிந்தாலும்
ஓவியமாய் பதிந்திருக்கிறது
உங்கள் முகம்
காவியமாய் வாழ்ந்தீர்கள்–உம்மை
காலமெல்லாம் நினைத்திருப்போம்...

என்றும் உங்கள் பிரிவால்
துயருறும்:
மனைவி மற்றும்
குடும்பத்தினர்.

கைதடி மேற்கு,
உதயநகர்.

(32751) (6.3.4)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மண்
உலகில்
30
.
12
.
1953

விண்
உலகில்
18
.
09
.
2010

**அமரர் தம்பித்துரை சபாரத்தினம்**

(முன்னாள் மதுவரி உத்தியோகத்தர்)

காற்றினில் கலந்து நினைவோடு வாழ்பவரே
மூன்றாண்டு ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை நம் துயரம்
அன்பு மொழி பேசி ஆதரவாய் எமக்கிருந்து
அரவணைத்தீர்களே–இன்று
நீள் துயிலில் (நீவிரும்)மீளாத்துயரில் நாமும்
உங்கள் நினைவோடு–என்றும்
தொடரும் எங்கள் பயணம்

குடாரப்பு,
நாகர் கோயில்.

(32743) (4.6.3)

குடும்பத்தினர்.

## மகாஜனனின் காணிக்கை



அமரர் அதிபர் தெ.து.ஜெயரத்தினம் அவர்களின் நூறாவது பிறந்த தினம் இன்றாகும். இந்த வேளையில், இந்த வருட ஆசிரியர் தினத்தில் எனக்குக் கிடைத்த நல்லதிபர் விருதாகிய "பிரதீபா பிரபா" விருதினை அவர் தம்பாதக் கமலங்களுக்குக் காணிக்கையாக்கி மகிழ்கின்றேன்.

அன்னாரின் நிமிர்ந்த நடை, நேரிய நோக்கு, பேச்சு, மொழித் தெளிவு, உச்சரிக்கும் பாங்கு, மாறாப் புன்னகை, கண்டிப்பு, அதேவேளை கருணை காட்டும் விதம், ஆசிரிய, மாணவ, பெற்றோர் இடைவினைத் தொடர்பு, ஞாபக சக்தி, திட்டமிட்டுச் செயலாற்றும் திறன், எதிர்கால நோக்கு, நேர முகாமைத்துவம் போன்ற யாவும் அவரின் இரத்தத்துடன் ஊறிய நிர்வாக நுட்பங் களாகும். இவர் அதிபராக இருந்த காலகட்டத்தில் பல்கலைக்கழக அனுமதிகள், விளையாட்டுப் போட்டிகள், நாடகங்கள் எல்லாம் தேசிய சாதனை படைத்தவை. இன்றைய மகாஜனவின் வளர்ச்சி, தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வளர்ச்சிகளிலெல்லாம் இந்தப் பெருந்தகையின் அடிப்படையான, அத்திபாரமான நிர்வாகக் கட்டமைப்பே என்றால் மிகையில்லை. இவரின் சமய, சமூகத் தொண்டுகள் எண்ணிலடங்கா.

இவர் அதிபராக இருந்தவேளை இவரின் நாளாந்த மேற்பார்வையின் போது ஆசிரியர் இல்லாத வகுப் பறையில் கற்பித்தலில் ஈடுபடுவது இவரின் அலாதி விருப்பு அந்தச் சமயம் தமை மறந்து மாணவருடன் ஒன்றித்து விடுவார். இந்த நிர்வாக நுட்பம் இன்றைய பல அதிபர்கள் கைக்கொள்ள வேண்டியதொன்றாகும். சிறுவயது முதல் அன்னாரின் ஆளுமை, நிர்வாகத் திறனைப் பிரயோகிக்கும் நுட்பங்களை அவதானித்து வந்த நான், நடைமுறையிலும் கைக் கொள்வதன் மூலமே எனக்கு இந்த நல்லதிபர் விருது கிடைத்ததென்பது என் திடமான நம்பிக்கையாகும்.


திருமதி லீலாவதி அருளையா
மயிலிட்டி றோ.க.த.க.பா.
ஆனைக்கோட்டை.

## சித்திர, ஆக்கத் திறன் கண்காட்சி

யாழ்ப்பாணம் கல்வி வலய விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களின் சித்திர ஆக்கத் திறன் கண்காட்சி இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாண கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரி நாதன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப் பாளர் செ.உதயகுமாரும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஆ.இரவீந்திரனும் கலந்து கொள்வர். (ந)

## HEART FELT CONDOLENCES



**Mr. T.A. ERNEST**

[C Eng. B.Sc. (Eng), MICE, MIE]

We convey our heart-felt condolences at the shocking demise of Mr. T.A. ERNEST [C Eng. B.Sc. (Eng), MICE, MIE], Former Senior Project Manager of State Engineering Corporation in Sri Lanka from 1976 to 1978. Technical Director and Project Manager of Afro Atlantic Dev Co Ltd, Pureway Corporation Miller Buckley Ltd, in Nigeria from 1978 to 1984. Project Manager of Link Engineering from 1985 to 1986. Senior Project Manager of Samuel and Sons Co.Ltd from 1987 to 1989. Infra Structure Co-ordenator for North East Provincial council UNDP in 1990. Deputy Manager of Civil Engineering Department-Samuel and Sons Co.Ltd. Project Consultant of Design Consortium Ltd. Project Manager of Con Mix (Pvt) Ltd. Project Manager of Shakkane Engineering (Pvt) Ltd. Project Consultant of J.K. Properties. Technical Director of General Engineering services, Consultant Engineer of RDA Head Office from 2010 to 2011, Consultant Engineering of Veeradee, for Construction of Engineering Faculty, University of Jaffna. An active old boy of Jaffna College, Vaddukkoddai.

May God grant strength and courage to his family members to go through this difficult time.

May his great soul rest in everlasting peace
*"HE RAN A GOOD RACE AND WON THE RACE"* - Bible

***Sympathetically Remembered By His***

**Eng.S.Suntharakumar** - Deputy Director Dep. of Buildings (NP)
**Eng.S.Meikandan** - Consultant ADB RDD
**Eng.T.Barathithasan** - Project Director, Water Board
**Eng.A.T. Perinpanathan** - Retaird Engineer Bank of Ceylon
**Mr. V. Srilayanthira** - Technical officer
**Mr. S. Ramanan** - Technical officer

(32576)(10.6.3)


## குறை பார்வையுடைய மாணவன் சாதனை

கோப்பாய் மகாவித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சந்திரகுமார் அமலஅசாம் என்ற மாணவர் 157 புள்ளி களைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இந்த மாணவன் பிறப்பில் இருந்தே குறை பார்வையுடையவர். எனினும் தன்னுடைய விடாமுயற்சியாலும், ஊக்கத்தாலும் இந்தச் சாதனையைப் படைத்துள்ளார்.

இந்த மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு வழிகாட்டிய அதிபர் ரி.ஞானப்பிரகாசம், தனது கற்பித்தல் செயற்பாட்டின் மூலம் வெற்றிக்கு வழி [illegible] பாராட்டுகின்றனர். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் இந்திய மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் அருண் ஜேட்லியை வியாழக்கிழமை நியூயோர்கில் சந்தித்துள்ளார்.
இந்தச் சந்திப்பில் இரு நாடுகளுக்கிடையிலான பரஸ்பர விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக நீதியமைச்சு தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (ந-10)

# வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரியில் வெள்ளி விழா நாயகர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.15
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த ஏழு சிரேஷ்ட நிலை ஆசிரியர்கள் 25 வருட சேவை யைப் பூர்த்தி செய்துள்ளனர்.
இவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளைத் தலைவர் எம்.தவயோக ராஜா தலைமையில் இடம்பெற்றது.
கொழும்பு ஹோட்டல் கல தாரியில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பேராசிரியர் வலன் ரைன் டானியல் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு 25 வருடம் சேவை செய்த சிரேஷ்ட நிலை ஆசிரியர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தார்.
விருது பெற்ற ஆசிரியர்களின் விவரம் வருமாறு:-
அருமைநாயகம் டானியல் அதிசயதாசன் (ஆரம்பப் பாடசாலை மேற்பார்வையாளர்) பி.ஈ.டி பட்டம் பெற்றவர். 01.05.1985 முதல் இன்று வரை சேவையாற்றி வருகின்றார்.
மறைந்த திருமதி டப்பேன் இந்திராணி கணேசன் ஆங்கிலத்தில் பன்முக புலமை கொண்டவர். 10.09.1983 முதல் கல்வி பணியில் இணைத்து கொண்டவர்.
வண.டேவிட். எஸ். சொலமன் கல் லூரி இணை அதிபர் 01.06.1987 முதல் கல்விப் பணியை ஆரம்பித்தவர். பி.ஏ. பட்டப்பின் கல்வி டிப்ளோமா முதுகல்வி மாணி பட்டதாரி.
செல்வி ஹன்னா அரியமணி தம்பிநாயகம் 15.6.1985 முதல் கல்விப் பணியை ஆரம்பித்தவர். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விசேட கல்விச் சான்றிதழ் பெற்றவர்.
திருமதி இந்திராணி ஜெயக்குமாரன் 01.07.1976 முதல் ஆசிரிய பணியை ஆரம்பித்து உப அதிபராகப் பணியாற்றி இளைப் பாறியவர். பி.எஸ்.சி., எம்.ஏ. போன்ற பட்டங்களைப் பெற்றவர்.
சிவசுப்பிரமணியம் ராஜசேக ரம் 01.10.1985 முதல் கல்விப் பணியை ஆரம்பித்தவர். நூலகராகவும், ஆசிரியராகவும் பணியாற்றுபவர். பி.ஏ.பட்டம் பெற்றவர்.
துரைசாமி கணேசமூர்த்தி 01.05.1986 முதல் கல்விப் பணியை ஆரம்பித்தவர். பி.ஏ.பட்டத்துடன், பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தைப் பெற்றவர். (ந-50)

## விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஒக்.15
இலங்கை திறந்த பல்கலைக் கழகத் தின் கல்விப் பீடத்தால் நடத்தப்படும் விசேட தேவைகள்சார் பட்டமேற் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
இந்தக் கற்கை நெறிக்கு திகதிக்கு முன், நியமனம் பெற்று சேவையாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் 8 ஆம் விண்ணப் பிக்க முடியும்.
தகுதியுடைய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னர் கொக்குவில் பிறவுண் வீதியில், உள்ள இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். (ந-14)

# புத்தூரில் இன்று பயிர்ச் செய்கை முகாம்

யாழ்ப்பாணம், ஒக்.15
புத்தூர் விவசாய போதனாசிரியர் பிரிவில் உள்ள விவசாயிகளின் பயிர்ச் செய்கை சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக பயிர்ச் செய்கை முகாம் ஒன்று புத்தூர் கமநல சேவைகள் நிலையத்தில் இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.
விவசாயிகளின் வயல் பிரச்சினைகளுக்கு தீர்வுகளையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்கு விவசாய விரிவாக்கம், விவசாய ஆராய்ச்சி நிலையம், விவசாய விதை நடுகைப் பிரிவு மற்றும் தென்னை அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.
விவசாயிகள் தமது பயிர்களின் பிரச்சினைக்குரிய மாதிரிகளுடன் வருகை தந்து தீர்வுகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளுமாறும் யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் கேட்டுள்ளார்.
ஒவ்வொரு மாதத்தின் இரண்டாவது வாரத்தின் செவ்வாய்க்கிழமைகளில் புத்தூர் கமநல சேவை நிலையத்தில் இந்தப் பயிற்சிகள் இடம்பெறும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (ந-7)

## கலை நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்

அரியாலை ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் ஆலய வைரவர் சாந்தி உற்சவமும் கலை நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.
ஸ்ரீ கலைமகள் நாடக சபாத் தலைவர் செ.செல்வராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி காந்தசீலன் கலந்து கொள்வார்.
நிகழ்வில் பரிசளிப்பும் மாணவர்களின் கலை நிகழ்வும் இடம்பெறும். (ந)

# பொறுப்புக் கூறும் நிலையில் அரசு இன்னமும் இல்லை

## மனோகணேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.15
ஐ.நா.கூட்டத் தொடரில் பொறுப்புக் கூறல் தொடர்பான சவால்களை எதிர்நோக்க அரசு தயார் நிலையில் இல்லை என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.
வடமேல் மாகாண சபையில் அரச தரப்பு தவிசாளர் தோற்கடிக்கப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
வடமேல் மாகாண சபையில் அரச தரப்பு உறுப்பினர்கள் கட்சி மாறி வாக்களித்துள்ளதால், அரசின் அதிகாரபூர்வ மாகாணசபை வேட்பாளர் தவிசாளராகத் தெரிவு செய்யப்படவில்லை.
மாகாணங்களில் இப்படி என்றால் மத்திய அரசில் அனைத்து அரசியல் பண்பாடுகளையும் தூக்கி வீசிவிட்டு வெறும்



பதவிகளைக் காட்டி அரசில் இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை தக்க வைத்துக் கொள்ளும் கூத்து நடக்கின்றது.
பணப்புழக்க வீழ்ச்சி இந்த நாடு எதிர்நோக்கி வரும் பெரும் பொருளாதார நெருக்கடியை அடையாளப் படுத்துகின்றது.
அதேவேளை எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெற உள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் பொறுப்புக் கூறல் சவால்களை எதிர் நோக்க எந்தவித தயார் நிலையிலும் அரசு இல்லை.
கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் பிரதானமானவை நிறை வேற்றப்படவில்லை.
அவற்றை நிறைவேற்ற முடியாத சிங்களத் தீவிரவாத நிலையில் அரசு உள்ளது.
வடக்கு மாகாண சபைத் தேர்தலை 4 வருடங்கள் தாமதித்து நடத்தி முடித் ததை, இன்று தனது ஒரே ஒரு சாதனை என்று இந்த அரசு உலகுக்கு காட்ட முயல்கின்றது. இது ஒரு சாத னையல்ல. இதன் பின்னால் உள்ள உண்மை உலகுக்கு நன்கு தெரியும்.
இந்த நிலையில் அடுத்த வருடம் முதல் காலாண்டில் பெரும் சர்வதேச நெருக் கடியை இந்த அரசு எதிர்நோக்கும் சூழல் உருவாகின்றது-என்று தெரிவித்துள்ளார். (ந-5)

# குடிதண்ணீர் கோரும் கோணாவில் மக்கள்

**குறித்த கிராமத்தில் 310 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.**

அக்கராயன், ஒக். 15
கிளிநொச்சி கோணாவில் கிழக்கு, காந்திக் கிராமத்தில் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.
இது குறித்து அதிகாரிகளிடம் தெரியப்படுத்திய போதும் இது வரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.
குறித்த கிராமத்தில் 310 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்துவரும் நிலையில் கோடை காலம் இன்னும் நீடித்தால் குடிதண்ணீரைப் பெறுவதில் பெரும் சிரமம் ஏற்படும் என கூறப்படுகிறது.
இருக்கும் சில கிணறுகளிலும் தண்ணீர் உவராகியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.
எனவே தமது நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு குடிதண்ணீர் திட்டம் ஒன்றை ஆரம்பித்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-18)

## வசதி குறைந்த முல்லைத்தீவு பல்கலை மாணவருக்கு உதவி

யாழ்ப்பாணம் ஒக். 15
முல்லைத்தீவு மாவட்ட கல்வி மேம்பாட்டு நம்பிக்கை நிதியத்தால் முல்லைத்தீவு மாவட்ட வசதி குறைந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் நிதி உதவிக் கொடுப்பனவில் 2014 ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவு வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
எனவே குறித்த மாணவர்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திலும் மற்றும் பிரதேச செயலகங்களிலும் உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்டச் செயலகத்தில் ஒப்படைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார். (வ)

## படிப்பகம் புனரமைப்பு

நீண்ட நாள்களாகப் பல குறைபாடுகளுடன் காணப்பட்ட கல்நாட்டியகுளம் நாதன் படிப்பகம் புனரமைக்கப்பட்டுள்ளது.
நீண்ட நாள்களாகவே இந்தப் படிப் பகம் செயலிழந்து காணப்பட்டது.
தற்போது இந்தப் படிப்பகத்தின் கட்டடம் வர்ணம் பூசப்பட்டும், இது அமைந்துள்ள வளாகம் சீர்செய்யப்பட்ட பின்னர் இதன் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன. (க-421)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி பிரதேச செயலகத்தின் சிறுவர் முதியோர் தின விழா

## பிரதேச செயலக மண்டபத்தில் இன்று

பூநகரி, ஒக்.15
பூநகரி பிரதேச செயலக சர்வதேச சிறுவர், முதியோர், மாற்றுவலுவுள்ளோர் தின விழா இன்று காலை 9 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
பிரதேச செயலர் கே.எஸ். வசந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசனும் கௌரவ விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் உளவள மருத்துவ அதிகாரியான மருத்துவர் ந.ஜெயராஜும், சிறப்பு விருந்தினர்களாக பூநகரி கோட்டக் கல்வி அலுவலர் த.தர்மரத்தினம், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன், மாவட்ட சிறுவர் நன்னடத்தை அலுவலர் ம.முத்துக்குமரன், பூநகரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குணசேகர ஆகியோரும் கலந்து கொள்வர். நிகழ்வில் பூநகரி பிரதேசத்தைச் சேர்ந்த முதியோர்கள், மாற்றுவலுவுடையோர் கௌரவிப்பும், பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டி களில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கலும் இடம் பெறும். (க-9)

# முல்லைத்தீவிலுள்ள தென்னிலங்கை மீனவரை வெளியேற்ற நடவடிக்கை

முல்லைத்தீவு, ஒக்.15
முல்லைத்தீவு, கொக்கிளாய் பிரதேசத்தில் அத்துமீறிக் குடியமர்ந்து கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் தென்னிலங்கை மீனவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாண உதவித் தவிசாளரும், பொறுப்பு நிலை அமைச்சருமான அன்ரனி ஜெயநாதன் தெரிவித்தார்.
ஞாயிற்றுக்கிழமை மாலை அந்தப் பகுதிக்குச் சென்ற வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, கைத்தொழில், வர்த்தகம், வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடமாகாண சபையின் உதவித் தவிசாளரும், புனர்வாழ்வு, இன நல்லிணக்கம் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் பொறுப்பு நிலை அமைச்சருமான அன்ரனி ஜெயநாதன் ஆகியோர் இது தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.
குறிப்பாக 1984 ஆம் ஆண்டுக்கு முன்னர் 32 தென்னிலங்கை மீனவக் குடும்பங்கள் வசித்து வந்த நிலையில் தற்போது 350 தென்னிலங்கை மீனவக் குடும்பங்கள் அங்கு வசிக்கின்றனர். அத்துடன் தடை செய்யப்பட்ட தொழில் முறைகளைப் பயன்படுத்தி தொழில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் கடல் வளம் அழியும் நிலையும் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (வ-12)

# வடமாகாண சபையின் மூலம் நகர அபிவிருத்தியை முன்னெடுக்கலாம்

## வல்வெட்டித்துறைக்குப் பயணம் செய்த உலக வங்கி நிபுணரான சரத் விக்கிரமரட்ண கருத்து

வடமராட்சி, ஒக்.15
வடக்கில் சிறந்ததொரு மாகாண சபை அரசு உருவாக்கப்பட்டுள்ள நிலையில் உங்களுடைய நகர அபிவிருத்திக்குத் தேவையான நிதியை மாகாண சபை யினூடாகப் பெற்றுக் கொள் ளலாம் என உலக வங்கியின் நிபுணத்தவ ஆலோசகர்களில் ஒருவரான சரத் விக்கிரமரட்ண தெரிவித்தார்.
வல்வெட்டித்துறை நகர சபையால் நெல்சிப் மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மீளாய்வு செய்வதற்கும் அடுத்த ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைகள் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கும் உலக வங்கியைச் சேர்ந்த நிபுணத்துவ ஆலோசகர்களான சரத் விக்கிரமரட்ண, எம்.டி.ஏ. ஹரோல்ட் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக நெல்சிப் திட்டத்துக்குப் பொறுப்பான சமூக அபிவிருத்தி அலுவலர் எஸ்.ஞானவேல்ராஜா ஆகியோரைக் கொண்ட குழுவினர் அண்மையில் வல்வெட்டித்துறைக்கு பயணம் மேற்கொண்டிருந்தனர். இந்தக் குழுவினர் வல்வெட்டித் துறை நகர சபை மாநாட்டு மண்டபத்தில் நகர சபைத்தலைவர் ந.அனந்த ராஜ் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.
இந்தக் கலந்துரையாடலில் இலங்கையில் உலக வங்கியின் செயற்பாடு மற்றும் வடக்குக் கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் தொடர்பாகவும் அதன் செயற்பாடு மற்றும் நிதிக் கையாளுகை தொடர்பாகவும் நிபுணத்துவ ஆலோசகரான சரத் விக்கிரமரட்ண கருத்துத் தெரிவித்தார்.
அவர் தனது கருத்துரையில் மேலும் தெரிவித்ததாவது:
கிராமிய மட்டங்களில் மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் உலக வங்கி இலங்கை அரசுக்கு மில்லியன் கணக்கான அமெரிக்க டொலர்களைக் கடனாக வழங்குகின்றது. ஆனால் அரசு உள்ளூராட்சிச் சபைகளுக்கு அவற்றின் தேவை அடிப்படையில் நிதியை மானியமாக வழங்குவதால் இந்த நிதியைப் பயன்படுத்தும் போது அதற்கான அபிவிருத்திப் பணிகளை மட்டுமல்லாது அவற்றை முறையாகப் பராமரிப்பதிலும் மக்களின் பங்களிப்பு அவசியமாகின்றது.

**கிராமிய மட்டங்களில் மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் உலக வங்கி இலங்கை அரசுக்கு மில்லியன் கணக்கான அமெரிக்க டொலர்களைக் கடனாக வழங்குகின்றது.**

இங்கு வந்து நாம் பார்வையிட்டபோது அபிவிருத்திப் பணிகள் யாவும் மிகத் துரிதமாக நடைபெறுவதுடன் இந்தத் திட்டம் தொடர்பாகப் பொது மக்கள் மிகுந்த அறிவுடையவர்களாகவும் விழிப்பாகவும் இருப்பதை அவதானித்தோம். அதேவேளை தமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதில் நகர சபை உறுப்பினர்களினதும் பொதுமக்களினதும் அலுவலர்களினதும் பங்களிப்பு மிகச் சிறப்பாக உள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.
தற்போது நீங்கள் அனைவரும் எதிர்பார்த்தது போன்று உங்களுக்குச் சிறந்ததொரு மாகாண சபை உருவாக்கப்பட்டுள்ள நிலையில் அபிவிருத்திக்கான நிதியை மாகாண சபை ஊடாகப் பெற்றுக் கொள் ளலாம். நெல்சிப் திட்டப் பணிகள் யாவும் அடுத்த ஆண்டு வுஜூலை மாதத்துக்குள் முற்றுப் பெறுமாயின் வடமாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் ஒன்று சேர்ந்து வடமாகாண முதலமைச்சருக்கு அதனை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்குமாறு கோரிக்கை விடுத்தால் அதுதொடர்பாக உலகவங்கிஉரியநடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவித்தார்.
மக்கள் சந்திப்புக்களில் உலக வங்கிக் குழுவினருடன் நகர சபை உபதலைவர் க.சதீஸ் மற்றும் சபை உறுப்பினர்களான ம.மயூரன், க.ஜெயராஜா, கோ.கருணானந்தராஜா, பொ.தெய்வேந்திரன், இ.சைலாஜினி ஆகியோரும் கலந்துகொண்டனர். (வ-8)

# மார்பு புற்றுநோய் சிகிச்சை சாவகச்சேரி ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, ஒக்.15
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பெண்களுக்கான மார்புப் புற்றுநோய் தொடர்பான பரிசோதனைகள் நேற்று தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



சுகாதார அமைச்சு ஒக்ரோபர் மாதத்தை உலக மார்பு புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாக பிரகடனப்படுத்தியுள் ளதையடுத்து வைத்தியசாலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.
பிரதி வெள்ளிக்கிழமைகளில் காலை 8 மணிக்கு வைத்தியசாலை அறை இல.7 இல் பெண்கள் தாமாகவே சுயமார்பு பரிசோதனை மேற்கொள் ளமுடிவதுடன் வைத்தியசாலையில் நடைபெறும் சுகவாழ்வுக் கிளினிக், பெண் நோயியல் கிளினிக் ஸ்கானிங் கிளினிக் போன்ற வற்றிலும் விசேடமாக வைத்தி யர்களால் பெண்களுக்கு மார்புப் புற்றுநோய் பரிசோத னைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
மார்புப் புற்றுநோயானது இலகுவில் கண்டு பிடிக்கக்கூடியது என்பதால் அதற்கான குணங்குறிகள் காணப்படும் பெண்கள் உடனடியாக வைத்தியசாலையில் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.
மார்புப் புற்றுநோய்க்கான குணங் குறிகள் காணப்படுகின்ற போதிலும் அக்கறையின்றி இருப்பின் உயிராபத்தை ஏற்படுத்தும் நிலைக்குத் தள்ளப்படும் அபாயம் உள்ளது.
இவ்வகை புற்றுநோய் வயது வேறுபாடின்றி தாக்குவதால் பெறப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் ஏழு லட்சம் பேருக்கு 20 பேர் மார்புப் புற்றுநோயால் பீடிக்கப்படுகின்றனர்.
2006 ஆம் ஆண்டு பெறப்பட்ட புள்ளி விவரங்களின் படி புற்றுநோயால் பீடிக்கப்பட்ட பெண்களில் 27 வீதமானோர் மார்புப் புற்றுநோயால் பீடிக்கப் பட்டுள்ளனர்.
மார்புப் புற்றுநோய் ஏற்படுபவர்களில் குறைந்தது நான்கு அல்லது ஐந்து பேர் உயிராபத்தை தழுவியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
மார்புப் புற்றுநோய் முற்றிய நிலை காணப்படுமாயின் சத்திர சிகிச்சை, கதிர் இயக்கச் சிகிச்சை, ஊசி மருந்து போன்றவை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படலாமென வைத்தியசாலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-9)

# தமிழ்- முஸ்லிம் மக்கள் இணைந்து செயற்படுக

யாழ்ப்பாணம், ஒக்.15
தமிழ்- முஸ்லிம் மக்கள் வேறுபாடின்றி வடக்கு, கிழக்கில் இணைந்து செயற்பட்டு பெரும் மாற்றத்தை ஏற் படுத்த வேண்டும் என வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.



யாழ்.முஹமதியா ஜும்மா பள்ளிவாசலில் சனிக்கிழமை நடைபெற்ற மக்கள் கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
முஸ்லிம் மக்களையும் உள்ளடக்கி நாம் முன்னேற வேண்டும். இனியும் இனம், மதம் என வேறுபட்டிருக்கக் கூடாது. நாம் மனிதர்களாக வாழ வேண்டும்.
ஏதாவது ஒரு கொடுமை இந்துவுக்கு நடந்ததென இஸ்லாமியர்களும் இஸ்லாமியருக்கு நடந்ததென இந்துக்களும் நினைக்கக் கூடாது. எமது பிரச்சினைகளை நாம் தட்டிக் கேட்க வேண்டும்.
இறைநம்பிக்கை உள்ளவர்களும் மனிதாபிமானம் உடையவர்களும் சேரும் காலம் இப்போது உருவாகியுள்ளது. வடமாகாணத்தில் முஸ்லிம் மக்கள் தொடர்பான அனைத்துப் பொறுப்புக்களும் உங்கள் பிரதிநிதி அஸ்மி னுக்கு வழங்கப்படும்- என்றார். (வ-10)

# பணிந்து நடப்பவன் கட்டளையிடத் தகுதி பெறுகிறான்

## வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் கருத்து

யாழ்ப்பாணம், ஒக்.15
மாணவர்கள் ஒழுக்கத் துடனும் கீழ்ப்படிவுடனும் கல்வி கற்க வேண்டும். எவனொருவன் கீழ்ப்படிகின்றானோ அவன் கட்டளையிடத் தகுதியுடையவனாகிறான் என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சந்திரராஜா தெரிவித்தார்.
பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் தாபகர் தின விழாவும் வியாழக்கிழமை நடைபெற்றது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:
"மெய்கண்டான் மகா வித்தியாலயம் பல செயற்றிறன் வாய்ந்த மாணவர்களை உரு வாக்கியுள்ளது. இந்த நிகழ்வில் கல்லூரி மேலும் பல மாணவர்களைபல்கலைக் கழகம் அனுப்ப வேண்டும் என வாழ்த்துகிறேன். இந்தக் கல்லூரியில் ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதாக அதிபர் அறிக்கையின் மூலம் தெரியப்படுத்தப்பட்டது.
அந்தக் குறை மிக விரைவில் நீக்கப்படும் என நான் இவ்விடத்தில் கூறுகிறேன். எவன் ஒருவன் கீழ்ப்படிகின்றானோ அவன் கட்டளையிடத் தகுதி டையவனாகின்றான்- என்றார். நிகழ்வில் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கினார். நிறுவுநர் கந்தையாவினுடைய உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து நினைவுப் பேருரை இடம் பெற்றது. விழாவை முன் னிட்டு கலை நிகழ்வுகள் மேடை ஏற்றப்பட்டன. (வ-10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிவேகப் பாதையால் ரூ. 204 கோடி வருமானம்

## 68 லட்சம் வாகனங்கள் பயணிப்பு



கொழும்பு. ஒக்.15
தெற்கு அதிவேகப் பெருந்தெரு மார்க்கம் திறந்து விடப்பட்ட நாளில் இருந்து இதுவரையான இரண்டாண்டுகள் காலத்தில் 68 லட்சத்து 76 ஆயிரத்து 56 வாகனங்கள் அந்த மார்க்கத்தில் பயணித்துள்ளன.

இந்தத் தகவலை துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வாகனங்கள் மூலமாகக் கிடைத்துள்ள மொத்த வருமானம் 204 கோடி ரூபா ஆகும் என்று துறைமுகங்கள் அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்தார்.

இந்த ஆண்டின் கடந்த 9 மாதங்களுக்குள் அதிவேகப் பெருந்தெரு மார்க்கத்தில் இருந்து கிடைத்துள்ள வருமானம் 92 கோடி ரூபாவாகும்.

அத்தோடு 31.05.691 வாகனங்களும் பயணித்துள்ளன என்று அவர் கூறினார். (ச-22)

# கிருமிநாசினி பயன்பாட்டால் ஏற்படுகிறது பாரிசவாதம்



கொழும்பு, ஒக். 15
நாட்டில் பயன்படுத்தப்பட்டு வரும் பத்து வகையான கிருமி நாசினிகள் நேரடியாகவே பாரிசவாத நோய் ஏற்படுவதற்கு காரணமாகியுள்ளன என்று ஆய்வுகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

பத்து வகையான கிருமி நாசினிகளை நாட்டில் பயன்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கையில் மாத்திரமன்றி மத்திய அமெரிக்க நாடுகளான நிக்கரகுவா, கொஸ்ராரிகோ ராச்சியம் போன்ற நாடு களில் வாழும் மக்களும் இத்தகைய கிருமி நாசினிகளை அதிகளவில் பயன்படுத்துவதால் பல்வேறு நோய்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். நாட்டின் இரசாயன உரப் பாவனையும் இரண்டு மடங்குகளுக்கு மேற்பட்ட விகிதாசாரத்தில் உயர்வடைந்து சென்றுள்ளது.

2006 ஆம் ஆண்டில் இந்நாட்டின் இரசாயன உரப் பாவனை 178.609 மெற்றிக் தொன்களாக இருந்துள்ளதோடு 2012 ஆம் ஆண்டில் அது 415.403 மெற்றிக் தொன்களாக உயர்வடைந்துள்ளது.

இதன்காரணமாக தற்போது கண்டறியப் பட்டுள்ள சிறுநீரக நோய் போன்றே இனங் காணப்படாதுள்ள பல நோய்கள் பரவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

# பிரதிநிதிகளை வரவேற்கும் வைபவம்

பொதுநலவாய மாநாட்டையொட்டி, பொதுநலவாய நாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் இளைஞர் பிரதிநிதிகளைக் கௌரவிப்பதற்கான ஏற்பாடுகளை மாத்தளை மாவட்ட இளைஞர் சேவைமன்றக் கிளை மேற்கொண்டுள்ளது.

பொதுநலவாய நாடுகள் சிலவற்றைச் சேர்ந்த இளைஞர் பிரதிநிதிகள் பலர் மாத்தளை மாவட்டத்துக்கு வருகை தருவதையொட்டி, அவர்களைக் கலேவெல, தம்புள்ள மற்றும் மாத்தளை நகரங்களில் வர வேற்று கௌரவிப்பதற்கான பூர் வாங்க ஏற்பாடுகளை மாத்தளை மாவட்ட இளைஞர் சேவை மன்றம் மேற்கொண்டுள்ளது.

மாத்தளை நகரில் இன்று செவ்வாய்க்கிழமை பிரதிநிதிகள் வரவேற்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

**நாஹா மருத்துவ நிலையம்**
* எலும்புகளை பற்றிய வாதமும்- அதிக வலிவேதனையும், சுவாசத்தை இறுக்கும் ஆஸ்மா, அல்சர், நீரிழிவு குணமாதல்.
* குழந்தையின்மைக்கு அதிவிசேட சிகிச்சை பெறல்.

கிழமைநாள் 3 p.m - 6 p.m
சனி, ஞாயிறு 8.30 a.m - 2 p.m
T.P: 077 321 2740
வங்கி முன் லேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெயபதி வீடு)
மானிப்பாய்.
(32741)(10.6.3)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மாவட்ட அமைச்சர்களை நியமிப்பது இடைநிறுத்தம்

கொழும்பு, ஒக்.15
மாவட்ட அமைச்சர்களை நியமிப்பதற்கு அரசு மேற் கொண்டிருந்த தீர்மானம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று அரசின் உயர் மட்டத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

25 மாவட்ட அமைச்சர் பதவிகளை உருவாக்குவதற்குப் பதிலாக பிரதி அமைச்சர் பதவிகளைப் பெறுவதற்குத் தகுதிகளைக் கொண்டிருந்த ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் புதிய தீர்மானத்தை அடுத்து குறித்த பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அமைச்சர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதானது பொருத்தமுடையதல்ல என்று அரசின் அரசியல் ஆலோசகர்களினால் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதற்கமையவே மாவட்ட அமைச்சர் பதவிகளை உருவாக்குவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டில் ஏற்ப டுத்தப்பட்டிருந்த மாவட்ட அமைச்சர்கள் முறைமை பல ஆண்டுகளுக்குப் பின்னர் ரத்துச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

# வெளிநாடுகளிலிருந்து தேசிக்காய் இறக்குமதி

## விவசாய அமைப்புகள் கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஒக்.15
வெளிநாடுகளில் இருந்து தேசிக்காயை இறக்குமதி செய்ய தனியார்துறை வர்த்தகர்களுக்கு வாய்ப்பளிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கு விவசாய அமைப்புகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

ஏற்கனவே இந்த அனுமதி யின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டுள்ள தேசிக்காய்கள் ஊறுகொடவத்தையில் உள்ள கொள்கலன் மேடையொன்றில் உள்ளன என்று சுங்கத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ள இந்தத் தேசிக்காய்களுக்கு பயிர்வகைகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்தினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது என்று அந்தத் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசின் இந்தத் தீர்மானத்துக்கு கடும் எதிர்ப்பை விவசாய அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இந்தத் தேசிக்காய்கள் உள்ளூர் வர்த்தகச் சந்தையில் விநியோகிக்கப்படுவதால் உள்ளூர் விவசாயிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று விவசாய அமைப்புகள் குறிப்பிட்டன. (ச-22)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகு
24.07.1927



விண்ணுலகு
23.09.2007

**அமரர் கார்த்திகேசு இரத்தினம்**
(இளைப்பாறிய ஆசிரியர்)
திதி : புரட்டாதி பூர்வபக்க துவாதசி (15.10.2013)

கனவுகள் சுமந்த கண்கள் கண்ணீரில் வாடுதய்யா!
நினைவுகளில் என்றும் நீங்காது வாழ்கின்றீர்
ஆண்டாறு ஆனாலும் ஆறாத் துயரில் தவிக்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இருகரம் கூப்பி
கற்பக விநாயகரை வேண்டுகின்றோம்.

நீங்காத நினைவுகளுடன்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.
(32759)(10.6.3)

## நீங்கா நினைவில்

ஐந்து வருடங்கள்



தோற்றம் 09.06.1947 மறைவு 11.10.2008

அமரர் நடராசா அற்புதானந்தராசா
திதி : ஏகாதசி

நான்கு வருடங்களும் ஆறு மாதங்களும்



தோற்றம் 16.05.1954 மறைவு 10.04.2009

அமரர் சோதிராணி சதானந்தராஜா
திதி : துதியை

ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும் எம் மனங்களில் நிறைந்திருக்கும்
உங்கள் நினைவுகள் ஆறிடவில்லை எம் துயரம்
அனுதினமும் வாடுகிறோம் தேற்றுவார் யாருமில்லை
தேடுகிறோம் என்றென்றும் உங்களை காலங்கள் பல சென்றாலும்
உங்கள் அருமை நினைவுகள் நீங்கிடாது...
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கற்பகப்பிள்ளையார் கோயில் ஒழுங்கை,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.
(32760) (7.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2013 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 169 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த வரணியூர் சைவப்புலவர் கமலநாதன் சுபாஜினி தம்பதிகளின் புதல்வியும் யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவியுமான

**செல்வி க.தபனியா** அவர்கள்

மாவடிப் பிள்ளையார், குருநாதர் திருவருளால் மேலும் கல்வியில் பல சாதனைகள் படைத்து வளமாக வாழ வாழ்த்துகின்றோம். அத்துடன் இவரின் வெற்றிக்கு பங்களிப்புச் செய்த அதிபர், ஆசிரியர்கள், எல்லோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Congratulations
Best Wishes

வாழ்த்துவோர்கள்:
திரு.திருமதி நடராசா (C.T.B), தாத்தாமார், அம்மம்மாமார், திரு.திருமதி கார்த்திகேசன், (அப்பப்பா, அப்பம்மா), பெரியப்பா, பெரியம்மா (பிரான்ஸ்) மாமா, அத்தை(பிரான்ஸ்), சித்தப்பாமார்(ஜேர்மனி)

மீசாலை கிழக்கு,
மாசேரி, வரணி.
(29662) (7.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2013 ஆம் ஆண்டின் சிறந்த ஆசிரியருக்கான "பிரதிபா பிரபா" எனும் ஜனாதிபதி விருதினைப் பெற்ற எமது கல்லூரி ஆசிரியை



CONGRATULATIONS!

**திருமதி சோதிமலர் ஏகாம்பரநாதன்**
(சுகாதாரமும் உடற்கல்வியும்)

அவர்கள் மேலும் பல விருதுகள் பெற்று எமது கல்லூரிக்கு பெருமை சேர்த்து வாழ வாழ்த்துகிறோம்.

யா/கொடிகாமம்,
திருநாவுக்கரசு மத்திய
கல்லூரி.

பழைய மாணவர்
2009, 2010, 2012
A/L மாணவர்கள்.
(32391)(10.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் கைதடி நாவற்குழி தெற்கைப் பிறப்பிடமாகவும் மன்னார் பள்ளிமுனையை வசிப்பிடமாகவும் கொண்ட **தவராசா-அருந்ததி** தம்பதியரின் அன்பு மகளும் **மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரியில்** தரம் 5 இல் கல்விகற்கும் மாணவியாகிய

**செல்வி த. கோமகள்**

கடந்த 2013 புலமைப்பரிசில் பரீட்சையில் **165 புள்ளிகளைப்** பெற்று தாய் தந்தையருக்கு பெருமைசேர்த்து தந்ததையிட்டு அகமகிழ்வதோடு, அவரது கல்விப் பயணம் மேலும் சிறப்புற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம். மேலும் இவருக்கு கல்வி அமுதூட்டி ஊக்கம் அளித்த மதிப்புக்குரிய கல்லூரி அதிபருக்கும் அல்லும் பகலும் அயராது உழைத்த வகுப்பாசிரியர் சுந்தரரேசன் அவருடன் இணைந்து ஊக்கமளித்த ஆரியர் சகிலன் அவர்களுக்கும் மற்றும் அனைத்து ஆசிரிய குழாமிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
வன்னியசிங்கம் (அம்மப்பா),
அம்மம்மா, லஸ்சன் சித்தப்பா குடும்பம்,
புஸ்பன் மாமா குடும்பம், மாமா டின்சன்
வர்ணவன் (தம்பி), சிவலோஜினி (சித்தி).

கைதடி நாவற்குழி தெற்கு,
கோயிலாக்கண்டி.
(32770)(10.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் விவகாரத்தில் சர்வதேச தர நடவடிக்கை தேவை

## இலங்கை மனித உரிமை ஆணையர் வலியுறுத்து

கொழும்பு, ஒக்.15

"சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கமைய இலங்கை அரசு செயற்படுவதுடன், நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கை, தேசிய மனித உரிமைகள் திட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தினால் சர்வதேச நாடுகளின் மனங்களை வென்று எதிர்வரும் மார்ச் மாத ஐ.நா. கூட்டத் தொடரில் அவற்றின் ஆதர வைப் பெற்றுக்கொள்ள முடி யும்."

இவ்வாறு இலங்கை மனித உரி மைகள் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹனாம ஹேவ தெரிவித்தார்.

"மனித உரிமைகள் பாதுகாப்பு குறித்து சர்வதேசத் தரத்திற்கமைவான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமாயின் சர்வதேசத்தின் முன் நாம் பின்நிற்கத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச நாடுகள் குற்றச் சாட்டுகளை முன்வைத்து வருகின்றமை குறித்து கருத்து வெளியிட்ட அவர், மேலும் தெரி வித்தவை வருமாறு -

மனித உரிமைகள் தொடர்பான சர்தேச உடன்படிக்கைகளில் நாம் கைச்சாத்திட்டுள்ளோம். எனவே, அதன் சட்டங்களுக்கமைய நாம் செயற்படவேண்டும். இனப்பிரச்சினைக்குத் தீர்வான நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கைக்கு அமைய உருவாக்கப்பட்டுள்ள 2011 ஆம் ஆண்டு முதல் 2016ஆம் வரையான தேசிய மனித உரிமைகள் திட்டத்தை அரசு நடை முறைப் படுத்த வேண்டும். இதனைச் செய்தால் எமக்கு எதிராக சர்வதேசம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் நாம் பின் நிற்கத் தேவையில்லை.

உலக காலக்கிரம மீளாய்வு அறிக் கையில் உள்ள 202 பரிந்துரைகளில் தாம் நடை முறைப்படுத்துவதாக அரசு ஏற்றுக்கொண்ட 101 பரிந்துரைகளை குறித்த காலத்துக்குள் நடைமுறைப்படுத்தவேண்டும். இவற்றைச் செய்து முடித்தால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் அடுத்த மார்ச் மாதம் இடம் பெறவுள்ள 25ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்கவுள்ள நாடுகளின் மனங்களை வென்று, அவற்றின் ஆதரைவப் பெற்றுக்கொள்ள முடியும்" என்றார்.



நேற்று நடைபெற்ற வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட நாடகப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது. இரண்டாம் இடத்தை வேம்படி மகளிர் கல்லூரி, வவுனியா மத்திய மகா வித்தியாலயம் பெற்றுக்கொண்டன. முதலிடம் பெற்ற ஹென்றியரசர் கல்லூரி நாடகக் குழுவினர் அதிபர், ஆசிரியர்களுடன்..

# வரமாட்டார் மன்மோகன்

கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் அரச தலைவர்கள் பங்கேற்கும் உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ள மாட்டார் என ஹிந்துஸ் தான் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர் தலை கருத்திற்கொண்டு பிரதமர் இந்தத் தீர்மானத்தை எடுக்க வேண்டியேற் படும் என்றும் அது தெரிவித்துள்ளது.

தமிழகக் கட்சிகளுடன் கூட்டணி வைத்துக்கொள்வது நாடாளு மன்றத் தேர்தலில் முக்கியமானது. இவ்வாறு கூட்டணி வைத்துக்கொள்ள இலங்கை விஜயத்தைத் தவிர்க்க நேரிடும்.

தமிழகத்தின் முதலமைச்சர் ஜெய லலிதா மட்டுமன்றி, திராவிட முன்னேற்றக்கழக தலைவர் கருணாநிதி மற்றும் உள்ளூர் காங்கிரஸ் தலைவர்களும் இலங்கைப் பயணத்தை கைவிடுமாறு மன்மோகன் சிங்கிடம் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இந்திய மத்திய அமைச் சில் அங்கம் வகிக்கும் ஜீ.கே.வாசன் மற்றும் வி.நாராயணசாமி ஆகியோரும் மன் மோகன் சிங் இலங்கைக்கு செல்லக்கூடாது என்று வலியுறுத்தி வருகின்றனர் என்றும் 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' தெரி வித்துள்ளது.

# மங்களவுக்கு பிடியாணை

கொழும்பு, ஒக்.15

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர உள்ளிட்ட 11 பேரை கைதுசெய்யுமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத் தரவு பிறப்பித்துள்ளது. மாத்தறை நீதிவான் ருவன் சிசிரகுமார இந்த உத்தரவை நேற்று பிறப் பித்துள்ளார்.

மாத்தறையில் அண்மையில் இடம் பெற்ற மோதல் சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள 33 பேர் நேற்று அடையாள அணி வகுப்பிற்கு உட்படுத்தப் பட்டனர். கைது செய்யப் பட்டுள்ள 33 சந்தேகநபர்களையும் எதிர் வரும் 21ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதி வான் உத் தரவிட்டுள்ளார்.

# ஐந்து மாணவர்கள் கொலை; சந்தேகநபர்களுக்கு பிணை

திருகோணமலை, ஒக்.15

திருகோணமலையில் 5 மாணவர்களைச் சுட்டுக்கொலை செய்த குற்றச்சாட்டில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த பொலிஸ் விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த 12 பேரும் நேற்று திங்கட்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

குற்றம் சாட்டப்பட்ட 12 பேர் சார்பாகவும் அவர்களின் சட்டத் தரணிகளால் திருகோணமலை மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்யப் பட்டிருந்தது. பிணை மனுவைப் பரிசீலனை செய்த பின்னர் மேல் நீதிமன்ற நீதிபதி அமிலரணராஜா நேற்றுத் திங்கட்கிழமை பிணை அனுமதி வழங்கினார்.

இதன்படி ஒவ்வொரு சந்தேக நபரும் தலா 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா இரண்டு லட்சம் ரூபா பெறு மதியான இரண்டு ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டனர்.

வழக்கு விசாரணை முடியும் வரை சந்தேக நபர்கள் கொழும்பு குற்றப்புலனாய்வுத் தலைமையகத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கையெழுத்திட வேண்டும் என்றும் நீதிமன்றம் நிபந்தனை விதித்தது.

திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி 5 மாணவர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தனர். பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்திருந்த நான்கு மாணவர்களும் மொரட்டுவ பல் கலைக் கழகத்துக்கு அனுமதி பெற்றிருந்த ஒருவருமாக 5 பேருமே சுட்டுக்கொலை செய் யப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (த-5)

# பொதுநலவாய மாநாட்டில் இந்தியாவே பங்கேற்காதே

## வலியுறுத்தி தமிழகமெங்கும் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஒக்.15

இலங்கையில் நடைபெறும் பொது நலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாதென வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டம் நடத்திவரும் தியாகுவின் உயிரைக் காப்போம் எனவும், இலங்கை பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி அனைத்துக் கட்சிகளின் சார்பிலும் தமிழக மெங்கும் ஆர்ப்பாட்டங்கள் நடை பெற்றன.

சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் அருகில் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத் துக்கு, இலங்கையில் பொது நலவாய - எதிர்ப்பியக்கம் சார்பில் வழக்கறிஞர் பாவேந்தன் தலைமையேற்றார். இலங்கையில் பொதுநலவாய - எதிர்ப்பியக்க அமைப்பாளர் தோழர் மதியவன் ஆரம்ப உரை நிகழ்த்தினார். இதேபோல் தஞ்சை, சிதம்பரம், பெண்ணாடம், மதுரை, ஓசூர் உட்பட பல இடங்களில் ஆர்ப் பாட்டம் நடைபெற்றன.(வ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### உறுப்பினர்கள்

கலந்து கொள்ளவில்லை.

9 உறுப்பினர்களும் முள்ளி வாய்க்காலில் நேற்றுத் திங்கட் கிழமை சத்தியப்பிரமாணம் செய்வதென்று முன்னர் தெரி வித்திருந்தனர். இருப்பினும் இறுதி நேரத்தில் மன்னார் ஆயரின் தலையீட்டினால் அது நிறுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து மாகாணசபையின் இரு உறுப்பினர்களான மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மருத்துவர் ஞா.குணசீலன், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த து.ரவிகரன் ஆகியோர் நேற்றுக் கொழும்பில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் முன்னிலையில் அவரது இல்லத்தில் மாலை 4 மணியளவில் பதவிப் பிரமாணம்செய்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கா நாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பதவியேற்பு தொடர்பில் புளொட் அமைப்பின் உயர்பீடம் நேற்றுக் காலை கந்தரோடையில் நடத்திய கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய கட்சியின் செயலாளரும் சமாதான நீதிவானுமாகிய சு.சதானந்தம் முன்னிலையில் புளொட் தலைவரும் மாகாண சபை உறுப்பினருமான த.சித்தாரத்தன் மற்றும் அந்தக் கட்சியின் வவுனியா மாவட்ட உறுப்பினர் ரி.லிங்கநாதன் ஆகியோர் பதவிப் பிரமாணம் செய்தனர்.

### யாழில்

முன்னெடுக்கப்படும் என்றும் மன்னார் பிரஜைகள் குழுவினர் தெரிவித்தனர்.

ஜனாதிபதியினால் நியமிக்கப் பட்டுள்ள காணமற்போனோர் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக் குழுவின் செயற்பாடுகளுக்கு மன்னார் பிரஜைகள் குழு ஒத்துழைப்பு வழங்கத் தீர் மானித்திருந்தது.

இதற்கமைய காணாமற்போனோரின் உறவுகளிடமிருந்து விண்ணப்பங்களைப் பதிவு செய்து ஜனாதிபதி ஆணைக் குழுவுக்குச் சமர்பிக்க மன்னார் பிரஜைகள் குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்காகக் காணாமற்போன உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஒத்துழைப்புடன் மன்னார் பிரஜைகள் குழு இந்த நடவடிக்கையை முன்னெடுக்கிறது.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் பயணம் மேற்கொள்ளும் இந்தக் குழுவினர் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை சகல இடங்களிலும் பதிவு நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

இதற்கமைய காணாமற்போனோரின் உறவுகள் பொலிஸ் பதிவு, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்யப் பட்ட பதிவுகளின் பிரதிகள் உள்ளிட்ட ஆவணங்களைக் கொண்டு வருமாறு கேட்கப்பட் டுள்ளனர்.

நேற்று யாழ்ப்பாணத்தில் முன் னெடுக்கப்பட்ட பதிவு நடவடிக் கைகளின் போது 330 பேர் வரை பதிவுகளை மேற்கொண் டுள்ளனர். நேற்றைய தினம் பதிவு செய்வதற்கு தவறியவர்கள் இன்று திருமதி என்.கமல நாயகி, இல.16, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பதிவு செய்ய முடியும். தொடர்பு கொள்வதாயின் 0212221037 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள் ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை மேய்ப்புப் பணி இல்லம்', பழைய மக்கள் வங்கி முன் பாகக் கிளிநொச்சியிலும் பதிவு இடம்பெறவுள்ளது.

நாளை புதன்கிழமை முல்லைத் தீவு மாவட்டத்தில் கள்ளப்பாடு வடக்கு பொதுநோக்கு மண்டபத்திலும், மாகாணசபை உறுப் பினர் கனகசுந்தரசுவாமியின் இல்லத்திலும் பதிவுகள் இடம் பெறவுள்ளன.

இந்தப் பதிவுகள் தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் மன்னார் பிரஜை கள் குழுவின் செயலர் சிந் தாத்துரை யுடன் 0771139897 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட் டுள்ளது (த -5)

### பயங்கரவாத

தஞ்சம் கோருவதற்கான வாய்ப்பு இருக்கிறது" என்றும் பிரதம நீதியரசர் வழக்கின் போது கருத்துத் தெரிவித்தார்.

வவுனியா சிறைச்சாலையில் கடந்த வருடம் இடம்பெற்ற மோதலின்போதே அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதியான நிமலரூபன் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார் என்று தெரி விக்கப்பட்டது.

அவரது உடலில் 20 இற்கும் மேற்பட்ட காயங்கள் இருந் தமை தொடர்பில் அவரது பெற் றோரின் சார்பில் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்த சட்டத் தரணி சுட்டிக்காட்டினார். நிமலரூபனின் உயிரிழப்புக்கான காரணங்களை வெளிப்படுத் துவதற்கு அரசு தவறியுள்ளது என்றும் அவர் குற்றச்சாட்டு முன்வைத்திருந்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதம நீதியரசர், பயங்கரவாதத்தை ஒடுக்குவது அடிப்படை உரிமை மீறல் ஆகாது என்று குறிப் பிட்டார்.

"இவ்வாறான பயங்கர வாதச் செயற்பாடுகளுக்கு மனித உரிமை மீறல் என்று அர்த்தம் கற்பிக்க வேண்டாம். அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளில் பயங்கரவாதத் தாக்குதல் களை முறியடிக்கும் போது இவ்வாறான உயிரிழப்புக்கள் ஏற்பட்டன' என்றும் அவர் கூறி னார்.

எனவே இந்த வழக்கை [illegible]பதற்கு நியாயமான காரணங்கள் இல்லை என்று கூறிய பிரதம நீதியரசர் உட்பட மூவரடங்கிய நீதியரசர் குழு வழக்கை தள்ளுபடி செய் தது. (த-4)

### சரியான

அங்கு அதிகாரிகள் அமைச்சரிடம் தெரிவித்தவை வருமாறு:

மக்கள் எங்கள் மீது பலகுறைகளைச் சொல்கின்றனர். மக்களின் எதிர்பார்ப்புக்களையும் தேவைகளையும் எம்மால் பூர்த்தி செய்ய முடியாமல் போயிருக்கலாம். இதற்குக் காரணம் சரியான அரசியல் தலைமைத் துவம் இன்மையே.

இந்த அமைச்சின் பல வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளன. அத்துடன் புதிய வெற்றிடங்கள் உருவாக்கப்பட வேண் டியுள்ளன. இவற்றைப் பூர்த்தி செய்கின்ற நிலையில் தான் எம்மால் பூரணமான சேவையை மக்களுக்கு வழங்க முடியும்.

நாங்கள் எல்லோரும் அமைச் சருடன் இணைந்து பணியாற் றத் தயார் என்று கூறினார்கள். (த-5)

### பெப்சி

டியாக அறிவித்தார் ஐங்கர நேசன்.

விவசாயமும், கமநலசேவைகளும், கால் நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், சுற்றாடல் அமைச் சின் பொறுப்புக்களை யாழ். புருடி வீதியிலுள்ள அலுவலகத் தில் பொறுப்பேற்ற பின்னர் அலுவலர்களுடன் கலந்துரை யாடும் போதே அமைச்சர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித் ததாவது:

எனது அமைச்சுக்களுக்கு உட் பட்ட நிகழ்வுகளிலேயோ அல் லது கலந்துரையாடல்களிலோ 'பெப்சி' கொக்கோலா' போன்ற மென்பானங்கள் பயன்படுத்த வேண்டாம். எமது பணம் வெளியிடங்களுக் குச் செல்லும் நிலையை நாமே ஏற்படுத்தக் கூடாது. இயலுமா னவரை இவ்வாறான குளிர்பா னங் களைப் பயன்படுத்துவ தைத் தடுப்பதன் மூலம் எமது பணம் எமக்குள்ளேயே சுழற்சி யுடன் நின்று கொள்ளும்.

உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களின் தயாரிப்பில் உருவான பழ ரசங்களைப் பயன்படுத்த வேண் டும் - என்று கூறினார். (த-5)

### யாழ்.

பாணத்துக்கு மேற்கொண்ட முத லாவது பயணம் இதுவாகும்.

நேற்றுமுன்தினம் யாழ். வந்த அவர் நேற்றுத் தனது பய ணத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பினார்.

வெற்றிலைக்கேணியிலுள்ள 55 ஆவது படைப் பிரிவுக்குப் பயணம் செய்து அங்கு படையினருடன் கலந்துரையாடினார். பின்னர் விடத்தற்பளை இரா ணுவ முகாமுக்கும், நேற்று யாழ்ப்பாணத்திலும் இராணு வத்தினரைச் சந்தித்துக்கலந் துரையாடினார். இதன் பின்னர் நேற்றுப் பிற்பகல் அவர் கொழும்பு திரும்பினார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.15
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க் கிழமை இடம் பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்வருமாறு:-

**பி.ப 3.30மணி**
சுடர்ஒளி விளையாட்டுக்கழகம் எதிர் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம்.

**மாலை4.30மணி**
சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம். (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.15
வவுனியா உதைபந்தாட்ட லீக் பண்டாரவன்னியன் ஞபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்கிழமை வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில மோதவுள்ள அணிகளின் விவரம்.

**மாலை 4மணி**
* மருதநிலா விளையாட்டுக்கழகம் எதிர் யுனிபைட் விளையாட்டுக்கழகம். (த-23)



மொபிட்டல் ஒப் சேவர் பாடசாலை பையன் கிரிக்கெட் விருது வழங்கும் நிகழ்வு கொழும்பு கலதாரி ஹோட்டலில் அண்மையில் இடம் பெற்றது.
இதில் வடக்கு மாகாணத்தில் சிறந்த கிரிக்கெட் அணியாக சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
கௌரவிக்கப்பட்ட சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினர் கல்லூரி அதிபர் ஞான பொன்ராஜா மற்றும் பயிற்றுனருடன். (த-23)

# செட்டிகுளம் ம.வி. அணி வசப்படுத்தியது கிண்ணத்தை

யாழ்ப்பாணம், ஒக்.15
வவுனியா கல்வியயிற் கல்லூரியின் 20 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வவுனியா மாவட்ட பாடசாலைகளின் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் செட்டிகுளம் மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.



நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா கல்வியயிற்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் செட்டிகுளம் மகா வித்தியா லய அணியை எதிர்த்து வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது.
இதில் செட்டிகுளம் மகா வித்தியாலய அணி 1:0என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. முன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் முன்று முறிப்பு அ.த.க பாடசாலை் அணியை எதிர்த்து நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய அணி மோதிக் கொண்டது.
இதில் மூன்று முறிப்பு அ.த.க பாடசாலை அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தனதாக்கி கொண்டது. (த-23)

# வவுனியா சைவப்பிரகாச மகளிர் வலைப்பந்தாட்டத்தில் சம்பியன்




யாழ்ப்பாணம், ஒக்.15
வவுனியா கல்வியற் கல்லூரியின் 20 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வவுனியா மாவட்ட பாடசாலைகளின் 14 வயதுபிரிவு அணிகளுக்கு இடையிலான பெண்களுக்கான வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.
நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா கல்வியற்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் வவுனியா சைவபிரகாச மகளிர்கல்லூரி அணியை எதிர்த்து தண்டிக்களம் பிரமண்டு வித்தியாலய அணி மோதிக்கொண்டது.
இதில் வவுனியா சைவபிரகாச மகளிர்கல்லூரி அணி 4:1 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.
மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் அண்ணாநகர் அ.த.க பாடசாலை அணியை எதிர்த்து வவுனியா இறைம்பைக்குளம் மகளிர்கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இதில் அண்ணாநகா அ.த.க பாடசாலை அணி 8:6என்ற புள்ளிக்கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தனதக்கிக் கொண்டது. (த-23)

# அசத்தியது ஞான முருகன்

யாழ்ப்பாணம், ஒக்.15
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் யாழ் மாவட்டதிலிருத்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.



மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழக அணிக்கும் நவசக்தி விளையாட்டுக் கழகஅணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 2:0என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. (த-23)



பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கும் போட்டியில் 19 வயது பிரிவு ஆண்களுக்கான பளுதூக்கும் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கம் வென்ற அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவன் டுசாந் கடந்த வாரம் கல்லூரி சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.
கௌரவிக்கப்பட்ட டுசாந் கல்லூரி அதிபர், பயிற்றுநர் மற்றும் விருத்தினர்களுடன்...
(த-23)

# கூடைப்பந்தாட்டம் இன்று பிற்பகல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.15
யாழ்.மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபை முன்னாள் மாணவ முதல்வர் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தும் பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு ஆண் பெண் இருபாலாருக்குமான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் இன்று செவ்வாய்க் கிழமை மதியம் யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் ஆரம்பமாகின்றது.

**பி.ப 2.30மணி பெண்கள் பிரிவு**
யாழ்.[illegible] மகளிர்கல்லூரி அணி எதிர் திருக்குடும் பக் கன்னியர்மட அணி.

**பி.ப.3.30 மணி ஆண்கள் பிரிவு**
கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி அணி எதிர் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அணி.

**பி.ப 4.30 மணி ஆண்கள் பிரிவு**
[illegible]கல்லூரி அணி எதிர் யாழ்.இந்துக்கல்லூரி அணி. (த-23)

# சதுரங்கப் போட்டியில் சாதித்த மாணவர்கள்

வலி. வடக்கு. ஒக். 15
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் நவமகாஜனன் சிற்பி தெ.து. ஜயரத்தினத்தின் 100 ஆவது பிறந்த நாளையொட்டி யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான 15, 19 வயதுப் பிரிவினருக்கான சதுரங்கப் போட்டிகள் நேற்று முன்தினம் மகாஜனக் கல்லூரியில் இடம்பெற்றது.
இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**15 வயதுப் பிரிவு**
1 ஆம் இடம்- கே.சஜிந்தன் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி). 2 ஆம் இடம்- கே. ஆரோன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி). 3 ஆம் இடம்- எம்.தேனுஜன் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி)

**19 வயதுப் பிரிவு**
1 ஆம் இடம்- கே.மகிந்தன் (தெல்லிப்பழை மகாஜனக் கல் லூரி). 2 ஆம் இடம்- எம்.பிறை சூடி (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி). 3 ஆம் இடம்- எ.துளசிராம் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி) (த-86)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஐந்தாவது வெற்றியில் செபஸ்ரியன் வெட்டல்

ஜப்பான் சுசூகா திடலில் இடம்பெற்ற ஆண்டின் 15ஆம் சுற்று போர்மியுலா ஒன்று கார் பந்தயத்தில் நடப்பு உலகச் சம்பியன் ரெட்புள் அணியின் செபஸ்ரியன் வெட்டல் இவ்வாண்டில் தொடர்ச்சியான ஐந்தாவது வெற்றியைப் பதிவு செய்தார். முன்னைய போட்டிகளைப் போல அல்லாமல், இந்த போட்டியில் வெட்டலுக்கு சக அணி வீரர் மார்க் வெபர் மற்றும் லோட்டஸ் அணியின் றொமெய்ன் குரோஜோன் ஆகியோர் கடும் சவாலாக அமைந்திருந்தனர்.

போட்டியின் ஆரம்பத்தில் ரெட்புள் அணியின் மார்க் வெபர் முதல் நிலையிலிருந்தும் செபஸ்ரியன் வெட்டல் இரண்டாமிடத்திலிருந்தும் மேர்சடீஸ் அணியின் லூவிஸ் ஹமில்டன் மூன்றாமிடத்திலிருந்தும் ஆரம்பித்திருந்தனர்.

ஆனாலும் முதலாவது சுற்றின் போது, முதல் வ்ளைவில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக லூவிஸ் ஹமில்டனின் காருக்கு சேதம் ஏற்படவே அவரால் போட்டியிலிருந்து இடைவிலக நேரிட்டது.

இதனைத் தொடர்ந்து லோட்டஸ் அணியின் றொமெய்ன் குரோஜோன் முதல் இடத்துக்கு முன்னேறியிருந்தார். ஆனாலும் போட்டியின் நடுவே கார்களின் ரயர்கள் மாற்றும் நிறுத்து கைகளை சாமர்த்தியமாக திட்டமிட்டு மேற் கொண்டிருந்த ரெட்புள் அணியினர் செபஸ் ரியன் வெட்டலுக்கு மற்றுமொரு வெற்றியைப் பெற்றுக்கொள்ள வழிகோலியிருந்தனர்.

இந்தப் போட்டியை தொடர்ந்து ஆண்டின் சம்பியன்சிப் புள்ளி தரப்படுத்தலில் ரெட்புள்ளின் செபஸ்ரியன் வெட்டல் சாரதிகள் வரிசையில் 297 புள்ளிகளுடன் முதல் இடத்திலும் இரண்டாம் இடத்தில் பெராரி அணியின் பெர்னான்டோ அலொன்சோ 207 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும் கிமி ரைக்கனன் மூன்றாமிடத்தில் லோட்டஸ் அணியின் 177 புள்ளிகளுடன் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அணிகள் வரிசையில் ரெட்புள் அணி 445 புள்ளிகளுடன் முதலிடத்திலும், பெர்ராரி அணி 297 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும், மேர்சடீஸ் அணி 287 புள்ளிகளுடன் மூன்றா மிடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.(த)

## இந்தியாவிடமிருந்து கற்றுக்கொள்வதற்கு எதுவுமே இல்லை



முன்னைய காலம் போலல்லாது, இப்போது இந்தியாவிடமிருந்து கிரிக்கெட் தொடர்பாகக் கற்றுக்கொள்வதற்கு எதுவும் கிடையாது என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கும் போதே அர்ஜுன ரணதுங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

தங்களுடைய காலத்தில் தாங்கள் கற்றுக்கொள்ளும்போது இந்தியாவைப் பார்த்து, அதனிடமிருந்து கற்றுக்கொள்வது ஒரு பகுதியாகக் காணப்பட்டதாகக் குறிப்பிட்ட அர்ஜுன ரணதுங்க, ஆனால் இனிமேல் இந்தியாவிடமிருந்து கற்றுக்கொள்ள முடியுமென நினைக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

இளைய வீரர்கள் பலர் மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட போட்டிகளை நிதி நலன்களுக்காக விளையாட விரும்புவது துரதிஷ்டவசமானது எனக் குறிப்பிட்ட அர்ஜுன ரணதுங்க, இந்தியாவால் இனிமேல் சச்சின் டெண்டுல்கரையோ, சுனில் கவாஸ்கரையோ உருவாக்க முடியாது என்பது நிச்சயமானது எனக் குறிப்பிட்டார்.

சிரேஷ்ட வீரர்களான மஹேல ஜெயவர்த்தன, குமார் சங்கக்கார ஓய்வுபெற்ற பின்னர் அதை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாக இலங்கை அணி தயார் நிலையில் இல்லை எனக் குறிப்பிட்ட அவர், ஆனால் தற்போதைய பிரதம தேர்வாளரான சனத் ஜெயசூரிய நீண்ட கால நோக்கில் செயற்படுவதாகக் குறிப்பிட்டார்.

தங்களுடைய அணியின் வீரர்கள் வயதாகிக் கொண்டிருந்தபோது சனத் ஜெயசூரியவை உப தலைவராக்கியதாகவும் மார்வன் அத்தப்பத்து, றசல் ஆர்னல்ட் போன்ற வீரர்களுக்குத் தொடர்ந்து வாய்ப்பு வழங்கப்பட்டிருந்ததாகவும் அர்ஜுன இங்கு குறிப்பிட்டார்.(த)

## இங்கிலாந்து சரே அணியின் பயிற்றுநராக கிரஹம் போர்ட்

இங்கிலாந்து பிராந்திய அணியான சரே அணியின் பயிற்றுவிப்பாளராக இலங்கை அணியின் தற்போதைய பயிற்றுவிப்பாளர் கிரஹம் போர்ட் நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் பெப்ரவரி முதல் அவர் இப்பதவியை வகிக்கவுள்ளார்.

2012ஆம் ஆண்டு ஜனவரியில் இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்ட கிரஹம் போர்ட்டுக்கு இரண்டு வருடங்களுக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

இதன்படி, அவரது ஒப்பந்தம் அடுத்த வருடம் ஜனவரியோடு நிறைவடையவுள்ளது. இந்நிலையில், தனது ஒப்பந்தத்தைநீடித்துக்கொள்ள விரும்பவில்லை என கிரஹம் போர்ட் இலங்கை கிரிக்கெட் சபைக்கு அறிவித்திருந்தர். தனது குடும்பத்தினருக்காக இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் அறிவித்திருந்தார்.

இது குறித்துக் இலங்கை கிரிக்கெட் சபை கிரஹம் போர்ட்டுடன் கலந்துரையாடியதோடு, அவருக்கு மாற்று ஏற்பாடுகளையும் முன்வைத்திருந்தது.

எனினும், இலங்கை கிரிக்கெட் சபையின் மாற்று ஏற்பாடுகள் குறித்து தனது குடும்பத்தினருடன் கிரஹம் போர்ட் கலந்துரையாடியதுடன், ஜனவரியுடன் பதவி விலகுவதை மீண்டும் உறுதிப்படுத்தியிருந்தார். அதன் போது, சரே அணியின் பயிற்றுவிப்புப் பதவிக்காக தான் இலங்கை அணியின் பதவியிலிருந்து விலகவில்லை என அவர் உறுதிபடத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே அவர் சரே அணியின் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த கிரஹம் போர்ட், தான் பதவி விலகிய பின்னரே சரே அணியின் பயிற்றுவிப்பிற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்ததாகவும், எனவே இலங்கை அணியின் பயிற்றுவிப்புப் பதவியிலிருந்து விலகியமைக்கும், சரே அணியின் பயிற்றுவிப்பாளராகப் பதவியேற்கவுள்ளதற்கும் இடையில் தொடர்புகள் கிடையாது எனக் குறிப்பிட்டார். (த)




முதல் 10 பட்டியலில் இந்திய வீரர் புஜாரா தொடர்ந்து 7ஆவது இடத்தில் உள்ளார்.பந்து வீச்சாளர்களுக்கான பட்டியலில் ஸ்ரெய்ன், பிலாண்டர் (தென்னாபிரிக்கா), ஹேரத் (இலங்கை) ஆகியோர் முறையே முதல் 3 இடங்களைப் பிடித்தனர்.

## சர்வதேச தரவரிசைப் பட்டியலில் தென்னாபிரிக்க வீரர்கள் ஆதிக்கம்

சர்வதேச கிரிக்கெட் சபை டெஸ்ட் போட்டிகளுக்கான வீரர்களின் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. இந்த பட்டியலில் ஹசிம் அம்லா(தென்னாபிரிக்கா), சந்தர்பால் (மேற்கிந்திய தீவுகள்), டிவில்லியர்ஸ்(தென்னாபிரிக்கா) ஆகியோர் முறையே முதல் மூன்று இடங்களில் உள்ளனர்.

முதல் 10 பட்டியலில் இந்திய வீரர் புஜாரா தொடர்ந்து 7ஆவது இடத்தில் உள்ளார்.பந்து வீச்சாளர்களுக்கான பட்டியலில் ஸ்ரெய்ன், பிலாண்டர்(தென்னாபிரிக்கா), ஹேரத் (இலங்கை) ஆகியோர் முறையே முதல் 3 இடங்களைப் பிடித்தனர்.இந்திய வீரர் அஸ்வின் 757 புள்ளிகள் பெற்று 8ஆவது இடத்திலும், ஒஜா 13ஆவது இடத்திலும், சகீர்கான் 16ஆவது இடத்திலும் உள்ளனர். (த)



## சம்பியன்ஸ் கிண்ணத் தோல்வி இங்கிலாந்துக்கு வருத்தமளிக்கிறது

சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளின் இறுதிப் போட்டியில் வெற்றிபெற்றிருக்க வேண்டுமென இங்கிலாந்து அணியின் தலைவர் அலஸ்ரெயர் குக் தெரிவித்துள்ளார்.

அந்தத் தோல்வி அதிகளவு கவலையை ஏற்படுத்தியதாக அவர் குறிப்பிட்டார்.

இங்கிலாந்து அணிக்கு வெற்றிகரமான ஆண்டாக இவ்வாண்டு அமைந்த போதிலும், அவ்வணி சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளின் இறுதிப் போட்டியில் இந்திய அணியிடம் தோல்வியடைந்திருந்தது.

மழை காரணமாக 20 ஓவர்கள் கொண்ட போட்டியாக அமைந்த இப்போட்டியில் இந்திய அணி பெற்றுக் கொண்ட 129 ஓட்டங்களுக்குப் பதிலளித்த இங்கிலாந்து அணி, இறுதி 16 பந்துகளில் 6 விக்கெட்டுக்கள் கைவசமிருக்க 20 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டியிருக்க, அந்த நிலையிலிருந்து தோல்வியடைந்திருந்தது.

இது தொடர்பாக தற்போது கருத்துத் தெரிவித்துள்ள அலஸ்ரெயர் குக், அந்தப் போட்டியை வென்றிருக்க வேண்டுமெனவும், 130 என்ற இலக்கை தாங்கள் அடைந்திருக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின் டெண்டுல்கரின் ஓய்வு தென்னாபிரிக்கர்கள் ஏமாற்றம்




இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் ஓய்வு பெறுவது தங்களுக்கு ஏமாற்றத்தை அளிப்பதாக தென்னாபிரிக்க ரசிகர்கள் தெரிவித்துள்ளனர்.

200 ஆவது டெஸ்டுடன் ஓய்வு பெறவதாகச் சச்சின் அறிவித்து விட்டார். இதனால் தென்னாபிரிக்க ரசிகர்கள் மிகுந்த ஏமாற்றத்தில் இருக்கிறார்கள்.

இது குறித்து தென்னாபிரிக்காவிலுள்ள டர்பன் நகரைச் சேர்ந்த சச்சின் ரசிகர் அனில் ஹர்கோவன் கூறுகையில், சச்சின் ஓய்வு முடிவால் நாங்கள் மிகவும் ஏமாற்றமடைந்துள்ளோம்.

தென்னாபிரிக்காவுடன் அவர் டெஸ்ட் விளையாடும்போது நாங்கள் அவரது ஆட்டத்தைப் பார்க்க ஆவலாக இருந்தோம். ஆனால் அது நடைபெறாது எனத் தெரிந்ததால் ஏமாற்றமடைந்துள்ளோம். சச்சினுக்கு தென்னாபிரிக்காவில் ஆயிரக் கணக்கான ரசிகர்கள் இருக்கின்றனர். எங்கள் குடும்பத்தில் 11 பேர் இருக்கிறோம்.

இந்திய அணி டர்பனிலிலுள்ள கிங்ஸ்மீட் மைதானத்தில் விளையாடும் போதெல்லாம் ஒரு போட்டியைக் கூட நாங்கள் தவறவிட்டதில்லை. இந்திய அணியை ஆதரித்து மைதானத்தில் உற்சாகக் குரல் எழுப்புவோம். மற்ற அணிகளுடன் தென்னாபிரிக்க அணி விளையாடும்போது, தென்னாபிரிக்க அணி வீரர்களை உற்சாகமூட்டுவோம்.

என்னுடைய 2 மகன்களும் சச்சினின் தீவிர ரசிகர்கள். இந்திய அணி வெளிநாடுகளில் விளையாடும்போது விமானத்தில் சென்று அந்த போட்டிகளைப் பார்த்து ரசிப்பர் என்று தெரிவித்துள்ளார்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மற்றொரு ரசிகர் கார்த்திகேசன் நாயுடு, சச்சினின் ஆட்டத்தைக் காண நாங்கள் மும்பை செல்லவுள்ளோம். அனில் ஹர்கோவன் உள்பட 5 பேர் மும்பை செல்கிறோம். இதற்காக ரிக்கெட் கிடைக்குமா என எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். போட்டிக்கான ரிக்கெட் கிடைத்ததும் நாங்கள் கண்டிப்பாக மும்பை செல்வோம் என்று தெரிவித்துள்ளார். (த)

# ஷங்காய் சம்பியன் பட்டத்தை மீண்டும் வென்றார் ஜோகோவிச்

ஷங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவில் சேர்பியாவின் நோவக் ஜோகோவிச் மீண்டும் சம்பியன் பட்டம் வென்றார்.

சீனாவில் உள்ள ஷங்காய் நகரில் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடர் நடைபெற்றது. இதன் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில், செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஆர்ஜென்ரீனாவின் ஜுயன் மார்டின் டெல் போட்ரோவுடன் மோதினர்.

இரண்டாவது சுற்றில் சற்றுத் தடுமாறிய ஜோகோவிச் 6-1, 3-6, 7-6 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று தொடர்ந்து இரண்டாவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். (த)



# எதுவுமே சரியில்லை

இந்திய அணியில் துடுப்பாட்டம், பந்துவீச்சு என எதுவுமே சரியில்லை எனப் புலம்பிக் கொண்டிருக்கிறார் அணித்தலைவர் டோனி.

இந்தியா வந்துள்ள ஆஸ்திரேலிய அணி ஏழு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்று வருகிறது.

புனேயில் நடந்த முதல் போட்டியில், இந்திய அணி 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இது குறித்து இந்திய அணியின் அணித்தலைவர் டோனி கூறுகையில், புனே ஆடுகளம் 300 ஓட்டங்களுக்கு மேல் எடுக்கும் அளவுக்கு இல்லை.

நாங்கள் தான் ஆஸ்திரேலியத் துடுப்பாட்ட வீரர்களை அதிக ஓட்டங்கள் எடுக்க விட்டுவிட்டோம். இடையில் எங்களது சுழற்பந்து வீச்சா ளர் சிறப்பாகச் செயல்பட்டு மீண்டு வர முயற்சித்தனர். ஜடேஜா, யுவராஜ் சிங் நன்கு பந்துவீசியும், அவர்களுக்கு நெருக்கடி கொடுக்க முடியவில்லை.

துடுப்பாட்டத்தைப் பொறுத்த வரையில் ரோகித் சர்மா, விராட் கோஹ்லி இணைந்து நல்ல தொடக்கம் கொடுத்தனர்.

ஆனால் நடுவரிசையில் வந்த வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றம் தந்தனர்.

மற்றபடி தோல்விக்கு யாரையும் குறிப்பாகக் குற்றம் சொல்ல விரும்பவில்லை. துடுப்பாட்டம்- பந்துவீச்சு என எதுவுமே சரியாக அமையவில்லை.

அதேநேரம் 'சோட் பிச்' பந்துகளில் பலவீனம் எல்லாம் கிடையாது. சமீபத்திய சாம்பியன்ஸ் டிராபி, மேற்கிந்திய தீவுகள் மண்ணில் இவ்வகை பந்துவீச்சை சிறப்பாக எதிர்கொண்டோம்.

அடுத்து வரும் போட்டிகளில் இதுபோன்ற தவறு நடக்காத வகையில் பார்த்துக் கொள்வோம் என்று தெரிவித்துள்ளார். (த)

# தென் கொரியாவை வீழ்த்தியது பிரேசில்



தென்கொரியா அணிக்கெதிரான நட்பு உதைபந்தாட்டப் போட்டியில் பிரேசில் அணி வெற்றி பெற்றது.

தென் கொரியா சென்ற பிரேசில் அணி நட்பு உதைபந்தாட்டப் போட்டியில் பங்கேற்றது. சியோலில் நடந்த இந்தப் போட்டியின் முதல் பாதியின் 44ஆவது நிமிடத்தில் பிரேசில் அணி யின் நெய்மர் ஒரு கோல் அடித்தார்.

தொடர்ந்து அசத்திய பிரேசில் அணிக்கு ஒஸ்கர் 49ஆவது நிமிட்த்தில் ஒரு கோல் அடித்து கை கொடுத்தார். இதற்கு, எதிரணியால் பதிலடி தர முடியவில்லை. முடிவில், பிரேசில் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(த)

வெளிவந்து விட்டது
தீபாவளி வாழ்த்து மடல்கள் வெளிவந்து விட்டன.
★ போஸ்காட் - சிறிது - பெரிது
★ மடிப்புக்காட் - சிறிது - பெரிது
★ கட்டிங்காட் -
பூக்கள், சுவாமி, சினிமா உட்பட அனைத்தும் 2013 ஆம் ஆண்டு புது டிசைன்கள்-
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம் T.P:- 021 222 9881

Online Shopping
தீபாவளி திருநாளை முன்னிட்டு கையளிப்பு நாட்கள் 14இல் இருந்து 10 ஆக குறைக்கப்பட்டுள்ளது.
இன்னும் 8நாட்கள் மட்டுமே
தீபாவளி ஆடைகளை 22/10/2013 இரவு 12.30 க்கு முன் பதிவு செய்ய மறவாதீர்கள்
ஐப்பசி வெற்றியாளர்:- F. நிரேக்கா (தெகிவளை, கொழும்பு)
தொடர்புகளுக்கு: [illegible] 077 1516013

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர், தொழில் புரிவோர், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
"ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் இப்பயிற்சியில் இணைந்து சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 19.10.2013 சனிக்கிழமை
1. காலை 8.00 - 10.00
2. காலை 10.00 - 12.00
3. மாலை 1.00 - 03.00
4. மாலை 3.00 - 05.00
வார நாள் பிரிவுகள் ஆரம்பம் 17.10.2013 வியாழன்
1. காலை 9.00 - 11.00
2. காலை 11.00 - 01.00
குறிப்பு -3 மாதங்களில் ஆங்கிலம் சரளமாக பேசமுடியாதவிடின் முழுப்பணமும் மீள வழங்குவதற்கான உத்தரவாதம்.
SAAMSON Language School
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

ANANDA HOMES AND CONSTRUCTIONS - சாவகச்சேரி
உங்கள் இல்லத்தைத் தரமாக அமைத்துத் தர
1. சாதாரண வீடு 18 லட்சத்திலிருந்து (3அறை, ஹோல், குசினி உட்பட)
2. மாடி வீடு- 35 லட்சத்திலிருந்து (4அறை, ஹோல், குசினி உட்பட)
3. நவீன இணைந்த குளியலறை - 2 லட்சத்திலிருந்து
4. நவீன குசினி அமைப்பு Morden Kitchen (Pantry System)
5. பழைய வீடு புனரமைப்பு செய்தல்
குறிப்பு: 1. உயர்தர தொழில்நுட்ப முறைகள் மூலம் அமைக்கப்படும்
(38421)(10,6,7) 2. வங்கிக்கடன் ஒழுங்கு செய்து தரப்படும்
அழையுங்கள்: ஆனந்தன் 021 320 5939, 0786155929

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org